2 YEARS ANNIVERSARY

பேராதரவை வழங்கும் 'தமிழன்' வாசகர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு நன்றி...

இரண்டாவது ஆண்டு நிறைவை கொண்டாடுகிறது

Celebrating two year of bringing you the news

# தமிழன்

THAMILAN


தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 01 சுபகிருது வருடம், ஆனி மாதம் 08ஆம் திகதி புதன்கிழமை (22.06.2022) ஹிஜ்ரி - 1443, ஜுல்ஹஃதா - 21, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

# கர்ம வினைகளால் நாட்டில் சீரழிவு!

## நாடாளுமன்றத்தில் சிறிதரன் எம்.பி. காரசாரம்



•யோ.தர்மராஜ்

"போராட்டத்தில் ஈடுபடும் சிங்கள இளைஞர்களை உங்களுடைய பிள்ளைகளாகவும் உங்களுடைய நாட்டு இளைஞர்களாகவும் பார்க்கின்றீர்கள். ஆனால், வடக்கு, கிழக்கில் இராணுவத்தைக்கொண்டு தாக்குகின்றீர்கள். பாவங்கள் செய்தால் நரகத்தில் என்ன தண்டனை கிடைக்கும் என பௌத்த மதமே கூறியுள்ள போதிலும் அவை தெரிந்துமா சிங்களத் தலைவர்களும் பௌத்த பிக்குகளும் ஓர் இனத்துக்கு எதிராக அநியாயம் செய்கின்றீர்கள். நீங்கள் தற்போது செய்யும் கர்ம வினைகள் இந்த நாட்டை நிம்மதியாக வாழவிடாது. நாடு சீரழிவின் பாதையிலுள்ளது" - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் சபையில் நேற்று தெரிவித்தார். 02 பக்கம்

## எரிபொருள் விநியோகத்திற்கு புதிய திட்டம் தயார் நிலையில்

### அமைச்சர் பந்துல அறிவிப்பு



•யோ.தர்மராஜ்

வாகனத்தின் இலக்கத் தகட்டிலுள்ள இறுதி இலக்கத்திற்கமைய எரிபொருளை விநியோகிப்பதற்கான திட்டமும் வெள்ளிக்கிழமையில் அரச அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் எரிபொருளை விநியோகிப்பதற்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார். 02 பக்கம்

## கைதுசெய்வதை தடுக்கக்கோரும் ஜோன்ஸ்டனின் மனு நிராகரிப்பு

தம்மை கைதுசெய்வதை தடுக்குமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தாக்கல் செய்த எழுத்தாணை மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

இந்த எழுத்தாணை மனுவை தாக்கல்செய்த போது நீதவான் நீதிமன்றத்தால் எவ்வித பிடியாணை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மனுதாரரினால் அலரி மாளிகையில் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படும் கருத்து தொடர்பில் தீர்மானத்தை எடுப்பதற்கான சரியான நபர் நீதவான் எனவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது. 02 பக்கம்

## நெல், அரிசியை சேமிக்க வேண்டாம்; யாருக்கும் பயன்படாமல் போகலாம்

### அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



•யோ.தர்மராஜ்

நாட்டில் தற்போது நெல் விளைச்சல் அதிகரித்துள்ளதால் தற்போது யாரும் நெல் அல்லது அரிசியை சேமித்து வைத்திருந்தால் அவற்றை பூச்சிகள் சேதமாக்கிவிடும். எனவே, தற்போது அவற்றை உண்டு முடியுங்கள். 02 பக்கம்

## தம்மிக்கவுக்கு எதிரான மனுக்கள் நிராகரிப்பு

பிரபல வர்த்தகரான தம்மிக்க பெரேரா நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப்பிரமாணம் செய்வதை தடுத்து உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட 05 அடிப்படை உரிமை மனுக்களையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக தம்மிக்க பெரேராவின் பெயர் தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டது.

இந்நிலையில், அவர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப்பிரமாணம் செய்வதை தடுத்து உத்தரவிடுமாறு கோரி 05 அடிப்படை உரிமை மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. 02 பக்கம்

## நாடாளுமன்றத்தால் ஆவதொன்றுமில்லை; வெளிநடப்பு செய்தன எதிர்க்கட்சிகள்!







### சபையில் சஜித், மனோ, அநுரகுமார அரசு மீது கடும் விமர்சனம்

07 பக்கம்

## உஷ்



எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயுவை நாட்டுக்குள் கொண்டுவர புதிய முதலீடுகள் என்ற போர்வையில் பொதுஜன பெரமுனவின் இளம் எம்.பிக்கள் சிலர் முயற்சிகளை எடுத்துள்ளனராம்.


இதனால் பழைய விநியோகஸ்தர்களை வெட்டும் படலம் ஒரு பக்கம் அரங்கேறுகிறதாம்.

நாட்டு மக்கள் இவற்றைப் பெறுவதற்கு பாடுபட்டுக்கொண்டிருக்கும்போது அதற்குள் இப்படியொரு வியாபாரம் நடப்பது ஆளுங்கட்சிக்குள் புகைச்சலை ஏற்படுத்தியுள்ளதாக தகவல்.

## அமெரிக்காவிடமிருந்து இலங்கைக்கு 5.75 மில்லியன் டொலர் மேலதிக உதவி

02 பக்கம்

## 21ஆவது திருத்தத்தின் சில சரத்துகள் அரசியலமைப்புக்கு முரண்



### உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை வெளியிட்டார் சபாநாயகர்

07 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

பொறுமைக்கும் எல்லையுண்டு என்று சிங்கள மக்களும் உங்களுக்கு கெதியில சொல்லுவாங்கள் சரத் ஐயா..



தமிழன் தமிழன்

2022, ஜூன் 22ஆம் திகதி, புதன்கிழமை

## முன்செல்வான் 'தமிழன்'!

'தமிழன்', இலங்கையில் மிகக் குறுகிய காலத்தில் மக்களின் அபிமானத்தையும் நம்பிக்கையையும் வென்றெடுத்த பத்திரிகையாக மாறி, இன்று மூன்றாம் ஆண்டு அகவையில் காலடி எடுத்துவைக்கிறது.

ஊடகத்துறை மிகச் சவாலானது. அதிலும் இதழியல் என்பது சவால்களின் ஒட்டுமொத்த வேட்கை. இதழியல் ஒரு போர். மக்கள் மத்தியிலிருந்து மக்களின் ஜனநாயக வெற்றிக்காக இரத்தம் சிந்தாமல், உயிர்ப்பலி எடுக்காமல் நீதிக்கும் நியாயத்துக்குமாக நடத்தப்படுகின்ற யுத்தம்.

இந்த யுத்தத்தில் பேனை எனும் ஆயுதத்தை ஏந்தி நெஞ்சை நிமிர்த்தி சவால்களை தாண்டிச் செல்வதென்பது எத்தனை சிரமம் என்பதை எம் வாசகர்கள் நன்கறிவார்கள்.

'தமிழன்' எனும் பத்திரிகைக் குழந்தைக்கு ஈராண்டுகள் மாத்திரமே பூர்த்தியாகியிருக்கின்றன. மக்கள் நலனுக்காக, தேசத்தின் எதிர்காலத்துக்காக ஜனநாயகப் போரில் தன்னையும் இணைத்துக்கொண்டுள்ளது இந்தக் குழந்தை.

இதழியலில் பாரம்பரிய முறைமைகளைத் தாண்டி புதிய மாற்றத்தை தமிழ் பேசும் மக்கள் விரும்புகின்ற காலகட்டத்தில் அந்த விருப்பத்தை நிறைவேற்றும் வகையிலும் ஜனநாயகத்தின் நான்காவது தூணை மேலும் பலமாக்கும் வகையிலும் இதே நாளில் 2020ஆம் ஆண்டு 'தமிழன்' உதயமானான்.

பத்திரிகைத்துறையில் மக்கள் மாற்றங்களை விரும்பினார்கள். அந்த மாற்றங்களை கற்றோரின் ஆலோசனைகளுடன் செயற்படுத்த நாம் திட்டமிட்டோம். ஊடக விழுமியங்களைப் பேணி, செய்திகளில் புனைவில்லாமல், உள்ளதை உள்ளபடி சொல்லவேண்டும் என்பதை அரணாகக்கொண்டு நடைமுறைப்படுத்த விழைந்தோம். இப்போது அந்த நோக்கத்தில் நாம் வெற்றிகண்டுள்ளோம்.

மிகக் குறுகிய காலத்தில் தமிழ் பேசும் மக்கள் எமக்கு அளித்துள்ள பேராதரவு இதற்குச் சான்று.

போட்டித்தன்மை மிக்க ஊடகவெளியில் இந்தக் குழந்தையும் சவால்மிக்கதாக மாறியிருக்கிறது. வாசகர்களின் நாடித்துடிப்பை அறிந்து செய்தியை, அதன் விழுமியம் மாறாமல் இப்படியும் சொல்லலாம் என்பதில் மக்கள் மனதை வென்றிருக்கிறோம் என்று சொன்னால் சாலப்பொருத்தமானதாக இருக்கும்.

'தமிழன்' என்ற பெயரில் இனவாதம் இருப்பதாக ஆரம்பகாலங்களில் சூழ்ச்சியாளர்கள் வதந்திகளைப் பரப்பினார்கள். ஆனால், 'தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்' என்பதை வாசகர்கள் மனதில் பசுமரத்தாணிபோல் மிக இறுக்கமாகச் சொல்லிக் காட்டியிருக்கிறான் 'தமிழன்'. 02 பக்கம்

## ரணிலை பிரதமராக்கியது யார்? ஜனாதிபதியை சந்தித்தவர் எவர்?

### சபையில் நேற்று வாய்த்தர்க்கம்

•யோ.தர்மராஜ்

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக்கியது யார்? என்ற விடயம் தொடர்பில் நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. 02 பக்கம்

## 200 வருடங்கள் காப்பாற்றிய மக்கள் இன்று பட்டினியில்

### மலையக மக்களின் நிலைமை குறித்து சுரேஷ் சபையில் கவலை

•யோ.தர்மராஜ்

200 வருடங்களாக நாட்டிற்கு அந்நிய செலாவணி ஈட்டித்தந்து, சிலோன் டீ என்ற பெருமைக்கு சொந்தக்காரர்களாக இருக்கும் பெருந்தோட்ட மலையக மக்களே இன்று பட்டினியினாலும் பஞ்சத்தினாலும் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்துக்கொண்டிருக்கின்றபோது, நாடாளுமன்றத்தில் அமர்ந்துகொண்டு பணத்தையும் நேரத்தையும் விரயம் செய்துகொண்டிருக்கின்றோம் எனக் கூறி பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் சபை அமர்விலிருந்து வெளிநடப்பு செய்தார். 07 பக்கம்

## பொறுமைக்கும் எல்லையுண்டு; தமிழர்களை எச்சரித்தார் சரத்

•யோ.தர்மராஜ்

"எமது நாடு பௌத்த நாடாக இருந்தாலும் தமிழ் அரசியல்வாதிகள் பௌத்த மதத்திற்கு உரிய மரியாதை கொடுப்பதில்லை. சிங்களவர்களின் பொறுமைக்கும் எல்லையுண்டு" - என பொதுமக்கள் பாதுகாப்பு முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர எச்சரித்துள்ளார். 02 பக்கம்

FUN BLASTER இடமிருந்து

மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்

Facebook WhatsApp மற்றும் YouTube

உடன் மேலதிக டேட்டா*



ரூ.360/- மட்டுமே

மேலதிக வரிகள் இல்லை

செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்

* 1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது

TRC/D/PRO/20/10

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது

4G SIM அட்டையுடன் 4G Smartphone அவசியமாகும்

Dialog

எதிர்காலம் இன்றே.

## கைது செய்வதை தடுக்கக்கோரும்...

2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் 09ஆம் திகதி இரவு 08 மணிக்கு முன்னர் நீதவான் முன்னிலையில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் அவருக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவிற்கு அமைய, மனுதாரர் செயற்பட்டுள்ளதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்தது. எனினும், அன்றைய தினம் மனுதாரர் சுயமாக நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை எனவும், நீதிமன்ற உத்தரவின் பேரிலேயே அச்செயற்பாடு இடம்பெற்றதாகவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

இதனால் சட்டரீதியாக நீதவான் நீதிமன்றத்தால் இந்த வழக்கு தொடர்பில் புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டு உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைய, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கடந்த 09ஆம் திகதி மாலை கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகேவின் வீட்டிற்கு சென்று ஆஜராகினார். இதன்போது, 10மில்லியன் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல நீதவான் உத்தரவிட்டதுடன், வெளிநாட்டு பயணத் தடையும் விதித்தார். குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் திகதியில் வாக்குமூலம் வழங்க வேண்டும் என இதன்போது நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

## தம்மிக்கவுக்கு எதிரான...

அடிப்படை உரிமை மனு தொடர்பான தீர்ப்பு கிடைக்கும் வரை, நாடாளுமன்ற உறுப்பினராகவோ, அமைச்சராகவோ தாம் பதவிப்பிரமாணம் செய்துகொள்ளப்போவதில்லை என வர்த்தகரான தம்மிக்க பெரேரா சார்பில் அவரது சட்டத்தரணிகள் உயர் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவிடமிருந்து...

இலங்கைக்கு 5.75 மில்லியன் டொலர் மேலதிக நிதியுதவியை வழங்குவதாக அமெரிக்கா நேற்று அறிவித்துள்ளது. இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் உடனடித் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில், இந்த நிதியுதவி வழங்கப்படுவதாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது. இந்த நிதி, சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தினால் நன்கொடையாக வழங்கப்படுவதாக தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த மனிதாபிமான நிதியுதவியானது குறுகிய கால வேலைவாய்ப்பை வழங்குவதற்கும் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் விதைகள் உள்ளிட்ட விவசாய விநியோகத்தை நேரடியாக வழங்குவதற்கும் உதவுமென கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் கூறியுள்ளது. இலங்கை மக்களின் உடனடி மற்றும் நீண்டகால தேவைகளை பூர்த்தி செய்வதற்கு உதவுவதற்காக, எதிர்வரும் மாதங்களில் இலங்கையில் முதலீடு மற்றும் உதவித் திட்டங்களை ஆரம்பிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக தூதரகம் அறிவித்துள்ளது.

அமெரிக்க மக்களின் 02 பில்லியன் டொலர் வெளிநாட்டு உதவியானது இலங்கையின் சுற்றுலா, சிறு தொழில்கள், புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தி மற்றும் சிவில் சமூகத்தை வலுப்படுத்தல் உள்ளிட்டவற்றுக்கு ஏதுவாக அமையுமெனவும் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

## எரிபொருள் விநியோகத்திற்கு...

இலங்கையிலுள்ள மாணிக்கம், இல்மனைட், டைட்டேனியம் உள்ளிட்ட கனிய வளங்களை ஏற்றுமதி செய்து கடந்த வருடத்தில் 44 மில்லியன் டொலரே கிடைத்தது. ஆனால், ஒரு எரிபொருள் கப்பலை கொள்வனவு செய்வதற்கு 52மில்லியன் டொலர்கள் தேவையாகும். எனவே, இலங்கையிலுள்ள கனிய வளங்களை ஏற்றுமதி செய்தாலும் ஒரு எரிபொருள் கப்பலைக்கூட பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (21) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது, எரிபொருள் நெருக்கடி தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் எரிபொருள் விநியோகத்தின் போது முக்கியத்துறையின் அடிப்படையில் எரிபொருளை வழங்குவதற்கு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன்படி, இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்கள், தனியார் பஸ்கள், சுற்றுலாத்துறை பஸ்கள், அம்பியூலன்ஸ், பாடசாலை வேன்கள் மற்றும் புகையிரதம் போன்றவற்றுக்கு இலங்கை போக்குவரத்து சபையின் ஊடாகவே டீசல் விநியோகிக்கப்படுகின்றது. இதற்காக இலங்கை போக்குவரத்து சபைக்கு அதிக டீசலை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வாகனத்தின் இலக்கத்தகட்டிலுள்ள இறுதி இலக்கத்திற்கு அமைய எரிபொருளை விநியோகிப்பதற்கான திட்டத்தையும் வெள்ளிக்கிழமையில் அரச அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் எரிபொருளை விநியோகிப்பதற்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போதைய நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதோடு, எதிர்காலத்தில் இந்த நிலைமையை சீர்செய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றதாகவும் தெளிவுபடுத்தினார்.

இதேவேளை, வேலை நிமித்தம் வெளிநாடுகளிலுள்ள 02 இலட்சத்துக்கு அதிகமான இலங்கையர்களின் வீடுகளிலும் கார், முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு வங்கியில் இடும் டொலர்களுக்கு அமைய எரிபொருளை விநியோகிப்பதற்கு நாங்கள் யோசனை முன்வைத்துள்ளோம்.

அவ்வாறு வழங்கினால், நாட்டுக்கு டொலரும் கிடைப்பதோடு, அவர்களுக்கும் இலகுவான முறையில் எரிபொருளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை, வரிசையில் இருக்கும் மக்கள் பொறுமையாக செயற்படுமாறும் கேட்டுக்கொள்கின்றோம். எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கான நிதிப் பிரச்சினையை இலகுவாக கருத வேண்டாம். மாணிக்கம், இல்மனைட், டைட்டேனியம் உள்ளிட்ட கனிய வளங்களை ஏற்றுமதி செய்து கடந்த வருடத்தில் 44மில்லியன் டொலரே கிடைத்தது.

ஆனால், ஒரு எரிபொருள் கப்பலை கொள்வனவு செய்வதற்கு 52மில்லியன் டொலர்கள் தேவையாகும். எனவே, இலங்கையிலுள்ள கனிய வளங்களை ஏற்றுமதி செய்தாலும் ஒரு எரிபொருள் கப்பலைக்கூட பெற்றுக்கொள்ள முடியாதளவு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

முரண்பாடுகள் அல்லது கலவரத்தை கட்டுப்படுத்தாமல் மீண்டும் 80ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு நாடு செல்லும். எனவே மக்கள் பொறுமையாக செயற்பட வேண்டும் - என்றார்.

## பொறுமைக்கும் எல்லையுண்டு;...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (21) சபை அமர்வில் கலந்துகொண்டபோது, குருந்தூர் மலை விவகாரம் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் மேலும் உரையாற்றிய அவர்,

அரசியலமைப்பின் 9ஆவது உறுப்புரையில், பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். பௌத்த மதத்தை பாதுகாத்து, அவற்றை பலப்படுத்துவதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோன்று, ஏனைய மதத்தினரின் உரிமைகளுக்கும் நாங்கள் முன்னுரிமை வழங்கியுள்ளோம். எங்களுடைய நாடு பௌத்த நாடாக இருந்தாலும், இலங்கையில் எந்தளவு இந்து கோவில்கள், முஸ்லிம் பள்ளிகள், கிறிஸ்தவ தேவாலயங்கள் இருக்கின்றன.

நாங்கள் இவ்வாறு செய்தாலும் வடக்கிலுள்ள சில பிரிவினைவாத அரசியல்வாதிகள் வடக்கில் பௌத்தத்திற்கு கௌரவத்தை வழங்குவதில்லை. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வடக்கிலுள்ள பிரதான உறுப்பினர் ஒருவர், நாகவிஹாரையில் புத்த பெருமான் சிலையை நிறுவுவதற்கும் எதிர்ப்பை வெளியிட்டார். இதேபோன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர், முல்லைத்தீவு குருந்தூர் மலையில் புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்வதற்கு எதிர்ப்பு வெளியிட்டனர். பௌத்த நாட்டில் பௌத்த மதத்தை பலப்படுத்த இடமளிக்காததை தாம் கண்டிக்கின்றேன். சிங்களவர்களின் பொறுமைகளை சாதாரணமாக எடுக்க வேண்டாம். சிங்கள மக்களின் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு. அதனை கேலிக்குட்படுத்த வேண்டாம் - என்றார்.

## நெல், அரிசியை சேமிக்க வேண்டாம்:...

இல்லையேல் அவை இறுதியில் யாருக்கும் பயன்படாது, குப்பைக்குச்செல்லும் என விவசாய அமைச்சரும் அமைச்சரவை இணை பேச்சாளருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (21) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் விளைச்சல் குறைவால் ஏற்படும் பாதிப்பை எடுத்துரைத்தபோது அதன் பொறுப்பை விவசாயிகள் ஏற்றுக்கொண்டனர். இன்று 04இலட்சத்து 75ஆயிரத்துக்கு அதிக ஹெக்டேயர்கள் வயல் நிலங்களில் விளைச்சல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு தேவையான, எரிபொருளை வழங்குவதற்கு உரிய திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தேவையான உரத்தை கொண்டுவருவதற்கு பூரண ஆதரவும் கிடைத்துள்ளது.

அதன்படி, இந்தியா ஊடாக ஓமானிலிருந்து 65ஆயிரம் மெட்ரிக் தொன் உரத்தை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். அதற்கான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளன. அதன்படி, குறித்த உரத் தொகை எதிர்வரும் 6ஆம் திகதி நாட்டுக்கு வருகைதரும். பின்னர் 15ஆம் திகதி விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

இதனால், ஏற்படவிருக்கும் பாரிய உணவு தட்டுப்பாடிலிருந்து சற்றேனும் மீள்வதற்கு முடிந்துள்ளது. இதன் பாதிப்பை குறைக்கவும் முடிந்தது.

எனவே, தற்போது யாரும் தேவையற்ற விதத்தில் அரிசி மற்றும் நெல்லை சேமித்து வைக்க வேண்டிய தேவையில்லை. வடக்கு, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பகுதிகளிலிருந்து நெல் விளைச்சல் வர ஆரம்பித்துள்ளதால் நெல் விலையும் குறைந்துள்ளது. இதேபோன்று, மேலும் பல மாவட்டங்களிலிருந்தும் நெல் விளைச்சல் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளதால் யாரும் தேவையற்ற விதத்தில் சேமித்து வைக்க வேண்டாம்.

தற்போது யாரும் நெல் அல்லது அரிசிகளை சேமித்து வைத்திருந்தால் அவற்றை பூச்சிகள் சேதமாக்கிவிடும். எனவே, தற்போதே அவற்றை உண்டு முடியுங்கள். இல்லையேல் அவை இறுதியில் யாருக்கும் பயன்படாது, குப்பைக்குச்செல்லும். யாருக்கேனும் நெல் தேவை எனில் இனி குறைவான விலையில் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார்.

## முன்செல்வான் 'தமிழன்'!...

சிங்களத்தேசத்தின் அபிலாஷைகளை நிறைவேற்ற தோற்றம்பெற்றதாக ஒருசிலர் ஆரூடம் கூறினார்கள். பண முதலைகளின் கைக்கூலி எனச் சொன்னார்கள். இப்படி அத்தனை குற்றச்சாட்டுகளுக்கும் நியாயமான செய்தி என்ற தொழில் தர்மத்தினூடாக பதிலடி கொடுத்திருக்கிறோம். இனவாதம், பிரதேசவாதம், மதவாதம் என்பவற்றை புறந்தள்ளி தமிழ்ப்பேசும் மக்களின் எல்லாப் பிரச்சினைகளின்போதும் துணிவுடன் குரல்கொடுத்திருக்கிறோம்: இனியும் கொடுப்போம். அதில் எந்தவித சமரசத்திற்கும் இடமில்லை.

லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் பிரைவட் லிமிட்டட் நிறுவனத்தின் கீழ் மும்மொழிகளிலும் வெளியாகும் பத்திரிகைகளில் தமிழனுக்கு தனித்துவமான இடமுண்டு. எமது வெளியீடுகளுக்கு முகாமைத்துவத்தினதோ அல்லது வேறெந்த தரப்புகளிடமிருந்தோ எந்தவித அழுத்தங்களும் இதுவரை காலம் வந்ததில்லை. ஊடகத்துறை என்பது அழுத்தங்களை வழங்கி, அல்லது எந்தவொரு அரசியல் கட்சியோ, ஏதாவது ஒரு தரப்புக்கோ ஆதரவை வழங்கி செய்யக்கூடியதல்ல என்ற அடிப்படை கோட்பாட்டை எமது முகாமைத்துவமும் எமது ஆசிரியபீடமும் பரஸ்பரம் புரிந்து நடப்பதன் விளைவே, இன்றைய எமது அடுத்த படியின் அடிநாதம். அதேசமயம், மக்களின் குரலாகவும் நியாயத்தின் தேவை உணர்ந்தும் எமது ஊடகப் பணியை முன்னெடுத்து வருகிறோம்.

நாங்கள் முற்றுமுழுதாக சரியானவர்கள், நாங்கள் எழுதுவதெல்லாம் சரி என்ற நிலைப்பாட்டில் எப்போதும் இருந்ததில்லை. வாசகர்களின் விமர்சனங்களையும் அவர்களின் கருத்துகளையும் கேட்டு பல விடயங்களில் கடந்த இரண்டு வருடங்களில் நாங்கள் எங்களையே சீர்படுத்தி, செம்மையாக்கிக்கொண்டிருக்கிறோம். அதற்காக வாசகப்பெருமக்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறோம்.

டிஜிட்டல் யுகத்தில் புதிதாக பல்வேறு இணையத்தளங்கள் செய்தி வெளியிடும் நோக்கில் இயங்குகின்றன. சமூக ஊடகங்களின் அபரிமிதமான வளர்ச்சியின் பின்னர் அங்கும் செய்திகள் பரிமாறப்படுகின்றன.

ஆயினும், அந்தத் தளங்களில் செய்திகளின் உறுதிப்பாடு, ஊடக ஒழுக்கவியல் ஆகியன பேணப்படுகின்றனவா எனக் கேள்வி எழுப்பினால், அதற்கு உடனடியாக பதிலளித்துவிட முடியாது.

ஏனென்றால், தமது தகவல்களை உடனடியாக மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறதே தவிர, செய்திகளை நியாயமான ரீதியில் வெளியிடுவதில்லை என்ற குற்றச்சாட்டு பொதுவெளியில் உண்டு.

ஆனபோதிலும், நம்பகத்தன்மையுடைய செய்திகளை பத்திரிகைகளின் வாயிலாகவே அறிந்துகொள்ள முடியும்.

பத்திரிகை என்பது ஓர் ஆவணம். காலங்கள் சுழலும்போதும் பத்திரிகைகளுக்கு வயதாவதில்லை. அவை, எப்போதும் இளமையாக நடந்தவற்றைச் சொல்லும் சான்றாக விளங்குகின்றன.

அந்தவகையில், இலங்கையிலும் உலகத்திலும் வரலாற்றை சான்றுப்படுத்தும் இரண்டாவது ஆண்டை மிகப் பெருமையுடன் கடந்திருக்கிறது 'தமிழன்' பத்திரிகை.

நாம் மிகக் கடினமான பாதையை கடந்துவந்திருக்கிறோம். இனியும் எம் முன்னுள்ள பாதை மிகச் சவால் மிக்கது. இதுவரை காலம் போன்று வாசகர்கள், விளம்பரதாரர்கள், நலன்விரும்பிகளின் ஆதரவினால் அந்தச் சவால்களை கடக்க முற்படுகிறோம்.

தமிழ் ஊடகத்துறையை தக்கவைத்துக்கொள்வதில் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் கடப்பாடு உண்டு. எமது கலாசாரம், பாரம்பரியம், விழுமியம் ஆகியவற்றைப் பேணுவதற்கான களம் மாத்திரமன்றி மக்களின் குரலாக ஒலிக்கும் பேரிகை இது.

அந்த நோக்கத்தை முதற்கொண்டு, தமிழ் பேசும் மக்களின் பேராதரவுடன் மூன்றாம் அகவையில் காலடி எடுத்து வைக்கிறோம். மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக மக்களின் நலனுக்காக 'தமிழன்' தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் பணிசெய்வான் என்பதை உறுதியளிக்கிறோம்.

## ரணிலை பிரதமராக்கியது யார்?...

நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவங்ச மற்றும் நிமல் லான்சா ஆகியோர் இவ்விடயம் குறித்து கடும் வார்த்தை பிரயோகங்களை மேற்கொண்டனர்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (21) சபை அமர்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக்கியது யார் என்ற விடயம் சபையில் சூடுபிடிக்க இருவரும் மாறி மாறி கடும் வார்த்தை பிரயோகங்களை மேற்கொண்டனர்.

நிமல் லான்சா : நாட்டிலுள்ள பிரச்சினைகள் மக்களுக்கு நன்றாக தெரியும். அதற்கு அந்நிய செலாவணி இல்லாததே காரணம் என்பதும் நன்றாக தெரியும். இங்குள்ள அனைத்து தலைவர்களும் இணைந்து எவ்வாறு அந்நிய செலாவணியை கொண்டுவருவது என்பது குறித்து கூறுங்கள்.

எரிவாயு பிரச்சினையிருந்தால் தெரிவு குழுவொன்றை நியமித்து அதற்கு எவ்வாறு தீர்வை பெற்றுக்கொள்வது என்பதை கண்டறியுங்கள். அதிக விலைக்கு பெற்றுக் கொண்டால் அதற்கான நடவடிக்கையையும் எடுங்கள். அதனை விடுத்து ஒருவருக்கு ஒருவர் குற்றம் சுமத்திகொண்டிருக்கும்போது, நாட்டில் எரிபொருள், பால்மா இல்லாதபோது மக்கள் வீதிக்கு இறங்குவர். மக்களின் பிரச்சினைகளும் வேதனைகளும் எங்களுக்கு புரிகின்றன.

நாடாளுமன்றத்தில் எப்போதும் போன்று உரையாடிவிட்டுச் செல்லாமல், நாட்டின் பிரச்சினைக்கு தீர்வு வழங்குங்கள்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது குறித்து அனைத்து கட்சிகளுடனும் தனிப்பட்ட ரீதியில் நான் கதைத்தேன். ஆனால், தற்போதைய சவாலுக்கு மத்தியில் பொறுப்பேற்க முடியாது எனக்கூறினர். எனவே, பிரச்சினையை தீர்ப்பதற்கு யாரிடமேனும் தீர்விருந்தால் அதனை முன்வையுங்கள். நிபந்தனையின்றி அவற்றுக்கு ஆதரவளிக்கின்றோம். அதனை விடுத்து வார்த்தைகளை மாற்றிக்கொண்டு மக்களை ஏமாற்ற வேண்டாம்.

விமல் வீரவங்ச : ஆளுந்தரப்பிலுள்ள 11 கட்சிகள் இந்தப் பிரச்சினை வரும் என தெரிந்து, அதனை தடுப்பதற்கான யோசனைகளையும் முன்வைத்தோம். அதற்காக எங்களை அமைச்சு பதவிகளிலிருந்து வெளியேற்றினர். அப்போதே பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியாக மாறியது.

எனினும், பல தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்திய நாங்கள் தேசிய சபை அமைத்தல், சர்வகட்சி அரசாங்கத்தை அமைத்தல் ஊடாக நெருக்கடியிலிருந்து சாதாரண நிலைமைக்கு வந்து, ஸ்தீரத்தன்மையை ஏற்படுத்தி பொதுத் தேர்தலுக்குச் செல்லுதல் போன்ற யோசனையை முன்வைத்தோம்.

அதன்படி, நிமல் லான்சா உள்ளிட்ட ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் சுயாதீன உறுப்பினர்களாக பிரிந்து வந்தனர். எனினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிலரும் நிமல் லான்சா தரப்பிலுள்ள சிலரும் இரவோடு இரவாக சென்று ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக நியமிக்குமாறு ஜனாதிபதிக்கு யோசனை முன்வைத்தனர்.

இன்று பதிலளிப்பதற்குக்கூட பிரதமர் சபையில் இல்லை. ஆனால், பிரதமர் பதவியை ஏற்க வேண்டுமாயின் நெருக்கடிகளுக்கு தீர்வு வழங்கக்கூடிய திட்டங்கள் இருந்திருக்க வேண்டும். இன்று எவ்வித திட்டங்களும் பதில்களும் இல்லாது வானத்தை பார்த்துகொண்டிருக்கின்றனர்.

சர்வதேச நாடுகளுடன் நெருங்கிய தொடர்புடையதாகக் கூறும் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக்கினால், சட்டைப்பையிலிருந்து கையை வெளியில் எடுத்தால் 4, 5 பில்லியன் கிடைக்கும் என எதிர்பார்த்தனர். ஆனால், இன்று அது மாயையாகியுள்ளது.

எனவே, மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கக் கூடிய திட்டங்கள் இல்லாத வரை அமைச்சுப் பதவிகளை வகிப்பதற்கு யாருக்கும் தகுதியில்லை. அமைச்சுப் பதவிகளால் எவ்வித பயனுமில்லை. உரத்தையும் மாணவர்களுக்கு கல்வியையும் எரிபொருளை வழங்காத அமைச்சுகள் எதற்கு? எனவே, பொறுப்பற்ற அரசாங்கத்தின் பயணம் குறித்து எங்களுக்கு கடும் அதிருப்தியுள்ளது.

மக்களின் கருத்துகளை கூறும் இவ்விடத்திலிருந்து இவ்வாரத்தை புறக்கணிக்க எங்களுக்கு எவ்வித எதிர்பார்ப்பும் இல்லை.

நிமல் லான்சா : நானோ அல்லது என்னுடைய தரப்பினரோ ஜனாதிபதியை சந்தித்து ரணிலை பிரதமராக்குமாறு கூறவில்லை. நாங்கள் மொட்டுக்கட்சியிலிருந்து ஒருவரை பிரதமராக்குவதற்கே முயற்சித்தோம். ஆனால், பிரதமராக நியமிப்பதற்கு பெயர் முன்வைக்குமாறு கூறிய போது, நான்கு பெயர்கள் முன்வைக்கப்பட்டன. இவை அனைத்தும் எனக்கு தெரியும். எனவே, என்னுடைய வாயை கிண்ட வேண்டாம் விமல் வீரவங்ச எம்.பி. போலியான விடயங்களை இங்கு கூற வேண்டாம்.

விமல் வீரவங்ச : ரணிலை பிரதமராக்குவதற்கான ஏற்பாடுகளை அறிந்துகொண்ட சஜித் பிரேமதாச, சில நிபந்தனைகளுடன் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்வதற்கான இணக்கப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தார். இதன் பின்னர், ரணிலை பிரதமராக்குமாறு கூறியதாக நான் கூறிய அதே தரப்பினர், சஜித் என்றாலும் பரவாயில்லை எனவும் ஜனாதிபதியிடம் கூறியுள்ளனர்.

ஆனால், அதற்குள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக்குவதற்கு உறுதியளித்துவிட்டார். அதன்படியே, நளின் பெர்னாண்டோவிற்கு அமைச்சுப் பதவியும் கிடைத்தது. அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்ளக்கூடியளவிற்கு நளின் பெர்னாண்டோ சிரேஷ்ட உறுப்பினரல்ல.

அப்போது குறுக்கிட்ட அமைச்சர் நளின் பெர்னாண்டோ, அமைச்சு பெற்றவர்கள் குறித்து பேசும் விமல், அவரின் அணியிலிருந்த ரிரான் அலஸ் எப்படி அமைச்சை பெற்றார் என்பதைப் பார்க்கவேண்டும் எனவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## கர்ம வினைகளால்...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (21) சபை அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், விசுவமடுவில் எரிபொருளை பெற்றுக்கொள்ள காத்திருந்த மக்களை இராணுவத்தினர் தாக்கியமை குறித்து கண்டனமும் வெளியிட்டார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

விசுவமடு பகுதியில் அன்றாடத் தேவைக்கும் சிறுபோக விவசாயத்துக்கும் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்ள காத்திருந்த மக்கள் மீது எவ்வித காரணமுமின்றி இராணுவத்தினர் காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல் மேற்கொண்டது மக்கள் மத்தியில் அதிருப்தியையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதனால், விசுவமடு சந்தி மற்றும் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற இராணுவ காவலரண் முகாமிற்கு அருகிலும் ஆயுதமேந்தி அதிகமான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு, மக்கள் அச்சுறுத்தும் முகமாக கண்காணிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதிப்பதாக அமைந்துள்ளது.

எனவே, சமூக வன்முறைக்கு வழிவகுக்கும் வகையிலும் மனிதாபிமானமற்ற முறையில் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதியை பெற்றுக்கொடுக்கவும் பொது பயன்பாட்டிடங்களில் இராணுவத்தினரின் நடமாட்டத்தை குறைப்பதற்கும் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜனாதிபதி மற்றும் உரிய அமைச்சரிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

காலிமுகத்திடலிலும் தென்பகுதியில் பல இடங்களிலும் சிங்கள இளைஞர்கள் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். இவர்கள் பொலிஸாரின் பாதுகாப்பு வேலிகளை தகர்த்தெறிகின்றனர், இராணுவத்தினரை தள்ளிக்கொண்டும் தங்களுடைய ஜனநாயக போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

இதேவேளை, எரிபொருளுக்காக இரண்டு மூன்று நாட்கள் மக்கள் வீதிகளில் காத்திருக் கின்றனர். இவற்றை பார்க்கும்போது நாடு எங்கே செல்கின்றது எனத் தெரியவில்லை. ஆனால், இதேபோன்றே விசுவமடு பகுதியிலுள்ள எரிபொருள் நிலையத்தில் காத்திருந்த இளைஞனை இராணுவத்தினர் தாக்கினால் அதனை யாரும் கேட்க முடியதா? சம்பவ இடத்திற்குச் சென்று நான் பார்த்தபோது, தடிகளுடன் இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்ததுடன், கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களும் இராணுவத்தினரால் மறைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால், அவர்கள் தாக்கப்பட்டு உடல்களில் காயங்கள் ஏற்பட்டதன் பின்னரே பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அதன் பின்னரே கைகளுக்கு கைவிலங்கு இடப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இங்கு எரிபொருளை பற்றி பேசுகின்றீர்கள்.

இந்த நாட்டின் மற்றொரு இனம் சிங்கள இராணுவம் மற்றும் பொலிஸாரால் காட்டுமிராண்டித்தனமாக தாக்கப்பட்டுள்ளது. சம்பவம் நடந்த விசுவமடு பகுதிக்குச் சென்று பார்த்தபோது அப்பகுதி போர்க்களமாகவே தெரிந்தது.

எனவே, இந்த நாடு எங்கே செல்கிறது. இந்த நாட்டின் சட்டம் யாருக்குரியது, சட்டத்தை யார் வைத்திருப்பது, சட்டத்தின்படி யார் நடக்க தயாராகின்றனர், இந்த நாடு சட்டத்தின்படியும் நியாயத்தின்படியும் செயற்படுகின்றது எனக் கூற முடியுமா? சிங்கள மக்களுக்கு ஒரு சட்டம், தமிழ் மக்களுக்கு ஒரு சட்டம், முஸ்லிம் மக்களுக்கு ஒரு சட்டமாகவே இந்த நாடு இருக்கின்றது.

போராட்டத்தில் ஈடுபடும் சிங்கள இளைஞர்கள் தங்களுடைய பிள்ளைகளாகவும் உங்களுடைய நாட்டு இளைஞர்களாகவும் பார்க்கின்றீர்கள். 30, 40 வருடமாக மஹிந்த ராஜபக்ஷ நடத்திய யுத்தம் காரணமாக, ஒரு இனம் பாதிக்கப்பட்டு அழிக்கப்பட்டதோடு, அந்த யுத்தத்திற்காக நீங்கள் பட்ட கடனும், சேகரித்த ஆயுதங்களுக்காக பட்ட கடனுமே இன்று இந்த நாட்டை படுகுழிக்குள் தள்ளியுள்ளது.

இங்கு எரிபொருளுக்காகவும் உணவுக்காகவும் மக்கள் வரிசையில் காத்திருக்கும்போது, அங்கு எரிபொருளுக்காக காத்திருக்கும் மக்களை இராணுவம் கொண்டு காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல் நடத்துகின்றனர். இது வட,கிழக்கில் இராணுவம் குவிக்கப்பட்டு, காணிகள் சுவீகரிக்கப்பட்டு, தமிழ் மக்கள் இராணுவத்தின் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பதற்கான சிறிய உதாரணமாகும். வலிகாமம் வடக்கில் இன்னும் 70வீதமான நிலங்கள் இராணுவத்தின் வசமேயுள்ளன. ஆனால், இன்று விவசாயத்தை முன்னெடுக்குமாறு கூறுகின்றனர். அங்குள்ள பொதுமக்களின் காணிகளில் இராணுவத்தினரால் விவசாயம் முன்னெடுக்கப்படுகின்றது.

எனவே மதவாத, இனவாத சிந்தனைகளோடும் ஒரு இனத்தின் மீதான காழ்ப்புணர்ச்சியுடனும் நாடு நடந்து கொள்ளும் வரை நாட்டில் நீதியை நிலைநாட்ட முடியாது.

இந்த நாட்டை பற்றி சிந்திக்கும் இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளும் இராணுவத்தினரால் தமிழ் மக்கள் மீது முன்னெடுக்கும் வன்முறை மீதான அடக்கு முறையை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதேவேளை, தமிழ் மக்கள் பரம்பரையாக ஆதி சிவனை வழிபட்டு வாழ்ந்து வந்த குருந்தூர் மலைப் பகுதியில் புத்தரின் சிலையை வைப்பதற்கு பௌத்த பிக்குகள் நடவடிக்கை எடுத்தனர். கருணை, காருண்யம், அன்பு, சகோதரத்துவம் பற்றி கற்பித்த புத்த பகவானை ஒரு யுத்த வடிவமாகவும் ஆக்கிரமிப்பின் வடிவமாகவும் கொண்டுவந்து நிறுவ முற்பட்டபோது, மக்கள் போராட்டம் நடத்தி தடுத்து நிறுத்தியுள்ளனர். ஏற்கனவே, இவ்விடத்தில் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கக்கூடாது என நீதிமன்ற உத்தரவுள்ளது. நீதிமன்ற உத்தரவையும் மீறி பௌத்த பிக்குகள் புத்த பகவானின் சிலையை நிறுவ முடியுமா, நீதிமன்றத்தின் உத்தரவை மீறுவதற்கு இவர்களுக்கு யார் அனுமதி வழங்கியது.

எனவே, உங்களுடைய ஆட்சியில் நீதிமன்றத்தின் தீர்ப்புகள் செல்லாக் காசுகளாக இருக்கலாம். குறிப்பாக, 05 வருடம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் அமைச்சராகவுள்ளார். எனவே, நீதிமன்றத்தின் உத்தரவை மீறி சிலையை வைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமாக இருந்தால் நாட்டில் நீதிமன்றத்திற்கு சுதந்திரமுள்ளதா? நீதிமன்ற கட்டளையை மீறும் அராஜக நாடாக இலங்கை மாறியுள்ளது. நீதிமன்றத்தையே மதிக்காத நாடு என்றால் எவ்வாறு நாட்டில் நீதியையும் சகோதரத்துவத்தையும் இன நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுவீர்கள்?

தவறிழைத்தவர்கள் பொது மன்னிப்பில் விடுவிக்கப்படுகின்றனர். ஆனால், அரசியல் கைதிகள் சிறையில் இறந்துகொண்டிருக்கின்றனர். எனவே, திட்டமிட்டு மதம் மற்றும் இன ரீதியாக இங்கு ஒரு இனம் அழிக்கப்படுகின்றது.

நீங்கள் செய்த கர்மவினைகள் உங்களை வாழவிடாது. பாவங்கள் செய்தால் நரகத்தில் என்ன தண்டனை கிடைக்கும் என பௌத்த மதமே கூறியுள்ளபோதிலும் அவை தெரிந்துமா சிங்களத் தலைவர்களும் பௌத்த பிக்குகளும் அநியாயம் செய்கின்றீர்கள்? எனவே, நீங்கள் தற்போது செய்யும் கர்ம வினைகள் இந்த நாட்டை நிம்மதியாக வாழவிடாது. நாடு சீரழிவின் பாதையிலுள்ளது - என்றார்.

# அதிகாரிகளின் கருத்துகள் தொடர்பில் சத்தியப்பிரமாணம் பெற்றுக்கொள்ள கோப் குழுவில் விசேட தீர்மானம்



அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு (கோப் குழு) அழைக்கப்படும் அதிகாரிகள் தெரிவிக்கும் கருத்துகள் தொடர்பில் குழுக் கூட்டம் ஆரம்பிக்கும்போதே சத்தியப்பிரமாணம் பெற்றுக்கொள்ள குழு உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் கூடிய விசேட கோப் குழுக் கூட்டத்தில் நேற்று (21) தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கோப் குழுவிற்கு வருகைதரும் அதிகாரிகள் குழுவின் கூட்டம் ஆரம்பிக்கப்பட முன்னர் தாம் தெரிவிக்கும் கருத்துகள் பிழையற்றவை என சத்தியப்பிரமாணம் செய்து கொள்வர்.

நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தலைமையில் நடைபெற்ற கோப் குழுக் கூட்டத்திலேயே இந்த விசேட தீர்மானம் எடுக்கப்பட்டது.

2022.06.10ஆம் திகதி கோப் குழு முன்னிலையில் ஆஜராகித் தெரிவித்த கருத்தை நீக்கிக்கொள்வதாக இலங்கை மின்சார சபையின் தலைவராக அப்போது கடமையாற்றியிருந்த எம்.எம்.சி.பேர்டினாந்து அனுப்பிய 2022.06.11ஆம் திகதிய கடிதம் கோப் குழுவின் தலைவரால் இன்று (நேற்று) அங்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் குறிப்பிடுகையில்,

“2022.06.11ஆம் திகதி இலங்கை மின்சார சபையின் தலைவரினால் கோப் குழுவுக்கு அனுப்பப்பட்ட கடிதம் இன்று ஆராயப்பட்டது. கடிதத்துக்கமைய முக்கியமான கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் அதனுடனான இணைப்புகள் கவனத்திற்கொள்ளப்பட்டன. முன்னாள் தலைவர் எம்.எம்.சி.பேர்டினாந்துவை மீண்டும் குழு முன்னிலையில் அழைத்துக் கலந்துரையாடுவதற்கு கோப் குழுவில் முடிவெடுக்கப்பட்டது. இதன்மூலம் அவருடன் கலந்துரையாடி இந்தக் கடிதத்தின் உள்ளடக்கங்களை மீள் நிர்ணயம் செய்து அவர் கோரியிருந்த அவரது சாட்சியத்தின் ஒரு பகுதியை நீக்குவது தொடர்பான முடிவை எடுக்க முடிவு செய்தோம்” - என்றார்.

இதற்கமைய 2022.06.23ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்குக் கூடவுள்ள கோப் குழுக் கூட்டத்துக்கு எம்.எம்.சி.பேர்டினாந்துவை அழைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் செயலாற்றுகை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிபுணத்துவ அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு விசேட கூட்டத்தை ஜூலை 25ஆம் திகதி நடத்துவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இன்றைய கூட்டத்தில் கோப் குழுவின் உறுப்பினர்களான ரோஹித அபேகுணவர்தன, ஜகத் புஷ்பகுமார, அனுர திஸாநாயக்க, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, பாட்டலி சம்பிக்க ரணவக்க, மஹிந்தானந்த அளுத்கமகே, சரத் வீரசேகர, ஜயந்த சமரவீர, எஸ்.எம்.மரிக்கார், நளின் பண்டார ஜயமஹா, இந்திக்க அனுருத்த ஹேரத், கலாநிதி நாலக கொடஹேவா, எரான் விக்கிரமரத்ன, மதுர விதானகே மற்றும் பிரேம்நாத் சி. தொலவத்த ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மெனிங் சந்தையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

பேலியாகொடை, மெனிங் சந்தையில் நேற்று (21) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

பேலியாகொடை, மெனிங் சந்தை கட்டடத் தொகுதியிலே இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 42 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அம்ப சான் என்றழைக்கப்படும் சமந்த பிரதீப் குமார என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதுடன், இவர் மெனிங் சந்தை தொகுதியிலுள்ள வியாபாரியாவார். வெள்ளை நிற காரில் வந்த இருவர் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன் இந்த கொலைச் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாளர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## லொறியிலிருந்து கீழே விழுந்த நபர் உயிரிழப்பு

(ரஸீன் ரஸ்மின்)

மாதம்பை கச்சக்கடு பகுதியில் லொறியிலிருந்து கீழே வீழ்ந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (20) இடம்பெற்றுள்ளது.

கல்முறுவ, கச்சக்கடுவ பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


உயிரிழந்த நபருக்கும், லொறியொன்றின் சாரதிக்கும் இடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்ந நபரின் வீட்டுக்கு முன்பாக இந்த வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் முடிவடைந்த பின்னர் குறித்த லொறியின் சாரதி, கோபத்துடன் அங்கிருந்து செல்ல முற்பட்ட போது உயிரிழந்த நபர் அந்த லொறியின் பின்பகுதியை பிடித்துக்கொண்டு ஏற முற்பட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

இதன்போது, குறித்த லொறி அவ்விடத்திலிருந்து புறப்பட்டு சுமார் 100 மீற்றர் தூரத்தில் லொறியின் பின்பக்கம் இருந்த நபர் கீழே வீழ்ந்துள்ளார் என மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன்போது, கீழே வீழ்ந்து படுகாயமடைந்த நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாக கல்முறுவ வைத்தியசாலையில் சேர்த்தபோதிலும் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மாதம்பை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




## கனேடிய தூதரக அதிகாரிகள் யாழ். மாநகர சபை முதல்வரை சந்தித்து கலந்துரையாடல்



யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் - கனேடிய தூதரகம் இடையிலான சந்திப்பு நேற்று (21) இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாநகர சபையில் இடம்பெற்ற சந்திப்பின் போது நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பிலும் எதிர்கால திட்டங்கள் தொடர்பிலும் மாநகர சபையின் முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் ஆணையாளர் த.ஜெயசீலன் ஆகியோருடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. அதனைத் தொடர்ந்து நினைவுச் சின்னங்கள் வழங்கி பரிமாறப்பட்டன.

இதன்போது மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் கனேடிய தூதுவர் தன்னுடன் உரையாடிய விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

குறிப்பாக, தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்சினை, யாழ்ப்பாண மாநகரத்தின் வளர்ச்சித் திட்டங்கள், நாடு இவ்வாறான நிலைமைக்கு போனதற்கான காரணங்கள் தொடர்பில் கேட்டறிந்ததாக குறிப்பிட்டார்.

அவரது கேள்விக்கு பதிலளித்த மாநகர சபையின் முதல்வர் வி.மணிவண்ணன் கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் நாட்டின் அபிவிருத்திக்கும் மாநகரத்தின் அபிவிருத்திக்கும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியது என்றும் அதனை மீளக் கட்டியெழுப்புவதற்கான விடயங்கள் தொடர்பிலும் தான் கனேடிய தூதுவருக்கு தெரிவித்ததாகவும் ஊடகங்களுக்கு குறிப்பிட்டார்.

## கம்பஹாவின் சில பிரதேசங்களில் இன்று இரவுமுதல் 8 மணிநேர நீர்வெட்டு

(பேருவளை நிருபர்)

கொழும்பு, கண்டி வீதியில் யக்கல பாலத்தில் இணைக்கப்பட்டுள்ள நீர்க்குழாய் தொகுதியில் அத்தியாவசிய விஸ்தரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், இன்று (22) இரவு 10 மணிமுதல் 23ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணிவரையிலான 8 மணிநேர நீர் விநியோகத்தடை கம்பஹா பிரதேசத்தின் சில பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

கம்பஹா நகரம், கம்பஹா மிரிஸ்வத்த வீதியில் ஹன்சகிரி வரை, யக்கல வீதியில் ஹன்சகிரி வரை, ஒருத்தொட்ட வீதியில் கறுப்பு பாலம் வரை, உடுகம்பொல வீதியில் சதொச அருகிலுள்ள பாலம் வரை, ஜா–எல வீதியில் புகைப்பரிசோதனை நிலையம் வரையான பகுதிகள் நீர் விநியோகத் தடையினால் பாதிக்கப்படும்.

நீர் விநியோக தடையினால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியம் குறித்து கவலை தெரிவிக்கும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, முன்கூட்டியே நீரை சேமித்து சிக்கனமாக பாவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றது. மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பஸ் போக்குவரத்து தட்டுப்பாட்டால் பயணிகளுக்கு பெரும் அசௌகரியம்

(செ.தி.பெருமாள்)

ஹட்டன் அரச பஸ் நிலையத்தின் மூலம் சாமிமலை நகரிலிருந்து அதிகாலை 4.30 மணிக்கு கண்டி செல்லும் அரச பஸ் சேவை கடந்த சில வாரங்களாக சேவையில் ஈடுபடவில்லை. இதனால் பயணிகள் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த 60 வருடங்களாக இந்த பஸ் சேவை இடம்பெற்று வருகின்றது. இந்த பஸ் சேவையால் தூர இடங்களுக்கு வேலைக்கு செல்லும் பணியாளர்கள் தொடக்கம் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் பயணித்து பெரிதும் நன்மையடைந்தனர்.

இவ்வாறான நிலையில் கடந்த சில வாரங்களாக இச்சேவை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் நாளாந்தம் இந்த பஸ் சேவை ஊடாக பயணிக்கும் பலரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். குறித்த பஸ் சேவை சாமிமலை நகரில் ஆரம்பிக்கப்பட்டு மஸ்கெலியா, நோட்டன், கினிகத்தேனை, நாவலப்பிட்டி, கம்பளை, பேராதனை, கண்டி செல்லும். மீண்டும் கண்டியிலிருந்து 8.45 மணிக்கு ஆரம்பிக்கப்படும் குறித்த பஸ் சேவையானது மஸ்கெலியா நகருக்கு பகல் 02 மணிக்கு வந்தடையும். இதனால் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் என பலரும் சாமிமலை பகுதிக்கு செல்ல இலகுவாக இருந்தது.

தற்போது இந்த பஸ் சேவை இல்லாத நிலையில் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். சம்பந்தப்பட்ட ஹட்டன் அரச பஸ் நிலைய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயனாளிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# அங்கே உருக்குலையும் உக்ரைன்... இங்கே உடல் நடுங்கும் புட்டின்!

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் நடவடிக்கைகள் நான்கு மாதங்களாக தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன. முடிவடையாத போரால் இரண்டு நாடுகளும் கடுமையான இழப்பை சந்தித்து வருகின்றன. உக்ரைன் தனது இராணுவம் மற்றும் பொதுமக்களின் உயிரையும், நிலப்பரப்பையும் வேகமாக இழந்து வருகிறது. ரஷ்யா உலக நாடுகளின் பொருளாதாரத் தடைகளை சுமந்துகொண்டிருக்கிறது.

மேலும், உக்ரைனுக்கு இணையாக தங்களின் இராணுவ வீரர்களை ரஷ்யா இழந்து வருகிறது. இதுவரையில், 32,950 இராணுவ வீரர்களை ரஷ்யா இழந்திருப்பதாக உக்ரைன் தெரிவிக்கிறது. ஆனால், ரஷ்யத் தரப்போ இதை முற்றிலுமாக மறுக்கிறது. மேலும், உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ரஷ்ய முன்னாள் ஜனாதிபதி டிமிட்ரி மெத்வதேவ், இன்னும் இரு ஆண்டுகளில் உலக வரைபடத்திலிருந்தே உக்ரைன் இல்லாமல் போகலாம் என எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.


இந்நிலையில், கடந்த சில நாட்களாகவே ரஷ்யாவின் தற்போதைய ஜனாதிபதி புட்டின் உடல்நிலை பலவீனமடைந்து வருவதாக பல்வேறு தகவல்கள் உலாவந்தன. அதை மறுத்த ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ், புட்டின் உடல்நிலை குறித்து வெளியாகும் கருத்துகளில் உண்மை இல்லை எனக்கூறி திட்டவட்டமாக மறுத்தார்.

இந்நிலையில், சமீபத்தில் ரஷ்ய தலைநகர் மொஸ்கோவின் க்ரெம்ளினில் நடைபெற்ற ரஷ்ய திரைப்பட விருது வழங்கும் விழாவில் பங்கேற்ற புட்டின், உரை நிகழ்த்தும்போது அவரது கால்கள் நடுங்குவதுபோன்றும், நிற்கவே முடியாமல் சிரமமப்படுவதுபோன்றும் உள்ள வீடியோ ஒன்று வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. புட்டின் உடல்நிலை குறித்தான செய்திகள் வதந்திகள் எனக்கூறப்பட்ட நிலையில், புட்டினின் இந்த வீடியோ காட்சி சமூக வலைத்தளங்களில் வேகமாக பகிரப்பட்டும், சர்வதேச ஊடகங்களில் பரப்பரப்பாக விவாதிக்கப்பட்டும் வருகிறது.




ஜனாதிபதி புட்டினின் கண்பார்வை நாளுக்கு நாள் மங்கி வருவதாகவும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலோ, பொது நிகழ்ச்சிகளிலோ அவர் பங்கேற்கும்போது ஏதேனும் வாசிக்க நேர்ந்தால், மிகப்பெரிய எழுத்துகளில் எழுதியிருந்தால் மட்டுமே அவரால் படிக்க முடிகிறது என்றும், அதற்காக அவர் வாசிக்கும் அறிக்கையில், பக்கத்துக்கு இரண்டு வாக்கியங்கள் என்ற அளவில் வார்த்தைகள் பெரிதாக இருக்கும்படி தட்டச்சு செய்து தயாரிக்கப்படுவதாகவும் சர்வதேச ஊடகங்களில் செய்தி வெளியாகியிருக்கின்றன.

ஜனாதிபதி புட்டின் கணையப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இதை ரஷ்ய ஜனாதிபதி மாளிகை மருத்துவர்கள் உறுதி செய்திருப்பதாகவும் ரஷ்ய பத்திரிகையாளர் மார்க் கோட்லியார்ஸ்கி



தெரிவித்திருக்கிறார். மேலும், ரஷ்ய ஜனாதிபதியிடம் கண்டறியப்பட்டிருக்கும் இந்த நோய் ஒரு வீரியமிக்க கட்டி என்றும், அது உறுப்பு வெளியேற்றும் குழாய்களில் ஏற்படும் கட்டுப்பாடற்ற வளர்ச்சியால் ஏற்படுவதாகவும், அதிகபட்சம் மூன்று முதல் நான்கு மாதங்களில் புட்டினுக்கு ஒரு சிக்கலான அறுவை சிகிச்சை நடத்தப்படும் என எதிர்பார்ப்பதாகவும் மார்க் கோட்லியார்ஸ்கி பத்திரிகையாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

**இரத்தப் புற்றுநோய்:**

முன்னாள் பிரிட்டிஷ் உளவாளியான கிறிஸ்டோபர் ஸ்டீல் என்பவர், ரஷ்யா மற்றும் பிறபகுதிகளில் இருந்து வரும் தகவல்படி புட்டின் உடல்நலம் மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அவர் இரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்றும் ஸ்கை நியூஸ் ஊடகத்துக்கு பேட்டி அளித்திருக்கிறார்.

**பார்க்கின்சன் நோய்:**

புட்டினின் சமீபத்திய வீடியோக்களில் அவரால் சுயமாகக் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கை, கால்கள் உதறுகின்றன. சமீபத்தில் ஜனாதிபதி புட்டின் பெலாரஸ் ஜனாதிபதியுடனான ஒரு சந்திப்பில், தனது கைகளை வைத்து மேசையை இறுக்கிப்பிடித்துக் கொண்டிருப்பது போன்றும், கால்களை தொடர்ந்து அசைத்துக் கொண்டிருப்பது போன்றும் இருக்கும் வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. அதேபோல், ஈஸ்டர் தினத்தில் தேவாலயம் சென்ற புட்டின், உதட்டைக் கடித்துக் கொண்டு படபடப்புடன், காணப்படும் வீடியோவும் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

மேலும், ஓரிடத்தில் அமைதியாக நிற்காமல் உடலை அசைத்துக் கொண்டும், உலர்ந்த வாயை ஈரப்படுத்திக் கொண்டும் இருந்த வீடியோவும் வெளியாகியது. இவை அனைத்துமே பார்க்கின்சன் நோயின் அறிகுறிகள் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

**சூட்கேஸில் சேகரிக்கப்படும் கழிவுகள்:**

மேலும், புட்டினின் வெளிநாட்டு சுற்றுப் பயணங்களின்போது அவர் வெளியேற்றும் கழிவுகளை அவரின் பாதுகாவலர் சூட்கேஸில் சேகரிப்பதாக விசித்திரத் தகவல் ஒன்றும் வெளியாகியிருக்கிறது. அதாவது, புட்டினின் மலம், சிறுநீரைக் கொண்டு அவரின் உடல்நிலை எப்படியிருக்கிறது என எதிரிகள் கண்டுபிடித்துவிடக் கூடிய வாய்ப்புள்ளதால், புட்டின் கழிவறைக்கு செல்லும்போது அவருடனேயே பிரத்தியேக பாதுகாவலரும் உடன்சென்று, அவரின் கழிவுகளை தனியாக சேகரிக்கிறாராம். பிறகு அதை பத்திரமாக ரஷ்யாவுக்கு கொண்டுவந்து அழித்துவிடுகிறார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

**அடுத்த மூன்று ஆண்டுகள் மட்டுமே உயிர் வாழ்வார்:**

இதைத்தொடர்ந்து, இங்கிலாந்து ஊடகமான The Independent இல் ரஷ்ய உளவாளி ஒருவர், ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கு புற்றுநோய் பாதிப்பு வேகமாக அதிகரித்து வருவதாகவும், இதனால் அவரின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாகவும், அவர் இன்னும் மூன்று ஆண்டுகள் மட்டுமே உயிருடன் இருப்பார் என மருத்துவர்கள் கூறியிருப்பதாகவும் அதிர்ச்சித் தகவலை தெரிவித்திருக்கிறார். மேலும், அந்த செய்தியில், பிரிட்டனில் வாழும் முன்னாள் ரஷ்ய உளவாளி போரிஸ் கார்பிச்கோவ், ரஷ்ய ஜனாதிபதி புட்டினின் உடல்நிலை சரியில்லை என்று கூறியிருப்பதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ரஷ்ய தரப்பில் இருந்து ஜனாதிபதி புட்டினின் உடல்நிலை குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை என்றாலும், புட்டின் முன்பு போல் அதிக அளவில் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதில்லை. இது வெளிவரும் தகவல்களுக்கு வலு சேர்ப்பதாக இருப்பதாக சர்வதேச அரசியல் பார்வையாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

## உங்களுக்கு பெற்றோல் வாசனையை நுகரப் பிடிக்குமா? காரணம் இதுதான்..!

பெற்றோல், டீசல், இயற்கை எரிவாயு ஆகியவற்றை நுகர சிலருக்கு பிடிக்கும். இன்னும் சொல்லப்போனால் நாம் அனைவரும் சிறு வயதில் ஒரு முறையாவது பெற்றோல் வாசனையை நுகர ஆசைப்பட்டு இருப்போம். பெற்றோல் வெளியிடும் புகையிலும் இந்த வாசனை கலந்திருக்கும். நிலையங்களில் பெற்றோல் நிரப்பும்போது வாசம் காற்றில் வரும். இதனை எதற்காக சிலர் விரும்புகின்றனர்? இது நல்லதா, கெட்டதா எனப் பார்ப்போமா?

★ பெற்றோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்கள், மசகு எண்ணெயை பலகட்ட சுத்திகரிப்பு முறைகளுக்கு உட்படுத்தும்போது கிடைக்கின்றன. பூமியின் அடி ஆழத்தில் உள்ள மசகு எண்ணெயில் பல தேவையற்ற கசடுகள் இருக்கும்.

இவை அனைத்தும் நீக்கப்பட்ட பின்னர்



எரிபொருளுக்கு வாசனை அறவே இருக்காது. எனவே, செயற்கையாக எரிபொருளுக்கு வாசனை சேர்க்க பென்சேன் எனப்படும் இரசாயனம் கலக்கப்படுகிறது.

இந்த பென்சேன் இரசாயனத்துக்கு மூளையில் மகிழ்ச்சியைத் தூண்டும் ஹார்மோனான டோபொமைனை சுரக்க வைக்கும் ஆற்றல் உள்ளது. டோபொமைன் சுரக்கும்போது நமது எண்ணங்கள் நம் வாழ்வில் பசுமையான கடந்தகால நிகழ்வுகளை நோக்கிச் செல்கின்றன. மனது இலகுவாகிறது. கவலைகள் சில வினாடிகளுக்கு ஒத்திப்போடப்படுகின்றன.

இந்த சிற்றின்பத்துக்காக நாம் பென்சேன் கலந்த எரிபொருட்கள் வாசனையை நுகர ஆர்வம் காட்டுகிறோம்.

ஆனால், இவற்றை நுகர்வது ஆரோக்கியமானதல்ல என எச்சரிக்கின்றனர் மருத்துவர்கள். தொடர்ந்து இந்த புகை உடலுக்குள் சென்றால் நுரையீரல் பாதிக்கப்படுவதோடு, மனநலமும் பாதிக்கப்படலாம் என்கிறார்கள் அவர்கள்.

## சாலையில் கிடைக்கும் மின்சாரம்!



மின் வாகன மின்கலன்களில் மின்னேற்றம் செய்ய ஆகும் நேரம், பெற்றோல் போட ஆகும் நேரத்திற்குள் இருக்கவேண்டும். இதுதான் மின் வாகன பயனாளிகள் எதிர்பார்ப்பு. ஒரே மின்னேற்றத்தில், சில நூறு கி.மீ. தொலைவுக்கு மின் வாகனம் செல்லவேண்டும் என்பதும் அவர்களது எதிர்பார்ப்பு.

இதற்கு தீர்வாக மின்கலன்களில் புதுமைகள் செய்வதற்கு பதில், சாலைகளையே மின்னேற்றத்திற்கு பயன்படுத்தலாம் என்கிறது இத்தாலியின் ஸ்டெல்லான்டிஸ் நிறுவனம்.

உலகின் 5 ஆவது பெரிய வாகனத் தயாரிப்பாளரான இது, இத்தாலியில் 1,050 மீற்றர் நீள சாலையை அமைந்து, தனது டைனமிக் வயர்லெஸ் பவர் டிரான்ஸ்பர் என்ற தொழில்நுட்பத்தை பரிசோதித்து வருகிறது.

இந்த சாலையின் நடுவே, கம்பியின்றி மின்சாரத்தை செலுத்தும் தகடுகள் பதிக்கப்பட்டுள்ளன. அதேபோல மின் வாகனங்களின் அடியில் மின் வாங்கிகள் பொருத்தப்பட்டிருந்தால், சாலையில் அவை பயணிக்கும்போதே மின்கலனில் மின்னேற்றம் நடக்கும்.

இதனால், ஒரு மின் வாகனம், மின்னேற்றத்திற்காக எங்கும் நிற்க வேண்டியதில்லை. மின்கலனில் சார்ஜ் குறைவாக உள்ளதே என்ற கவலையும் தேவையில்லை. சோதனைகளில் வெற்றி கண்டுள்ள ஸ்டெல்லான்டிஸ், விரைவில் இத்தொழில்நுட்பத்தை நடைமுறைக்குக் கொண்டுவரத் திட்டமிட்டு வருகிறது.

## நக்கல் நமசிவாயம்

**இலங்கைக்கு வாற எரிபொருள் கப்பல்கள் இங்கு வருவதற்கு எடுத்துக்கொள்ளப்படும் நாட்களை விட கூட நாட்கள் இலங்கை கடற்பரப்பில தரித்து நிற்க வேண்டியிருக்குது பாருங்கோ..!**




## பால் வீதிக்கு ஒரு புதிய வரைபடம்



விண்வெளியை ஆராய்வோருக்கு, பால் வீதியின் வரைபடம் ஓர் அடிப்படை ஆதாரமாகும். இதை வெளியிட்ட இ.எஸ்.ஏ. எனப்படும் ஐரோப்பிய விண்வெளி நிறுவனம், தற்போது பால் வீதியின் புதிய வரைபடத்தை வெளியிட்டுள்ளது.

கடந்த 2013இல் இ.எஸ்.ஏ. அனுப்பிய கயா என்ற விண்கலம், பல இலட்சம் நட்சத்திரங்கள், கோள்கள், விண் கற்களைக் கண்காணித்து தகவல்களை அனுப்பியது. அதன் அடிப்படையில் 2020இல் இ.எஸ்.ஏ. வெளியிட்ட பால் வீதியின் வரைபடமே அசத்தலான முயற்சிதான். தற்போது கயா சேகரித்த தகவல்கள், 2 பில்லியன் நட்சத்திரங்கள், கோள்களின் இருப்பிடங்களை முப்பரிமாணத்தில் காட்டுகின்றன. இத் தகவல்களை வைத்து ஆண்டுக்கு 1,600 ஆராய்ச்சிக் கட்டுரைகள் பதிப்பிக்கப்படுகின்றன.

## ஒலி உறிஞ்சும் பூச்சி



வெளவால்கள் ஒலியை அனுப்பி, வரும் எதிரொலியை வைத்து இரையை பிடித்துக்கொள்ளும். சில அந்துப் பூச்சிகள் வெளவாலின் ஒலி அலைகளை தம் மீது பட்டுத் திரும்ப விடாமல் செய்துவிடுகின்றன.

அந்தேரயே பெர்னியி என்ற அந்துப் பூச்சியின் இறக்கைகளின் மேல் உள்ள செதில்கள் 87 சதவீத செவியுணரா ஒலி அலைகளை உறிஞ்சிக்கொள்கின்றன. இதனால் அவை வெளவாலுக்கு இரையாகாமல் தப்புகின்றன. பல இலட்சம் ஆண்டுகளாக பரிணாம வளர்ச்சி உருவாக்கிய இந்த உத்தியை, இங்கிலாந்திலுள்ள பிரிஸ்டால் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இந்த நுட்பத்தை ஒரு காகிதத்தின் மேல் உருவாக்க அவர்கள் ஆராய்ந்து வருகின்றனர். அப்படி செய்ய முடிந்தால் அதை, இராணுவ வாகனங்களின் மேல் பொருத்தி, எதிரிகளிடமிருந்து தப்பிக்க உதவலாம். மேலும், செவி உணரும் ஒலி அலைகளையும் அந்துப் பூச்சியின் நுட்பம் உறிஞ்ச உதவினால், ஒலிப் பதிவுக்கூடங்களிலும் இந்த நுட்பம் பயன்படும்.

## இன்றைய நாளில்...

- 760 – ஏலியின் வால்வெள்ளி சூரியனுக்கு அருகாமையில் சென்றமை 14 ஆவது தடவையாக அவதானிக்கப்பட்டது.
- 1834 – இலங்கை சட்டவாக்கப் பேரவையின் முதலாவது கூட்டம் கொழும்பில் ஆரம்பமானது.
- 1900 – அசோசியேட்டட் பிரெஸ் நிறுவனம் நியூயோர்க்கில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1906 – ரைட் சகோதரர்கள் தமது பறக்கும் கருவிக்கான காப்புரிமத்தைப் பெற்றனர்.
- 1927 – சீனாவில் சினிங் அருகே 8.3 அளவு நிலநடுக்கம் ஏற்பட்டதில் 200,000 பேர் வரை உயிரிழந்தனர்.
- 1943 – ஜோசப் ஸ்டாலின் பொதுவுடைமை அனைத்துலகத்தைக் கலைத்தார்.
- 1957 – பல்கலைக்கழகங்களில் இனவொதுக்கலை தென்னாபிரிக்க அரசு அங்கீகரித்தது.
- 1958 – இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்களில் 300 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1972 – இலங்கையில் புதிய அரசியலமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்து குடியரசு ஆகியது. சிலோன், ஸ்ரீலங்கா எனப் பெயர் மாற்றம் பெற்று, பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கத்துவம் பெற்றது.
- 1987 – முதலாவது றக்பி உலகக்கிண்ணப் போட்டிகள் நியூசிலாந்து, ஒக்லாந்து நகரில் நடைபெற்றது.
- 1990 – விண்டோஸ் 3.0 வெளியிடப்பட்டது.

# புத்தளத்தில் வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட்ட ஆசிரியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு





(ரஸீன் ரஸ்மின்)

புத்தளத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் நேற்று(21) நண்பகல் முதல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

குறித்த மதிப்பீட்டுப் பணிகளுக்காக வருகை தரும் ஆசிரியர்கள் எரிபொருள் இன்றி பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருவதால் தமக்கு சாதகமான பதில் கிடைக்கும் வரை பகிஷ்கரிப்பை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

புத்தளம் சென். அன்றூஸ் மகா வித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நேற்று (21) முதல் ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில் மேற்படி பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது. அத்துடன், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டு மத்திய நிலையமான புத்தளம் சென். அன்றூஸ் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக குறித்த ஆசிரியர்கள் கவனயீர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். இலங்கையில் கொரோனா அதனைத்தொடர்ந்து பொருளாதார நெருக்கடி என்று மாணவர்களின் கல்வி கடுமையாக பாதிக்கப்பட்டு வரும் நிலையில், க.பொ.த சாதாரண தர மாணவர்களின் எதிர்காலத்தையும் இதன்மூலம் கேள்விக்குட்படுத்த வேண்டாம் எனவும் ஆசிரியர்கள் கேட்டுக்கொண்டனர்

மேற்படி, பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டு பணிகளுக்காக வருகை தரும் ஆசிரியர்களுக்கு உடனடியாக எரிபொருள் வழங்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கவனயீர்ப்பில் ஈடுபட்ட ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டனர்.மேற்படி தமிழ் மொழி மூலப் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக சுமார் 350இற்கும் அதிகமான ஆசிரியர்கள் கடமைகளில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மதிப்பீட்டுப் பணிகளுக்காக புத்தளம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இருந்து வருகை தரும் ஆசிரியர்கள் எரிபொருள் நெருக்கடிக்கு முகம்கொடுத்து வருவதாகவும், எரிபொருள் இன்றி, அதிக பணத்தை செலவழித்து முச்சக்கர வண்டி மூலம் கடமைக்கு வருகை தருவதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.தமக்கு சாதகமான பதில் கிடைக்கும் வரை நேற்று(21) நண்பகல் முதல் குறித்த மதிப்பீட்டுப் பணிகளில் இருந்து தாம் விலகிக் கொள்வதாக புத்தளம் மாவட்ட செயலாளர் மற்றும் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளதாகவும் ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தாமதமானால் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகுவதும் தாமதமாகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பரீட்சை வினாத்தாள் மதிப்பீடு செய்யும் ஆசிரியர்கள் நுவரெலியாவிலும் ஆர்ப்பாட்டம்





(தலவாக்கலை நிருபர்)

கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான வினாத்தாள் மதிப்பீடு செய்யும் ஆசிரியர்களால் நுவரெலியா ஹவா-எலிய மகளிர் உயர்நிலை பாடசாலை முன்பாக நேற்று (21) ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வினாத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்கள் கடந்த 5 நாட்களாக எரிபொருள் இன்மையால் பாரிய சிரமத்தின் மத்தியிலேயே பணியில் ஈடுபடுவதாகவும் தமக்கு எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கான அனுமதிச்சீட்டு வழங்கப்பட்டுள்ள நிலையிலும் எரிபொருளை முறையாக பெற்றுக்கொள்வதில் ஆசிரியர்கள் சிரமப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எதிர்வரும் நாட்களில் மதிப்பீடு பணிகளில் இடையூறு ஏற்படாமல் இருக்க அரசு தலையிட்டு போக்குவரத்து சிரமங்களை தீர்க்குமாறும் அதேவேளை மதிப்பீடு பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான போக்குவரத்து கொடுப்பனவுகள் அரசாங்கத்தால் அதிகரிக்கப்பட வேண்டும் எனக்கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.நுவரெலியா ஹாவா-எலிய மகளிர் உயர்நிலை பாடசாலையில் வினாத்தாள் மதிப்பீடு செய்யும் ஆசிரியர்கள் நேற்று மதிய உணவு இடைவேளையின்போது சுலோகங்களை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## வீட்டுத்தோட்டங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டங்கள் ஆரம்பித்து வைப்பு

வீட்டுத்தோட்டங்களை நிர்மாணிக்கும் உத்தியோகபூர்வ வேலைத்திட்டத்தை, சுற்றாடல் துறை அமைச்சு ஆரம்பித்து வைத்துள்ளது.

அமைச்சு வளாகத்தில் அண்மையில் நடந்த இந்நிகழ்வில், அமைச்சர் நஸீர் அஹமட், அமைச்சின் செயலாளர் அனில் ஜெயசிங்க உள்ளிட்ட மிக முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

மரக்கன்றுகளை நட்டுவைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார் அமைச்சர் நஸீர் அஹமட்.





இதையடுத்து, ஏனைய அதிகாரிகளாலும் மரக்கன்றுகள் நடப்பட்டன. வீட்டுத் தோட்டத் திட்டங் களை ஊக்குவிக்கும் பொருட்டு, மரக்கன்றுகள் மற்றும் விதைகளும் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.இந் நிகழ்வின் இன்னுமொரு விசேட நிகழ்வாக சிரமதானமும் இடம்பெற்றது. நிலங்களை துப்புரவு செய்து, பயிரிடுவதற்கேற்ப பண்படுத்தப்பட்டது. இதில், இராணுவத்தினரின் சுற்றாடல் பிரிவு பகுதியினர் கலந்துகொண்டனர்.

உணவுப்பஞ்சத்தை எதிர்கொள்ளல், வரண்ட நிலங்களை வளமுள்ள தாக்கல் போன்ற நோக்கில், ஜூன் 17 பஞ்சத்துக்கு எதிரானதினமாக கொண்டாடப்படுகிறது. வருடாந்தம், ஐ.நாவால் இத்தினம் அனுஷ்டிக்கப் படுகிறது. இத்தினத்தை அனுஷ்டிக்கும் வகையிலேயே, வீட்டுத் தோட்டங்களை நிர்மாணிக்கும் திட்டத்தை சுற்றாடல் துறை அமைச்சு அமுல்படுத்தியுள்ளது.

## அதிக விலைக்கு எரிவாயு சிலிண்டர்களை விற்பனை செய்தவர் ஹாலி - எலவில் கைது

(நடராஜா மலர்வேந்தன்)

ஹாலி - எல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட போஹாமடித்த பகுதியில் அதிக விலைக்கு எரிவாயு சிலிண்டர்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் நபரொருவர் நேற்று (21)கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள், மற்றும் ஹாலி - எல பொலிஸார் இணைந்து நடத்திய சோதனை நடவடிக்கையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரிடமிருந்து 18 எரிவாயு சிலிண்டர்கள் கைபற்றியதாக ஹாலி - எல பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை பதுளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த மேலதிக நடவடிக்கைகளை ஹாலி - எல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முன்னாள் ஐ.தே.க. எம்.பி. விடுதலை

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

சப்ரகமுவ மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் ரஞ்சித் நந்தசேன மற்றும் அவரது உதவியாளரை 1999ஆம் ஆண்டு கொலை செய்து வாகனம் ஒன்றில் எரித்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு சிறைப்படுத்தப்பட்டிருந்த சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஹசித சமந்த முஹந்திரம் சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கடந்த 23 வருடங்களாக சிறைவாசம் அனுபவித்தபோதிலும் பொலிஸ் தகவல்களில் காணப்படும் குறைபாடுகள், வைத்திய அறிக் கையில் நிலவும் சந்தேகங்கள் காணப்படுவதால் இவரை சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுதலை செய்வதாக நீதவான் தனது தீர்ப்பின்போது அறிவித்துள்ளார்.




# பொதுநலவாய அரசத் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்க ருவாண்டா செல்கிறார் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்

ருவாண்டாவின் கிகாலியில் 2022 ஜூன் 21 முதல் 25வரை நடைபெறவுள்ள பொதுநலவாய அரசத் தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பிரதிநிதித்துவப்படுத்தி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கலந்துகொள்ளவுள்ளார். ருவாண்டாவில் நடைபெறும் பொதுநலவாய அரசத் தலைவர்கள் மாநாட்டில் பொதுநலவாயத்தின் ஐம்பத்து நான்கு (54) உறுப்பு நாடுகள் கலந்து கொள்ளும்.

ராணியார் இரண்டாம் எலிசபெத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொள்ளவுள்ள வேல்ஸ் இளவரசரின் முன்னிலையில், பொதுநலவாய அரசத் தலைவர்கள் மாநாடு எதிர்வரும் 24ஆம் திகதி ருவாண்டாவின் ஜனாதிபதி பால் ககாமேவால் திறக்கப்படும். அதனைத் தொடர்ந்து 24 மற்றும் 25ஆம் திகதிகளில் பொதுநலவாய அரசத் தலைவர்களின் உயர்மட்டக் கூட்டங்கள் நடைபெறுவதுடன், நாளை (23ஆம் திகதி) பொதுநலவாய வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் நடைபெறும்.2022 பொதுநலவாய அரசத் தலைவர்கள் மாநாட்டின் கருப் பொருளானது, பொதுவான எதிர் காலத்தை வழங்குதல்: இணைத்தல், புதுமைப்படுத்துதல் மற்றும் மாற்றுதல் எனும் தலைப்பில், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் வர்த்தகத்தை அதிகரித்தல் போன்ற பகிரப்பட்ட இலக்குகளை அடைவதில் பொதுநலவாய குடும்பத்தின் பணியை எடுத்துக்காட்டுகின்றது. வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ், ஜனநாயகம், சமாதானம் மற்றும் ஆளுகை, நிலையான மற்றும் உள்ளடக்கிய அபிவிருத்தி மற்றும் கொவிட்-19க்குப் பிந்தைய மீட்பு ஆகிய மூன்று கருப்பொருள் பகுதிகளின் கீழ் உயர்மட்டக் கலந்துரையாடல்களில் பங்கேற்பார். பொதுநலவாய அரசத் தலைவர்கள் மாநாட்டின் பக்க அம்சமாக, ஐரோப்பா, ஆசியா மற்றும் ஆபிரிக்காவின் பல பொதுநலவாய உறுப்பு நாடுகளுடன் வெளியுறவு அமைச்சர் மட்டத்திலான இருதரப்பு சந்திப்புகளில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுநலவாய அமைப்பின் எட்டு ஸ்தாபக உறுப்பினர்களில் இலங்கையும் ஒன்றாவதுடன், 23ஆவது பொதுநலவாய அரசத் தலைவர்கள் மாநாட்டை நவம்பர் 2013இல் கொழும்பில் நடத்தியது. ருவாண்டாவில் பொதுநலவாய அரசத் தலைவர்கள் மாநாடு ஜூன் 2020இல் நடைபெறவிருந்தது. எனினும், கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக இரண்டு முறை ஒத்திவைக்கப்பட்டது.










மஹா கும்பாபிஷேகம்

செப்டெம்பர் மாதம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

INTERNATIONAL SOCIETY FOR KRISHNA CONSCIOUSNESS

Architect

chartered architect HARIHARAN THAMOTHARAN PILLAI -AIA (SL)

STHAPATHI

vishva shri silpashinthamani c.s SANTHANAKUMAR

ஆலய அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது வங்கி வைப்பினூடாகவோ நன்கொடைகளை வழங்கலாம்/Dondte directiy at the temple office or through bank

BANK NAME- COMMERCIAL BANK
BANK BRANCH- KOTAHENA
ACCOUNT NAME-ISKCON
ACCOUNT NUMBER- 105066901
SWIFT CODE- CCEYLKLX

BANK NAME- HATTON NATIONAL BANK
BANK BRANCH- JAMPETTAH STREET
ACCOUNT NAME-ISKCON
ACCOUNT NUMBER- 207010000891
SWIFT CODE-HBLILKLX

# 8ஆவது சர்வதேச யோகா தின நிகழ்வுகள் யாழில்






**(யாழ். நிருபர்)**

08ஆவது சர்வதேச யோகா தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றன.

யாழ்ப்பாண இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் 75ஆவது சுதந்திர தின ஆசாதிகா அம்ரித் மகோத்சவ் கொண்டாட்டங்களுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 8ஆவது சர்வதேச யோகா தின நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றன.

யாழ். இந்திய துணைத் துதுவர் ராகேஷ் நடராஜ், வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், யாழ். மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன், ஆணையாளர் ஆர்.ஜெயசீலன், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன், வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர், யாழ்ப்பாண வலய கல்விப் பணிப்பாளர் மற்றும் யாழ்ப்பாண வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்கள், பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டனர்.

மங்கள விளக்கேற்றலோடு ஆரம்பமாகிய 8ஆவது சர்வதேச யோகா தின நிகழ்வின் ஆரம்பத்தில் யாழ். இந்திய துணைத் தூதுவரின் வரவேற்புரை இடம்பெற்றதோடு, யோகா பயிற்சியும் இடம்பெற்றது.

நிகழ்வின் இறுதியில் யோகா பயிற்சியில் கலந்துகொண்டோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## கீரிமலையில் முதியவர் கழுத்து நெரித்துக் கொலை; 5ஆயிரம் ரூபா திருட்டினால் எழுந்த முரண்பாடு

### உடற்கூற்று பரிசோதனையில் அம்பலம்

யாழ். கீரிமலை வீடொன்றில் சடலமாக மீட்கப்பட்ட நபர் கழுத்து நெரிக்கப்பட்டே கொலை செய்யப்பட்டமை உடற்கூற்று பரிசோதனைகளில் அம்பலமாகியிருக்கின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவினர் நேற்று முன்தினம் 42 மற்றும் 62 வயதுடைய சந்தேகநபர்கள் இருவரைக் கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கீரிமலை, புதிய கொலனியில் வசிக்கும் ச. நடராசா(வயது 63) என்பவர் கொலை செய்யப்பட்டுள்ளார். வெளிமாவட்டத்தைச் சேர்ந்த இவர் கடந்த 20ஆண்டுகளாக கீரிமலையில் வசித்து வருகின்றார். அவர் வீட்டில் நினைவிழந்திருந்த நிலையில் காணப்பட்டதாக அவரை தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

பரிசோதனைகளை மேற்கொண்ட மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று அறிக்கையிட்டுள்ளனர். இந்த மரணத்தில் காங்கேசன்துறை பொலிஸார் சந்தேகம் கொண்டதால், உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தப்பட்டது. உடற்கூற்றுப் பரிசோதனையில் இவர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் காங்கேசன்துறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 5 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டமை தொடர்பாக எழுந்த முரண்பாட்டையடுத்தே இந்தக் கொலை நடந்துள்ளதென்பது முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

### ஒரு எரிபொருள் நிரப்பு நிலையமேனும்....

## என் பெயரில் இருப்பதை நிரூபித்தால் பதவியை இராஜினாமா செய்வேன்

### அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு



இலங்கையின் 25 மாவட்டங்களிலும் தேடிப்பாருங்கள், எனது பெயரில் ஒரு எரிபொருள் நிரப்பு நிலையம் இருந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்கிறேன் - என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (20) திங்கட்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற எரிபொருள் தொடர்பான கலந்துரையாடலின் பின் ஊடகவியலாளரால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் காரணங்களுக்காக எனது பெயரில் எரிபொருள் நிலையம் இருப்பதாக சிலர் தவறான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். எனது உறவினரின் பெயரில் எரிபொருள் நிலையம் செயற்படுகிறது. அதனைப் பயன்படுத்தி எனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் முகமாக சிலர் செயற்படுகின்றனர்.

இலங்கையில் மட்டுமல்ல, உலகில் எந்த பாகத்திலாவது எனது பெயரில் எரிபொருள் நிலையம் இருந்தாலோ அல்லது எரிபொருள் நிலையம் தொடர்பான பணம் எனது பெயரில் வைப்பிலிடப்பட்டிருந்தாலோ நிரூபித்துக் காட்டுங்கள். பதவி விலகுவது மட்டுமல்ல, குறித்த எரிபொருள் நிலையத்திலுள்ள எரிபொருட்களை இலவசமாக மக்களுக்கு வழங்கத் தயாராக இருக்கிறேன் – என்றார்.

## பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழ வீட்டுத்தோட்ட ஊக்குவிப்பு



**(சாவகச்சேரி நிருபர்)**

சாவகச்சேரியில் வறுமை நிலையில் வாடும் மக்களை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்காக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கைகளை ஊக்குவித்து வருகிறார்.

அதன் முதற்கட்டமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை (19) "எமக்கான மரக்கறிகளை நாமே உற்பத்தி செய்வோம்" எனும் கருப்பொருளில் சாவகச்சேரி நகர் மற்றும் கல்வயல் கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு மரக்கறி வகைகளை உற்பத்தி செய்வதற்கு தேவையான பொலித்தீன் பைகள், நாற்றுகள் மற்றும் விதைகளை வழங்கியிருந்தார்.

## கொடிகாமத்தில் கைக்குண்டு மீட்பு

**(சாவகச்சேரி நிருபர்)**



கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலாவி வடக்கு பகுதியிலுள்ள ஆலய காணியொன்றிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை (19) வெடிக்காத நிலையில் கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

ஆலய வளாகத்தில் சிரமதானப் பணி இடம்பெற்ற வேளையில் குறித்த கைக்குண்டு அடையாளம் காணப்பட்ட நிலையில் இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தி கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

இருப்பினும், குறித்த கைக்குண்டின் கிளிப் பகுதி இன்மையால் அதனால் ஆபத்து ஏற்படாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## காலில் முள் குத்தியதால் சிகிச்சைபெற்ற இளைஞன் உயிரிழப்பு

**(யாழ். நிருபர்)**

காலில் முள் குத்தியதாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளைஞன் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (20) உயிரிழந்துள்ளார்.

அராலி மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தருமராசா மதிகரன் (வயது 28) எனும் இளைஞனே உயிரிழந்துள்ளார்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் காலில் முள் ஒன்று குத்தியதாகவும், அவ்விடத்தில் வலி ஏற்பட்டுள்ளதாகவும் கூறி வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த நிலையில் விடுதியில் சேர்க்கப்பட்டு இளைஞனுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.

இந்நிலையில் இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## வேலைத்தளம் ஒன்றிலிருந்து 1,500லீற்றர் டீசல் திருடியவர் பலாங்கொடையில் கைது



**(ஏ.ஏ.எம்.பாயிஸ்)**

பலாங்கொடை பிரதேசத்தில் அரச வேலைத்தளம் ஒன்றிலிருந்து ஆயிரத்து 500லீற்றர் டீசல் திருடிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வேலைத்தளம் ஒன்றிலிருந்தே இவ்வாறு டீசல் திருடப்பட்டுள்ளதாக பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் பொதுமக்களிடம் இருந்து கிடைத்த தகவல்களுக்கமைய, மேற்படி நபர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கைது செய்யப்படும்போது அவரிடமிருந்து 600லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டதாகவும் இவை அவர் மீது வழக்கு தொடர சான்றுப் பொருளாக சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பலாங்கொடை பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

## 'நிலமற்றோருக்கான நிலம்' தொனிப்பொருளில் ஹட்டனில் நேற்று காணி தினம் அனுஷ்டிப்பு







**(க.கிஷாந்தன், மனூர சுதத் செல்லஹேவா)**

மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்களுடனான மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கத்தின் ஏற்பாட்டில் 'நிலமற்றோருக்கான நிலம்' எனும் தொனிப்பொருளில் காணி தினம் நேற்று (21) ஹட்டனில் அனுஷ்டிக்கப்பட்டது.

மலையக மக்களின் வாழ்வியலை பிரதிபலிக்கும் கலை, கலாசார விழுமியங்கள் பிரதிபலிக்கப்பட்டதுடன் ஹட்டன் மல்லியப்பு சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட ஊர்வல பேரணியானது ஹட்டன் சாரதா கலாசார மண்டபம் வரை சென்றது.

"வீடு கட்ட 20பேர்ச் காணி கொடு, வீட்டுடன் விவசாய காணி கொடு" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளையும் காட்சிப்படுத்தியவாறு கோஷங்களையும் எழுப்பினர்.

தெனியாய, மாத்தளை, பதுளை, நுவரெலியா போன்ற பகுதிகளை சேர்ந்த சமூக செயற்பாட்டாளர்கள், ஆய்வாளர்கள் என பல்வேறு பிரிவினரும் இந்த ஊர்வலப்பேரணியில் கலந்துகொண்டிருந்தனர்.

"மலையக மக்களின் கௌரவமான வாழ்வுக்கும், வாழ்வாதாரத்திற்குமான காணி உரிமையினை உறுதி செய்வதன் மூலம் எமது தேசத்தின் அபிவிருத்தியை பலப்படுத்தி நாட்டின் தேசிய நீரோட்டத்தில் பங்கு கொள்வதை உறுதி செய்வோம்" என இதன்போது வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## உணவுத் தேவைகளை பூர்த்தி செய்ய கூட்டுப் பண்ணைகள் அமைக்கத் தீர்மானம்

### கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னக்கோன்



**(கண்டி நிருபர்)**

பூஜாபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் எதிர்கால உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஐந்து கூட்டு விவசாயப் பண்ணைகளை நிறுவுவதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதனடிப்படையில், குறித்த பகுதியில் உள்ள விகாரைகள் மற்றும் தனியாருக்கு சொந்தமான காணிகளிலேயே இவ்வாறு விவசாயம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கண்டி மாவட்டச் செயலாளர் சந்தன தென்னக்கோன் தெரிவித்தார்.

இத்திட்டத்திற்காக விவசாயம் செய்யப்படாத நிலங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், மூன்று மாதங்களில் அறுவடை செய்யக்கூடிய உணவுப் பயிர்கள் இத்திட்டத்தின் கீழ் பயிரிடப்படும். இந்தப் பண்ணைகளை பார்வையிடுவதற்காக அண்மையில் கள விஜயத்தை மேற்கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பூஜாபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் வல்பொலபிட்டிய, உடமுதுன, பஹல ஹிங்குல்வல, உடஹிங்குல்வல மற்றும் பல்லேகம பஹல ஆகிய கிராம அதிகாரிகள் பிரிவுகளில் இந்தக் கூட்டுப் பண்ணைகள் செயற்படுத்தப்படவுள்ளன.

குறித்த காணிகளில் குறுகிய கால உணவுப் பொருட்கள் பயிரிடப்படவுள்ளதாகவும், காணி உரிமைக்கு இடையூறின்றி பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதனால் காணி உரிமைக்கு மாத்திரமன்றி பிரதேசத்தில் வசிக்கும் எந்தவொரு நபருக்கும் இடையூறின்றி உற்பத்திகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## கொள்கலனில் எரிபொருள் கொள்வனவு செய்ய முயற்சித்த ரஷ்யப் பிரஜையால் அமைதியின்மை

### ஹப்புத்தளையில் சம்பவம்

**(பதுளை நிருபர்)**




ஹப்புத்தளை எரிபொருள் நிலையத்தில் நேற்று(21) இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ள ரஷ்யப் பிரஜை ஒருவர், கொள்கலனில் எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு முயற்சித்ததால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளபோதிலும், குறித்த சுற்றுலாப் பயணி எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு அங்கு கூடியிருந்தவர்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இதனால் எரிபொருள் விநியோகம் சிறிது நேரம் தடைபட்டது.

ஹப்புத்தளை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு ஒரு வாரத்திற்கு பின்னர் எரிபொருள் விநியோகிக்கப்பட்டதால் நேற்றுக் காலை முதல் வாகனங்கள் நீண்ட வரிசையில் தரித்து வைக்கப்பட்டிருந்தமை காரணமாக கொழும்பு - ஹப்புத்தளை பிரதான வீதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எல்லைப் பாதுகாப்பு கொள்கைகளிலோ நடைமுறை இறையாண்மை எல்லைகளிலோ எந்த மாற்றமும் இல்லை

## ஜீ.எல்.பீரிஸிடம் அவுஸ்திரேலிய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் தெரிவிப்பு

அவுஸ்திரேலியாவின் எல்லைப் பாதுகாப்பு கொள்கைகளிலோ அல்லது நடைமுறை இறையாண்மை எல்லைகளிலோ எந்த மாற்றமும் இல்லை - என அவுஸ்திரேலியாவின் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஓ நீல் தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கு விஜயம் செய்திருந்த அவுஸ்திரேலியாவின் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கிளேர் ஓ நீலுடன் இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சந்திப்பொன்றில் ஈடுபட்டிருந்தார். கடந்த 19ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அவுஸ்திரேலியாவின் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கிளேர் நேற்று (21 ) இங்கிருந்து புறப்பட்டிருந்தார்.

அதற்கமைய இருவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (20) இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவின்போது இலங்கையுடனான இருதரப்பு




உறவுகளுக்கு அவுஸ்திரேலியா அளிக்கும் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கும் வகையில், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக ஓ நீல் மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டு விஜயம் இதுவாகும்.

வர்த்தகம், முதலீடு மற்றும் கல்வி வாய்ப்புகள், நாடு கடந்த குற்றங்களை எதிர்த்துப் போராடுதல் மற்றும் மக்களிடையே வலுவான இணைப்புகளை உருவாக்குதல் போன்ற பகிரப்பட்ட நலன்களை அடைவதற்கான ஒத்துழைப்பு மற்றும் உறுதிப்பாட்டின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட வலுவான இருதரப்பு உறவை இரு அமைச்சர்களும் இதன்போது சுட்டிக்காட்டினர்.

ஒழுங்கற்ற இடம்பெயர்வுத்துறையில் தங்கத் தரத்திலான ஒத்துழைப்பு உள்ளடங்கலாக அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பங்காளித்துவத்தை ஆழப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து இரு அமைச்சர்களும் கலந்துரையாடினர். அவுஸ்திரேலியாவின் எல்லைப் பாதுகாப்பு கொள்கைகளிலோ அல்லது நடைமுறை இறையாண்மை எல்லைகளிலோ எந்த மாற்றமும் இல்லை என அமைச்சர் ஓ நீல் குறிப்பிட்டார்.

ஆட்கடத்தல்காரர்களை முறியடிப்பதற்கும், அப்பாவி மக்களின் உயிரிழப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கு ஆபத்தை ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கும் தொடர்ந்து இணைந்து பணியாற்றுவதற்கான உறுதியை இரு அமைச்சர்களும் மீண்டும் உறுதிசெய்தனர்.

போதைப்பொருள் கடத்தல் உட்பட அனைத்து வகையான நாடுகடந்த குற்றங்களையும் தடுப்பதிலும், எல்லை நிர்வாகத்தை வலுப்படுத்துவதிலும் தொடர்ந்து நெருக்கமான ஒத்துழைப்பை இரு அமைச்சர்களும் குறிப்பிட்டனர். இந்த எதிர் நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கு அவர்கள் உறுதியளித்தனர். அவுஸ்திரேலிய அமைச்சர் மற்றும் அதிகாரிகள் ஆட்கடத்தலை தடுப்பது குறித்த வட்டமேசை கலந்துரையாடலில் பங்கேற்றனர். அவுஸ்திரேலியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளின் அதிகாரிகள் தற்போதைய நிலைமையின் மேலோட்டத்தை வழங்கியதுடன், ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தி, மேம்படுத்துவதற்கான புதிய வாய்ப்புக்களை ஆராய்ந்தனர்.

ஆட்கடத்தல் மற்றும் ஏனைய நாடுகடந்த குற்றங்களுக்கு எதிரான அவுஸ்திரேலியா - இலங்கை கூட்டுச் செயற்குழுவின் கீழ் நடைபெற்று வரும் ஒத்துழைப்பில் திருப்தியடைவதாக இரண்டு அமைச்சர்களும் தெரிவித்ததுடன், நிபந்தனைகள் அனுமதிக்கப்படும்போது, இலங்கையில் கூட்டுச் செயற்குழுவின் 8ஆவது சுற்றை கூடிய விரைவில் நடத்துவதற்கு ஒப்புக்கொண்டனர்.

நடைமுறை இறையாண்மை எல்லைகள் எனப்படும் எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் கீழ் புலனாய்வுப் பகிர்வு, தடுப்பு, இடையூறு, இடைமறிப்பு மற்றும் திரும்புதல் ஆகியவற்றில் இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான இருதரப்பு ஒத்துழைப்பையும் இரு அமைச்சர்களும் குறிப்பிட்டனர்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமைச்சர், தற்போதைய பொருளாதார சவால்களை முறியடிக்கும் முயற்சிகளில் அவுஸ்திரேலியாவின் வலுவான ஆதரவை மீண்டும் வலியுறுத்தியதுடன், இந்தச் சூழலில் இலங்கையுடன் ஒத்துழைப்பதற்கு ஒப்புக்கொண்டார்.

### 200 வருடங்கள் காப்பாற்றிய...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (21) சபை அமர்வில் கலந்துகொண்ட போது, நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காத இந்த அரசாங்கம் இருக்கும் நாடாளுமன்ற அமர்வுகளை நிராகரிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அறிவித்த பின்னர், அங்கு பெருந்தோட்ட மக்களின் நிலைமையை எடுத்துக்கூறியே வடிவேல் சுரேஷ் வெளிநடப்புச் செய்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

பெருந்தோட்ட மலையக மக்கள் பட்டினியினாலும் பஞ்சத்தினாலும் பல இன்னல்களுக்கு முகம்கொடுத்து கொண்டு வீதியில் வரிசையில் நின்று கொண்டிருக்கின்றார்கள்.

மண்ணெண்ணெய் இல்லை. எரிபொருள் இல்லை. எரிவாயு இல்லை. பாடசாலை மாணவர்களுக்கு கல்வியும் இல்லை. இத்தகைய சூழ்நிலையில் நாடாளுமன்றத்தில் அமர்ந்து கொண்டு பணத்தையும் நேரத்தையும் விரயம் செய்து கொண்டிருக்கின்றோம்.

நாடாளுமன்றத்திற்கு ஒருநாள் அமர்விற்கு செலவு செய்யும் 80இலட்சம் ரூபா பணத்தை எங்களுக்கு தாருங்கள்.

நாங்கள் பெருந்தோட்ட மலையக மக்களுக்கு உணவளிக்கிறோம். அவர்கள் கடந்த 200 வருடங்களாக நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தந்தவர்கள். சிலோன் ரீ என்ற பெருமைக்கு சொந்தக்காரர்கள். பெருந்தோட்ட மலையக மக்களே இன்று பட்டினியினாலும் பஞ்சத்தினாலும் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

முதலில் பட்டினியாலும் பஞ்சத்தினாலும் துன்பப்படும் நாட்டு மக்களுக்கு உணவிற்கும் அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்யுங்கள் எனக்கூறி வடிவேல் சுரேஷ் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபை அமர்விலிருந்து வெளியேறினர்.

### 21ஆவது திருத்தத்தின் சில...

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பிலான உயர்நீதிமன்றின் வியாக்கியானம் நேற்று நாடாளுமன்றில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவினால் அறிவிக்கப்பட்டது.

இதன்படி குறித்த வரைவின் சில சரத்துகள் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் சில சரத்துகள் அரசியலமைப்புக்கு முரணாக அமைந்துள்ளமையால் அவற்றை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என்று உயர்நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியுள்ளது.

உயர் நீதிமன்றம் பின்வரும் தீர்மானத்தினை மேற்கொண்டுள்ளது:

(i) சட்டமூலத்தின் 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 15, 23, 24, 26, 27, 28 மற்றும் 36ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் உறுப்புரை 4(ஆ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் உறுப்புரை 3 உடன் ஒவ்வாததாகவிருப்பதனால் அது உறுப்புரை 84(2)ஆல் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக விசேட பெரும்பான்மை மூலமும் உறுப்புரை 83இன் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் மட்டுமே சட்டமாக்கப்படலாம்;

(ii) சட்டமூலத்தின் 2, 3, மற்றும் 4ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் உறுப்புரை 4(உ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் உறுப்புரை 3உடன் ஒவ்வாததாகவிருப்பதால், அது உறுப்புரை 84(2)ஆல் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக விசேட பெரும்பான்மை மூலமும் உறுப்புரை 83இன் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் மட்டுமே சட்டமாக்கப்படலாம்;

(iii) சட்டமூலத்தின் 14ஆம் வாசகம் தற்போது உள்ளவாறு அரசியலமைப்பின் உறுப்புரை 4(ஆ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் உறுப்புரை 3உடன் ஒவ்வாததாகவிருப்பதால், அது உறுப்புரை 84(2)ஆல் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக விசேட பெரும்பான்மை மூலமும் உறுப்புரை 83இன் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் மட்டுமே சட்டமாக்கப்படலாம்:

எனினும், ஜனாதிபதி தனது நியமத்தராக ஆள் ஒருவரை பேரவையின் உறுப்பினராக நியமிப்பதற்கு முன்மொழியப்பட்ட உறுப்புரை 41அ(1) ஏற்பாடு செய்யுமாயின், அத்துடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள கருதப்படும் ஏற்பாட்டை நீக்குவதற்கு முன்மொழியப்பட்ட உறுப்புரை 41அ(6) பொருத்தமாகத் திருத்தியமைக்கப்பட்டால், மக்கள் தீர்ப்பின் அவசியம் இல்லாதொழியும்;

(iv) சட்டமூலத்தின் 19ஆம் வாசகம் அரசியலமைப்பின் உறுப்புரை 4(ஆ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் உறுப்புரை 3உடன் ஒவ்வாததாகவிருப்பதால், அது உறுப்புரை 84(2)ஆல் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக விசேட பெரும்பான்மை மூலமும் உறுப்புரை 83இன் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் மட்டுமே சட்டமாக்கப்படலாம்;

(V) சட்டமூலத்தின் வாசகம் 30(அ) மக்களின் நீதித்துறைத் தத்துவத்தை வரையறுப்பதற்கு நாடுவதுடன், அதனால் அது அரசியலமைப்பின் உறுப்புரைகள் 4(இ) மற்றும் 4(உ)உடன் சேர்த்து வாசிக்கப்படும் உறுப்புரை 3உடன் ஒவ்வாததாகவிருப்பதால், அது உறுப்புரை 84(2)ஆல் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக விசேட பெரும்பான்மை மூலமும் உறுப்புரை 83இன் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் மட்டுமே சட்டமாக்கப்படலாம்;

(vi) சட்டமூலத்தின் 39ஆம் வாசகம் அரசியலமைப்பின் உறுப்புரை 129(1)ஐ நீக்குவதற்கு நாடும் அளவுக்கு உள்ளதால் அரசியலமைப்பின் உறுப்புரை 4(இ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் உறுப்புரை 3இற்கு ஒவ்வாததாகவிருப்பதால், அது உறுப்புரை 84(2)ஆல் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக விசேட பெரும்பான்மை மூலமும் உறுப்புரை 83இன் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் மட்டுமே சட்டமாக்கப்படலாம்;

(vii) அரசியலமைப்பின் உறுப்புரை 4(ஆ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் உறுப்புரைகள் 2 மற்றும் 3 ஆகியவற்றுடன் சட்டமூலத்தின் 43ஆம் வாசகம் ஒவ்வாததாகவிருப்பதால், அது உறுப்புரை 84(2)ஆல் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக விசேட பெரும்பான்மை மூலமும் உறுப்புரை 83 இன் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் மட்டுமே சட்டமாக்கப்படலாம்; மற்றும்

(viii) சட்டமூலத்தின் 51ஆம் வாசகம் ஏனையவற்றுடன் பிரதம அமைச்சர் தவிசாளராக இருக்கும் தேசிய பாதுகாப்புப் பேரவை என்று தலைப்பிடப்பட்ட XIX-இ அத்தியாயத்தை அறிமுகப்படுத்துவதற்கு நாடுகின்றது;

முன்மொழியப்பட்டுள்ள உறுப்புரைகள் 156ஒ(1) மற்றும் 156ஒ(2) ஆகியவை அரசியலமைப்பின் உறுப்புரை 4(ஆ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் உறுப்புரைகள் 1, 2 மற்றும் 3 ஆகியவற்றுடன் ஒவ்வாததாக விருப்பதால், அது உறுப்புரை 84(2)ஆல் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக விசேட பெரும்பான்மை மூலமும் உறுப்புரை 83இன் பயனாக மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் மட்டுமே சட்டமாக்கப்படலாம்;

எனினும், முன்மொழியப்பட்டுள்ள தேசிய பாதுகாப்புப் பேரவையின் ஆக்க அமைப்பை மாற்றுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள உறுப்புரைகள் 156 ஒ(1) மற்றும்156ஒ(2) ஆகியவை திருத்தப்பட்டு ஜனாதிபதி முன்மொழியப்பட்ட பேரவையின் தவிசாளராக நியமிக்கப்படின் அத்தகைய ஒவ்வாமை இல்லாதொழியும்.

உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு சபை கூட்ட நடவடிக்கைகளின் அதிகார அறிக்கையில் அச்சிடப்பட வேண்டும் - என்றார் சபாநாயகர்.

### நாடாளுமன்றத்தால்...

*•யோ.தர்மராஜ்*

மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கான உரிய தீர்வை முன்வைக்காது நாடாளுமன்ற அமர்வுகளை கூட்டுவதில் எவ்வித பயனுமில்லை எனத் தெரிவித்து, பிரதான எதிர்க்கட்சிகள் இவ்வார சபை அமர்வுகளை நிராகரித்து நேற்று (21) வெளிநடப்புச் செய்தன.

நாட்டில் துன்பப்படும் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவோ அல்லது இந்த நாட்டின் பாரதூரமான பொருளாதார வீழ்ச்சியைத் தடுக்கவோ அல்லது இந்த நாட்டைக் கட்டியெழுப்பவோ எந்தத் திட்டமும் இல்லாத அரசைக் கொண்ட இந்த நாடாளுமன்றத்தின் அமர்வுகளை ஒரு வாரத்துக்கு அதாவது இந்த வாரம் முழுவதும் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அறிவித்தார்.

இவர் அறிவித்து சிறிது நேரத்தில், பிரச்சினைகளுக்கு தீர்வை நாடாளுமன்றத்தில் முன்வைக்காது, சபையில் இடம்பெறும் விவாதங்கள் மற்றும் கருத்துகளால் எவ்விதப் பயனுமில்லை. எனவே, எதிர்க்கட்சிகளான நாங்கள் இவ்வார சபை அமர்வுகளை முற்றாக நிராகரிக்க தீர்மானித்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க அறிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (21) சபை அமர்வில் கலந்துகொண்டதன் பின்னரே சபை நடவடிக்கையை புறக்கணிப்பதாக அறிவித்தனர்.

அங்கு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,

தாங்கிக்கொள்ள முடியாத துயரங்களுடன் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்விதத் தீர்வும் இல்லை. எரிபொருள், எரிவாயு வரிசைகளும் அவ்வாறேவுள்ளன. அரசாங்கம் மாறியதுடன், வரிசைகளும் அதிகரித்துள்ளன. குழந்தைகளுக்கு பால்மா இல்லை. தொழிலாளர்களுக்கு தொழில் இல்லை. தனியார்த்துறை, தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. அரச ஊழியர்கள் நெருக்கடியில் இருக்கின்றனர். பெருந்தோட்டத் தொழிலாளர்கள், தொழிற்துறையினர், சுயத்தொழிலாளர்கள் என அனைத்து மக்களும் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இவற்றுக்கிடையில், ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் தோல்வியுற்றுள்ளது. மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்விதத் தீர்வும் இல்லை. பிரச்சினைகளை மாத்திரம் முன்வைக்கும் மோசமான அரசியலுக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. மக்களால் இந்த துன்பத்தை தாங்கிக்கொள்ள முடியாது. இவை இரண்டரை வருட தான்தோன்றித்தனமான, எதேச்சதிகார ஆட்சியின் பிரதிபலனாகவுள்ளது.

ஜனாதிபதியின் சுபீட்சமான நோக்கு இன்று சுபீட்சமற்ற நோக்காக மாறியுள்ளது. மக்களுக்கு உண்ண உணவில்லை. மக்களால் வாழ்வாதாரத்தை கொண்டுச்செல்ல முடியவில்லை. மக்களுக்கு வேலைவாய்ப்பில்லை. வைத்தியசாலைகளில் மருந்தில்லை. போக்குவரத்துகள் முடங்கியுள்ளன. பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், எந்தவொரு தீர்வையும் வழங்காத அரசாங்கமாக தற்போதைய அரசாங்கம் மாறியுள்ளது. இந்த சபையையும் பேச்சுக்கூடமாக மாற்றியுள்ளனர். முன்வைக்கும் எந்தவொரு யோசனைக்கும் சாதாரண தீர்வில்லை. மருந்துகள் கொண்டுவருவதிலும் மோசடிகள் செய்கின்றனர். நாட்டு மக்களின் பிரச்சினைகள் அரசாங்கத்திற்கு தெரியவில்லையா? இதற்கு தீர்வில்லையா?

வரிசையில் நிற்கும் மக்கள் படும் துன்பங்களைப் புரிந்துகொள்ளாத, பால் மா இன்றி தவிக்கும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் துயரங்களைப் புரிந்து கொள்ளாத, திருடுவதற்கும் சுரண்டுவதற்கும் கை தூக்கும் இந்த நாடாளுமன்றம் வெறும் பேச்சுக்கூடம் மாத்திரமே.

இதன்போது குறுக்கிட்ட ஆளுந்தரப்பு உறுப்பினருக்கு பதிலளித்தார் சஜித்.

வாயை மூடிக்கொண்டிருங்கள். உங்களுக்கு முதுகெலும்பிருந்தால் வீதியில் இறங்குங்களேன். எங்களால் வீதியில் இறங்கிச் செல்ல முடியும் எனவும் கூறினார்.

நாடாளுமன்றத்தால் மக்களுக்கு என்ன செய்ய முடியும்? உங்களால் எரிபொருள், எரிவாயு, மண்ணெண்ணெய், பால்மா, உணவுப் பொருட்கள், அரிசி மற்றும் உரத்தை கொடுக்க முடியுமா? உங்களுக்கு வெட்கம் இல்லையா? கொள்ளையடித்துக்கொண்டு மாறி மாறி ஆட்சி செய்கின்றீர்கள். எரிவாயு இல்லை. ஆனால், அதிலும் கொள்ளையடிக்க முடியும். நீங்கள் 220 இலட்சம் மக்களைக் கொலைசெய்யப் போகின்றீர்கள்.

இந்த நாட்டில் துன்பப்படும் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவோ அல்லது இந்த நாட்டின் பாரதூரமான பொருளாதார வீழ்ச்சியைத் தடுக்கவோ அல்லது இந்த நாட்டைக் கட்டியெழுப்பவோ எந்தத் திட்டமும் இல்லாத அரசைக் கொண்ட இந்த நாடாளுமன்றத்தின் அமர்வுகளை ஒரு வாரத்துக்கு அதாவது இந்த வாரம் முழுவதும் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளோம். நாங்கள் மக்களுடனே இருந்தோம். இனியும் இருப்போம் - என்றார்.

இங்கு உரையாற்றிய ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்க,

நாட்டின் நெருக்கடி உருவானது தொடக்கம் பல மாதங்களாக நாடாளுமன்றம் கூடியது. இங்கு இடம்பெற்ற விவாதங்கள், கருத்துகள் என எதுவும் சிறுதேனும் நெருக்கடியிலிருந்து மக்கள் மீள்வதற்கு தாக்கம் செலுத்தவில்லை. எனவே, நாடாளுமன்ற மக்களின் குரல்களை செவிமடுக்காத இடமாக மாறியுள்ளது.

நாங்கள் நாடாளுமன்றத்தை கூட்டினாலும் வெளியில் மருந்துகள் இல்லாது வைத்தியசாலைகளில் குழந்தைகள் இறக்கும் நிலைமை உருவாகியுள்ளது. சாதாரண மக்களும் எரிபொருள், எரிவாயு வரிசைகளில் உயிரிழக்கும் நிலைமை காணப்படுகின்றது. கட்டுமானப் பணிகளை முழுமையாக நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளனர். தாங்கிக்கொள்ள முடியாதளவு பொருட்களின் விலைகள் அதிகரிப்புக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு மக்கள் பாரிய துன்பங்களுக்கு முகம்கொடுத்துள்ள நிலையில், நாடு முழுவதிலும் போராட்டங்கள் வெடித்தன. ஜனாதிபதிக்கு எதிராக அப்போராட்டங்கள் இருந்தன. எனினும், மக்களின் பிரச்சிளைகளை முன்வைத்த போதெல்லாம் ஜனாதிபதி அதற்கு செவிசாய்க்கவில்லை. நானே நன்றாக செய்தேன், எனக்கே நன்றாக தெரியும் என்ற ஆணவத்தில் இருந்தார். இதனாலேயே அவரை வீட்டுக்குச் செல்லுமாறு கூறினர். இது சாதாரண கோரிக்கையாகும்.

மக்களின் துன்பங்களுக்கு உரிய தீர்வை வழங்காத ஜனாதிபதி எதற்கு என்ற கேள்வி எழுந்தது. ஆனால், ஜனாதிபதியும் பிரதமரும் கள்ளத்தனமாக புதிய அரசாங்கத்தை அமைத்தனர். 52 நாட்கள் அரசியல் புரட்சியை போன்று தனக்குள்ள அதிகாரத்தை கொண்டு புதிய பிரதமரை ஜனாதிபதி நியமித்தார். அவர் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காது, பிரச்சினைகளை பட்டியலிட்டு மக்களுக்கு அறிவிக்கின்றார்.

தற்போதைய அரசாங்கம், ஜனாதிபதி, பிரதமர், நாடாளுமன்றத்தையும் மக்கள் நம்பிக்கை கொள்வார்களா, சிறிதளவேனும் பிரச்சினையிலிருந்து மீள முடிந்துள்ளதாக மக்கள் நம்பிக்கைகொள்ள முடியுமா? புதிய பிரதமர், அவர் தலைமையிலான அமைச்சரவையும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முடியாது குறுகிய காலத்தில் தோல்வியுற்றுள்ளது என்பது தெளிவாகியுள்ளது.

நாடாளுமன்றத்தால் வரிசையில் நிற்கும் மக்களுக்கும் தீர்வு கிடைக்காது, குழந்தைகளுக்கு பால்மா கிடைக்காது. மருந்தில்லாத நோயாளிகளுக்கு உரமில்லாத விவசாயிகளுக்கு தீர்வு கிடைக்காது. மக்கள் செல்லுமாறு கூறும் ஜனாதிபதியும் மக்கள் நிராகரித்துள்ள பிரதமரும் இருக்கும் இந்த அரசாங்கத்திற்கு மக்கள் ஆதரவில்லை. எனவே, இந்தப் பிரச்சினையிலிருந்து மீள்வதற்கான குறுகிய காலத் திட்டத்தை முன்வைத்தாக வேண்டும்.

இன்று ஜனாதிபதியும் பிரதமரும் ஒரே துறைகளை இருமுறை அழைத்து சந்திப்பதன் ஊடாகஅதிகாரப் போட்டிகள் உருவாகியுள்ளன. பிரச்சினைகளுக்கு தீர்வை நாடாளுமன்றத்தில் முன்வைக்காது, சபையில் இடம்பெறும் விவாதங்கள் மற்றும் கருத்துகளால் எவ்வித பயனுமில்லை. எனவே, எதிர்க்கட்சிகளான நாங்கள் இவ்வார சபை அமர்வுகளை முற்றாக நிராகரிக்க தீர்மானித்துள்ளோம் - என்றார்.

**மனோ எம்.பி.**

இங்கு பேசிய தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., அரசாங்கம் மிகவும் கேவலமான நிலைக்கு சென்றுவிட்டதாக கூறினார்.

கொழும்பில் மட்டுமல்ல மலையகத்திலும் மக்கள் மிகவும் கஷ்டப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இப்படி நிலைமை தொடருமாயின், பிரதமர் ரணிலின் கூட்டங்களுக்கு சென்று வீணாக நாங்கள் பேசுவதிலும் அர்த்தமில்லை. மக்களின் பிரச்சினைகளை பாருங்கள் என்றார் மனோ.

திகதி 20.06.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4792 — ரூ. 8,065,150.00 — ஆங்கில எழுத்து P — 6 7 7 6 7 3 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,344,536.20
ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 1270 — ரூ. 1,611,620.00 — வெற்றி இலக்கங்கள் 1 9 8 6 5 0 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,945,579.20
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3034 — ரூ. 65,414,591.60 — ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 41 51 56 57 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,000,000.00
தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம்: 822 — ரூ. 2,033,900.00 — P 32 60 64 82 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 115,396,737.20
ராசிசுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 101 — ரூ. 4,440,000.00 — வெற்றி இலக்கங்கள் 13 23 40 45 சிம்மம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,657,103.20
மெகா பவர் 25+ — சீட்டிழுப்பு இலக்கம் 1140 — ரூ. 2,873,340.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 257,781,990.00 — B 14 03 15 19 48 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00
தேசிய லொத்தர் சபை National Lotteries Board — Web: www.nlb.lk

# மட்டக்களப்பு இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் மீது எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து தாக்குதல்

## உதவிக் கல்விப் பணிப்பாளர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் மட்டு. வலயக்கல்விப் பணிப்பாளர் நேற்று முன்தினம் (20) மாலையில் வாகனத்துக்கு எரிபொருளை நிரப்பிக் கொண்டிருந்தபோது அதனை வீடியோ படம் எடுத்து இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் மீது வலயக்கல்விப் பணிப்பாளரின் கணவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார். அவர் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதுடன், தாக்குதலை மேற்கொண்டவரை கைதுசெய்துள்ளதாக மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு - திருகோணமலை வீதி தாண்டவன்வெளி சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை, ஆசிரியர்கள் மற்றும் கிராமசேவகர்கள் உட்பட அரச திணைக்களங்களைச் சேர்ந்தவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட அட்டை முறையில் பெற்றோல் விநியோகம் இடம்பெற்று வந்தது.

இந்நிலையில், மட்டு வலயக்கல்விப் பணிப்பாளர் தனது வாகனத்துக்கு எரிபொருளை நிரப்பிக் கொண்டிருந்தபோது, அதனை மட்டக்களப்பு இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் உதயரூபன் தனது கைத்தொலைபேசி ஊடாக வீடியோ படம் எடுத்துக்கொண்டதை அவர் கண்டுகொண்டார்.

இதனையடுத்து இது தொடர்பாக தனது கணவரான கல்குடா வலயக்கல்வி பிரதி பணிப்பாளரிடம் அவர் தெரிவித்ததையடுத்து, அவர் உடனடியாக குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு சென்று இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவரிடம், "ஏன் எனது மனைவியின் வாகனத்தை வீடியோ எடுத்தீர்கள்" என கேட்டதையடுத்து, இருவருக்கும் வாக்குவாதம் முற்றியது. இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் மீது வலயக்கல்விப் பணிப்பாளரின் கணவர் தாக்குதலை மேற்கொண்டதையடுத்து, அவர் காயமடைந்தார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் உடனடியாக காயமடைந்தவரை வைத்தியசாலையில் சேர்த்ததுடன் தாக்குதலை மேற்கொண்டவரை கைதுசெய்துள்ளனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சாய்ந்தமருதில் எரிபொருள் வழங்கலில் முறைகேடு : பிரதேச செயலாளரிடம் தீர்வைக்கோரி சென்ற மக்கள்!





(மாளிகைக்காடு நிருபர்)

சாய்ந்தமருது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முறைகேடாக எரிபொருள் விநியோகம் நடைபெறுவதாகவும் இவ்விடயங்களில் பிரதேச செயலகம் பாராமுகமாக இருப்பதாகவும் தெரிவித்து சாய்ந்தமருது இளைஞர்கள் தலைமையிலான எரிபொருளுக்கு காத்திருந்தோர் நேற்று (21) காலை சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக்கை அலுவலகத்தில் சந்தித்து எரிபொருள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இரவுநேரங்களில் முறைகேடாக எரிபொருள் வழங்கப்படுவதாகவும், பாதுகாப்புக்கு நிற்கும் பாதுகாப்புப் படையினரும் இந்த செயலுக்கு துணைபோவதாகவும் தெரிவித்த பொதுமக்கள், எரிபொருள் வழங்குவதற்கு ஒரு முறையான பொறிமுறையை உருவாக்குமாறும் தொண்டரணியாக இந்த விடயத்தை கையாள முடியுமான உதவிகளை வழங்க தாங்கள் தயாராக இருப்பதாகவும், நேற்று நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை எரிபொருள் கேட்டும் எரிபொருள் வழங்கப்படாமையினால் நீர் விநியோகம் தடைப்பட்டிருந்ததாகவும் பிரதேச செயலாளருக்கு தெரிவித்தனர்.

இதுதொடர்பில் நிறைய விடயங்களை கலந்துரையாடிய சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் முறையான தீர்வொன்றை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும், முறைகேடுகள் இடம்பெறுவதை ஆதாரத்துடன் சமர்ப்பிக்குமாறும் பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

ஏற்கனவே திட்டமிட்டு இன்று (22) இடம்பெறவுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள், அரச உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலில் இந்த பிரச்சினைக்கான தீர்வைப்பெற தான் முயற்சிப்பதாகவும் இதன்போது தெரிவித்தார். சாய்ந்தமருது எரிபொருள் நிலைய முன்றலிலிருந்து வாகனங்களை அங்கு நிறுத்திவிட்டு நடைபவனியாக பிரதேச செயலகத்தை வந்தடைந்த பொதுமக்கள் சார்பில் சமூக செயற்பாட்டாளர்களான சக்கி செயின், எம்.எம்.ஹில்மி, முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எம்.எம்.தில்சாத், எப்.எம்.டில்ஷாத் உட்பட பலரும் கலந்துகொண்டு இந்த பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

# மட்டு. மாவட்ட மரண விசாரணை அதிகாரிகளுக்கான எரிபொருள் விநியோகம் உறுதிப்படுத்தப்படவேண்டும்

(மண்டூர் நிருபர்)



மட்டக்களப்பு மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரிகள் தங்களின் கடமைகளை உரிய நேரங்களில் செய்து முடிப்பதற்கு மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிலையங்களில் சிரமமில்லாமல் பெற்றுக்கொள்வதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துத்தரவேண்டும் - என்று மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் இணைப்பாளரும் திடீர் மரண விசாரணை அதிகாரியுமான எம்.எஸ்.எம்.நசீர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டினால் நாங்கள் வரிசையில் நின்று எரிபொருளை பெறவேண்டியுள்ளது. இதனால் மாவட்டத்தில் இடம்பெறும் திடீர் மரணங்களை சம்பவ இடங்களுக்குச் சென்று விசாரணை செய்து உறவினர்களிடம் பிரேதங்களை கையளிப்பதில் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, எங்களது கடமைகளை சிரமங்களின்றி செய்வதற்கு வரிசையில் நின்று எரிபொருளை பெறாமல் மாவட்டத்திலுள்ள திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்குமான எரிபொருளை அனைத்து எரிபொருள் நிலையங்களில் பெறுவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் இவ்விடயம் பற்றி மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் கவனத்திற்கு கொண்டுவரப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# வவுணதீவில் கசிப்பு விற்பனை நிலையத்தை முற்றுகையிட்ட பொலிஸார் மீது தாக்குதல்

## பொலிஸ் ஒருவர் காயம் - 6 பெண்கள் உட்பட 12 பேர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள ஊத்துமடு பாவக்கொடிசேனை பிரதேசத்தில் கசிப்பு விற்பனை செய்துவரும் வீடொன்றை நேற்று முன்தினம் (20) முற்றுகையிட்டு, கசிப்பு வியாபாரியை கசிப்புடன் கைதுசெய்ய முற்பட்டபோது அங்கிருந்த குழு ஒன்று பொலிஸார்மீது மேற்கொண்ட தாக்குதலில் பொலிஸ் ஒருவர் காயமடைந்ததுடன், வாகனத்தை உடைத்து சேதப்படுத்திய சம்பவம் தொடர்பாக 6 பெண்கள் உட்பட 12 பேரை கைதுசெய்துள்ளதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.நிசந்த அப்புஹாமி தெரிவித்தார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.நிசந்த அப்புஹாமி தலைமையிலான பொலிஸார் நேற்று முன்தினம் (20) காலை 11 மணியளவில் குறித்த பிரதேசத்திலுள்ள வீட்டை முற்றுகையிட்டு அங்கு கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இளைஞன் ஒருவரை 2 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்புடன் கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்த இளைஞனை ஜீப்பில் ஏற்றுவதற்கு பொலிஸார் முற்பட்டபோது, குறித்த இளைஞனின் சகோதரி உட்பட்ட உறவினர்கள் கொண்ட குழுவினர் அவரை ஜீப்பில் ஏற்றவிடாது பொலிஸாரை தடுத்தனர். இதன்போது பொலிஸாருக்கும் அவர்களுக்கும் இடையே இழுபறி இடம்பெற்றுக்கொண்டிருந்த போது குறித்த இளைஞன் அங்கிருந்து தப்பியோட முயற்சித்த நிலையில், அவரை பொலிஸார் சுற்றிவளைத்து மீண்டும் பிடித்தனர்.

இதனையடுத்து குறித்த இளைஞனை ஜீப்பில் ஏற்றியபோது பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாக்குதலில் பொலிஸார் ஒருவர் காயமடைந்ததுடன், ஜீப்பின் கண்ணாடி உடைந்து சேதமடைந்தது. இதனையடுத்து காயமடைந்த பொலிஸாரை மட்டு. போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இதன்பின்னர் பொலிஸார் கடமையை செய்யவிடாது தடுத்த மற்றும் பொலிஸாரின் ஜீப்பை உடைத்து சேதப்படுத்திய 6 பெண்கள் உட்பட 12 பேரை கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதையடுத்து அவர்களை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட இளைஞன் ஏற்கனவே கசிப்பு கடத்தல் மற்றும் வியாபாரத்தில் ஈடுபட்ட இரு சம்பவங்களில் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு ஒரு வழக்கில் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்தியதுடன், மோட்டார்சைக்கிளில் கசிப்பு கடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட வழக்கில் நீதிமன்றம் மோட்டார்சைக்கிளை பறிமுதல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு படகில் கடத்த முயன்ற ரூ.17 இலட்சம் பெறுமதியான 1700 கிலோ பீடி இலைகள்

## கடலோர பாதுகாப்புப் பொலிஸாரால் பறிமுதல்



(மட்டக்களப்பு நிருபர்)

தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு படகில் கடத்த முயன்ற ரூ. 17 இலட்சம் பெறுமதியான பீடி இலைகளை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு சமீபகாலமாக மஞ்சள், பீடி இலை, களைக்கொல்லி மருந்து உள்ளிட்ட பொருட்கள் கடத்தப்பட்டு வருகின்றன. இதனை அவ்வப்போது கியூ பிரிவு பொலிஸார், கடலோர பாதுகாப்புப் பொலிஸார் மடக்கிப்பிடித்து வருகின்றனர்.

அதேபோன்று போதைப்பொருட்கள் கடத்தலும் நடந்துவருகிறது. இதனால் மாவட்ட மரைன் பொலிஸார் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனாலும் தொடர்ந்து கடத்தல் சம்பவங்கள் நடந்து வருகின்றன.

இந்நிலையில், தூத்துக்குடி தருவைகுளம் அருகே உள்ள கடற்கரையிலிருந்து இலங்கைக்கு பீடி இலை கடத்தப்படுவதாக தூத்துக்குடி மாவட்ட கியூ பிரிவு பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில், இன்ஸ்பெக்டர் விஜய அனிதா தலைமையில் சப்-இன்ஸ்பெக்டர்கள் ஜீவமணி மற்றும் பொலிஸார் இரகசிய கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, பொலிஸாரை பார்த்ததும் கடற்கரையில் இருந்த ஒரு படகு வேகமாக கடலுக்குள் புறப்பட்டுச் சென்றது. இதைத் தொடர்ந்து பொலிஸார் மீனவர்களின் உதவியுடன் மற்றொரு படகில், கடலுக்குள் சென்ற படகை விரட்டிச் சென்றனர். அப்போது அந்த படகில் இருந்தவர்கள், மறைத்துவைத்திருந்த மூடைகளை தூக்கி கடலில் வீசினர். பின்னர் அங்கிருந்து வேகமாக தப்பிச் சென்றுவிட்டனர்.

பின்னர் கடலில் மிதந்து வந்த மூடைகளை பொலிஸார் சேகரித்தனர். மொத்தம் 38 மூடைகள் இருந்தன. அந்த மூடைகளை பிரித்து பார்த்தபோது, ஒவ்வொரு மூடையிலும் சுமார் 45 கிலோ எடை கொண்ட பீடி இலைகள் இருந்தன. மொத்தம் 1,700 கிலோ பீடி இலைகள் இருந்தன. இதன் இலங்கை மதிப்பு சுமார் ரூ. 17 இலட்சம் என்று கூறப்படுகிறது.

மேலும் கியூ பிரிவு பொலிஸார், பீடி இலை மூடைகளை கடலில் வீசிவிட்டு தப்பிச்சென்ற கும்பல் குறித்து விசாரித்து, அவர்களை தேடி வருகின்றனர்.

## போடியார் புலம்பல்!



***அத்தியாவசியப் பொருட்கள் பெற குறிப்பாக டீசல், பெற்றோல், கேஸ் சிலிண்டர் பெற இனி குடும்ப அட்டையாம் எண்டு மட்டக்களப்பு ஜீ.ஏ. ஐயா சொல்லி இருக்காரு எலுவா? இது சோக்கான திட்டம்தான் தம்பி. ஆனால், குடும்ப அட்டையோட போனாலும் கியூவில கும்மி அடிக்கோணும் எலுவா ? அட்டைய வைச்சித்து எரிபொருள் கப்பல் வராட்டி என்ன செய்யுறது எண்டதயும் ஒள்ளுப்பம் சொல்லோணும் தம்பி..***

***இதோட வேளாண்மை செய்யிற என்னப்போல போடிமாருக்கும் ஏதும் நல்லத செய்யோணும் சரியாம்பி.***

# திருகோணமலை மீன்பிடித் துறைமுகங்களுக்கு வழங்கப்படுகின்ற எரிபொருளில் மோசடி

## வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக மீனவர்கள் விசனம்







(திருகோணமலை நிருபர்)

பொதுமக்கள் மற்றும் மீனவர்களுக்கு எரிபொருள் விநியோகத்தில் இடம்பெறும் மோசடிகள் மற்றும் ஊழல்களை உடனடியாக நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் நாட்டில் கடந்த 9ஆம் திகதி ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சிபோன்று பல மடங்கு கிளர்ச்சிகள் எதிர்காலத்தில் ஏற்படக்கூடும் - என திருகோணமலை மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் தயானந்த ஜயவீர தெரிவித்தார்.

திருகோணமலை ஊடக இல்லத்தில் நேற்று முன்தினம் (20) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,


நாட்டில் ஒருவேளை உணவு சமைப்பதற்காக கொட்டும் மழையிலும் வெயிலிலும் நீண்ட வரிசைகளில் வீட்டிலுள்ள அனைவரும் எரிபொருள் கொள்வனவுக்காக நாள் கணக்கில் காத்திருந்து எரிபொருளை கொள்வனவு செய்வது நாட்டிற்கு ஏற்பட்டுள்ள சாபக்கேடு எனவும் அதன் பிரதிபலனாக கடந்த 9ஆம் திகதி ஏற்பட்ட கலவரத்தைப் போன்றோரு இன்னுமொரு கலவரத்திற்கு அரசாங்கம் முகங்கொடுக்க நேரிடும் எனவும் தெரிவித்தார்


மேலும், திருகோணமலை கொட்பே மீன்பிடி துறைமுகத்திற்கு வரும் எரிபொருளை முறையாக விநியோகிப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவ்வாறு விநியோகிக்கப்படும் எரிபொருளில் மோசடிகள் இடம்பெறுவதாகவும் மீன்பிடி துறைமுகத்திற்கு வழங்கப்படுகின்ற எரிபொருள் தொடர்பில் மீன்பிடி சங்கங்கள் என்ற வகையில் எந்தவொரு தகவல்களும் தமக்கு வழங்கப்படுவதில்லை எனவும் குறித்த எரிபொருள் நிலையத்திற்கு வழங்கப்படுகின்ற எரிபொருள் எங்கு எவ்வாறு செல்கின்றது என்பது தொடர்பில் அரசு ஆராய வேண்டும் எனவும் அகில இலங்கை கடற்றொழில் சங்கங்கள் சம்மேளனத்தின் திருகோணமலை மாவட்ட தலைவர் பியல் ஹேமசிறி தெரிவித்தார்.


மேலும் 650இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் திருக்கடலூர் பிரதேசத்தில் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாக நாளொன்றுக்கு ஓரிரு படகுகள் மாத்திரமே கடலுக்கு செல்வதாகவும் சில பிரதேசங்களில் டோக்கன் அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதாகவும் அவ்வாறு வழங்கப்படுகின்ற மண்ணெண்ணெய் வெறுமனே 30 லீற்றர் மாத்திரமே வழங்கப்படுவதாகவும் இவ்வாறு வழங்கப்படும் மண்ணெண்ணெய் குறிப்பிட்ட தூரம் மாத்திரம் பயணித்து மீன்பிடி தொழிலை முன்னெடுத்துச் செல்வதாகவும் இதனால் மீனவ குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை கொண்டுசெல்வதற்கு பெரிதும் சிரமப்பட்டு வருவதாக திருக்கடலூர் மீனவர் சங்கத் தலைவர் வி.தர்மபாலன் தெரிவித்தார்.

மேலும் தமது அன்றாட தொழிலை முன்னெடுத்துச் செல்வதற்கான எரிபொருளை உரிய அதிகாரிகள் வழங்குவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் திருகோணமலை மாவட்டத்தின் மீன்பிடித் தொழிலை வழமைபோன்று முன்னெடுத்து செல்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் இதன்போது கேட்டுக்கொண்டார்.

# கல்முனை சாஹிராவின் ஓ.எல். தினமும் 'சாகரம்' நூல் வெளியீட்டு நிகழ்வும்







(பொலிவேரியன் நிருபர்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் 2021ஆம் ஆண்டு சாதாரண தர மாணவர்களின் ஓ.எல். தின விழாவும் 'சாகரம்' நூல் வெளியீடும் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் எம்.எஸ்.காரியப்பர் மண்டபத்தில் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர் எம்.ஐ.ஜாபிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.எம்.சாஹிர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், கௌரவ அதிதியாக சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ.மலிக் மற்றும் விசேட அதிதிகளாக பிரதி அதிபர்களான எம்.எச்.எம்.அபூபக்கர், ஏ.எச்.எம்.அமீன், திருமதி றிப்கா அன்ஸார் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் டாக்டர் ஸனூஸ் காரியப்பர் உட்பட மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் 'சாகரம்' எனும் தலைப்பில் நினைவு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலாசிரியர் ஏ.பி.சம்சுனா தலைமையில் தரம் 11இன் பகுதித் தலைவர் ஏ.எச்.எம்.றிசான் ஆசிரியர் உட்பட மலர் குழுவினரோடு அதிதிகள் புடைசூழ இந்நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அத்துடன் தரம் 11 கனிஷ்ட பிரிவு மாணவத் தலைவர்கள் மற்றும் வகுப்புத் தலைவர்கள் பதக்கம் அணிவித்து பாராட்டிக் கௌரவிக்கப்பட்டதோடு, 3ஆம் தவணை வலய மட்டப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப்பெற்ற 20 மாணவர்களும் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

தரம் 11இன் பகுதித் தலைவர் ஏ.எச்.எம்.றிசான் ஆசிரியரின் சிறப்பான ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மாணவர்கள் தங்கள் திறமைகளை சிறப்பாக வெளிக்காட்டி சபையோரை மகிழ்வித்தனர். அதில் மிகச் சிறப்பாக ஆங்கில மொழிப் பாடல் ஒன்றைப்பாடி மாணவனான ஏ.எப்.எம்.தாலிப் மற்றும் ஹிந்திப்பாடல் ஒன்றை இஷட்.ஏ.ஹாதி என்ற மாணவனும் சிங்கள மொழியில் யூ.கே.எம்.இர்ஷாத் மற்றும் எம்.எவ்.எம்.பாதில் ஆகியோர் மிக அருமையாகப் பாடியும் ஆர்.எம்.அப்லல் மற்றும் முஷாரப் ஆகியோர் மிகச் சிறப்பாக கவிதை மழை பொழிந்தும் சபையோரின் பாராட்டைப் பெற்றனர்.

ஜே.ஜே.எம்.ஜாஇப் குழுவினர் நடித்த கலக்கல் காமெடி நாடகமும் சபை அதிர்ந்த கரகோஷத்தைப் பெற்றது. ஆசிரியர் யூ.எல்.எம்.ஹிலால் பாடல் ஒன்றைப் பாடி நிகழ்வை பரவசப்படுத்தினார்.

இறுதியாக இஷட்.ஏ.ஹாதி குழுவினரால் பிரியாவிடைப் பாடல் ஒன்றும் மாணவர்களால் பாடப்பட்டு, பிரிய மனமில்லாது கண் கலங்கிய நிகழ்வும் அதிதிகளை பிரமிக்க வைத்ததும் குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வை ஆசிரியரும் அறிவிப்பாளருமான ஏ.எல்.நயீம் தொகுத்து வழங்கினார்.

# கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பாகிஸ்தான் பிரதி உயர்ஸ்தானிகர் தன்வீர் சந்திப்பு

(கிண்ணியா நிருபர்)



பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதாக இலங்கைக்கான பாகிஸ்தானின் பிரதி உயர்ஸ்தானிகர் தன்வீர் அஹமட் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் கடந்த 18 மற்றும் 19ஆம் திகதிகளில் ஏற்பாடு செய்திருந்த திறந்த பூப்பந்தாட்டப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டபோது கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தை சந்தித்த பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

திருகோணமலையிலுள்ள ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (19) இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்புக்கு முன்னதாக பூப்பந்தாட்டப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு பாகிஸ்தான் பிரதி உயர்ஸ்தானிகர் மற்றும் ஆளுநரின் தலைமையில் திருகோணமலை மக்கேய்சர் மைதானத்தின் பூப்பந்தாட்ட உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது. வெற்றிபெற்ற விளையாட்டு வீரர்களுக்கு ஆளுநர் மற்றும் உயர்ஸ்தானிகர் பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை இதன்போது வழங்கினார்கள்.

இதில் பிரதி உயர்ஸ்தானிகரின் மனைவி உட்பட பிரதிநிதிகள் குழுவும் இலங்கை பூப்பந்து சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

# கல்முனை மாநகர சபைக்கு எதிராக நீதிமன்றத்தை நாடவேண்டி வந்தால் அதற்கும் தயாராக இருக்கிறோம்

## பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் றிபாஸ்

(மாளிகைக்காடு நிருபர்)

சாய்ந்தமருது பிரதேச சுகாதார நிலைகள் தொடர்பில் ஆராயும் உயர்மட்ட கலந்துரையாடல் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யூ.எல்.எம்.நியாஸ் தலைமையில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நேற்று (21) பகல் இடம்பெற்றது.

இதன்போது திண்மக்கழிவகற்றல் தொடர்பிலும், வடிகான்களின் முறையற்ற பராமரிப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன் கல்முனை மாநகர சபையின் பொறுப்பற்ற தன்மையினாலும், அசமந்த போக்கினாலும் மாநகர மக்கள் எதிர்நோக்கும் நோய் நிலைகள், தொற்றா நோய் ஆபத்துக்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராயப்பட்டது.

எல்லா திணைக்களங்களுடனும் புரிந்துணர்வுடனும், நட்புடனும் ஒன்றிணைந்து செயற்பட்டு மக்களுக்கு சேவை செய்ய விரும்புவதனால் கல்முனை மாநகர சபைக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யாமல், சட்ட நடவடிக்கைகள் எடுக்காமல் புரிந்துணர்வுடன் பணியாற்ற தயாராக இருக்கின்றோம். ஆனால் அவர்களின் பாராமுகம் தொடர்ந்து சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு தேவை ஏற்பட்டால் அதையும் செய்ய தயாராக இருக்கின்றோம். மக்களின் சுகாதாரம் மீது எப்போதும் கரிசனை செலுத்த வேண்டும் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் இங்கு தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேசத்தில் முறையற்ற விதத்தில் அகற்றப்படும் திண்மக்கழிவுகள் மற்றும் வாடிகான்களில் நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டமை, வடிகான்கள் துப்பரவு செய்யப்படாமை உட்பட பல்வேறு சுகாதார





பிரச்சினைகளை ஆதாரங்களுடன் முன்வைத்து சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யூ.எல்.எம்.நியாஸ் உடனடி தீர்வைப் பெறுவது தொடர்பில் கவனம் செலுத்த சபைக்கு கோரிக்கை முன்வைத்தார்.

கல்முனை மாநகர சபை முதல்வர், ஆணையாளர் ஆகியோர் உரிய வசதிகளை ஏற்படுத்தி தந்தால் இந்த பிரச்சினைகளை தீர்க்க தயாராக இருக்கிறோம். மாநகர ஊழியர்கள் வேறு பணிக்கு அமர்த்தப்படுவதனாலும் வாகன வசதிகளில் உள்ள முரண்பாடுகள் காரணமாக மாநகர சபை வேலைகளை சீராக செய்ய முடியாதுள்ளது. மாநகர சபையில் நிர்வாக பிரச்சினைகள் மலிந்து காணப்படுவதனால் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியாத நிலை உள்ளது. வடிகான் என்னுடைய கட்டுப்பாட்டில் இல்லை. அது ஆணையாளர், பிரதி ஆணையாளரின் பொறுப்பில் உள்ளதாக அறிகிறேன். அவர்களிடம் இது தொடர்பில் அறிவிக்க வேண்டும் என்று கல்முனை மாநகர சபை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அர்சத் காரியப்பர் சபைக்கு தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், திட்டமிடல் வைத்திய அதிகாரி எம்.சி.எம்.மாஹிர், பிராந்திய தொற்றா நோய் தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.எம்.பஸால் , கல்முனை மாநகர சபை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம்.அர்சத் காரியப்பர், சாய்ந்தமருது உலமா சபை தலைவர் மௌலவி எம்.எம்.சலீம், சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக அலுவலர் எம்.நழீர், மாவட்ட மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எம். பைசால், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள், உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இந்த கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டும் கல்முனை மாநகர சபை முதல்வர், ஆணையாளர் அல்லது அவர்களின் சார்பில் யாரும் கலந்துகொள்ளவில்லை என்பதுடன் கடந்த கூட்டத்திலும் ஆணையாளர் இடைநடுவில் எவ்வித அறிவிப்புமின்றி எழுந்து சென்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# செங்கலடியில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 145 லீற்றர் பெற்றோலுடன் கடை முதலாளி கைது!



(கல்லடி நிருபர்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவின் கொம்மாந்துறை பிரதான வீதியிலுள்ள சில்லறைக் கடை ஒன்றில் சட்டவிரோதமாக விற்பனை செய்ய வைக்கப்பட்டிருந்த 145 லீற்றர் பெற்றோலுடன் கடை வியாபாரியை நேற்று முன்தினம் (20) கைதுசெய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து, ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹர்ஷ டி சில்வாவின் ஆலோசனைக்கமைய சிறு குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் வை.விஜயராஜா தலைமையிலான குழுவினர் குறித்த கடையை சுற்றிவளைத்தனர்.

இதன்போது மாறுவேடத்தில் சிவில் உடையில் பொலிஸ் உத்தியோகத்தர் குறித்த கடைக்கு சென்று பெற்றோல் வாங்குவதுபோல் நடித்து பெற்றோலை வாங்கிய நிலையில், சுற்றிவளைத்திருந்த பொலிஸார் உடனடியாக கடையை முற்றுகையிட்டு, சோதனையிட்டபோது, கடையின் பின்பகுதியில் கலன்களில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 145 லீற்றர் பெற்றோலை மீட்டதுடன், கடை முதலாளியை கைதுசெய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதில் கைதுசெய்யப்பட்டவர் நேற்று முன்தினம் (20) ஏறாவூர் சுற்றுலா நீதிமன்த்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, பெற்றோலை பறிமுதல் செய்து அரச உடைமையாக்குமாறும், அபராதமாக 5 ஆயிரம் ரூபா செலுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

# குடும்பத்தகராறில் நபரொருவர் உயிரிழப்பு

## புல்மோட்டையில் சம்பவம்

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை புல்மோட்டை பகுதியில் குடும்பத் தகராறில் ஏற்பட்ட கைகலப்பில் நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் புல்மோட்டை, அரபாத் நகர் பகுதியைச் சேர்ந்த ஏ.ஜீ.சதாம் (28 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.


குடும்பத்தகராறில் உயிரிழந்தவரின் மனைவியின் சகோதரர் தாக்கியே குறித்த நபர் உயிரிழந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இருவருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் படுகாயமடைந்தவர் புல்மோட்டை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதையடுத்து, மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைப் பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விசாரணைகளை புல்மோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காத்தான்குடி பத்ரிய்யஹ் ஜும்ஆப் பள்ளிவாசலில் 36ஆவது ஆண்டு ஹாஜாஜீ மாகந்தூரி பெருவிழா!





(மட்டக்களப்பு நிருபர்)



மட்டக்களப்பு - காத்தான்குடி பத்ரிய்யஹ் ஜும்ஆப் பள்ளிவாசலில் 36ஆவது வருட ஹாஜாஜீ மாகந்தூரி பெருவிழாவானது கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் கொடியேற்றத்துடன், ஆரம்பித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இனிதாக நிறைவுபெற்றது.

36ஆவது வருட ஹாஜாஜீ மாகந்தூரி பெருவிழாவின்போது மஜ்லிஸ்கள் பல இடம்பெற்று பொதுமக்களுக்கு கந்தூரி உணவு விநியோகிக்கப்பட்டமை இங்கு சிறப்பம்சமாக அமைந்திருந்தது.


இவ்விறுதிநாள் நிகழ்வில் இங்கு வருகை தந்த அதிதிகளுக்கு மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு, தேசிய கீதம் இசைக்கப்பட்டதைத் தொடர்ந்து கந்தூரி சமைத்த உணவு தானமாக வழங்கப்பட்டது.

அதனையடுத்து விசேட வழிபாடுகள் இடம்பெற்றதுடன், இதன்போது எமது நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டுவர வேண்டுமென பிரார்த்தனையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

பத்ரிய்யஹ் ஜும்ஆ பள்ளிவாயல் தலைவர் மௌலவி ஏ.ஜே.அப்துர் ரஊப் (மிஸ்பாஹி) தலைமையில் இடம்பெற்ற இறுதிநாள் பெருவிழாவில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் ராஜாத சிறி தமிந்த, கிரான்குளம் இராணுவத் தளபதி மேஜர் உதயகுமார, பள்ளிவாயல் நம்பிக்கை சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

# மட்டக்களப்பில் லாப் சமையல் எரிவாயு விநியோகம்

## ஆரையம்பதியில் ஆர்ப்பாட்டத்தினால் விநியோகம் இடைநிறுத்தம்



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு கடந்த ஒரு மாதத்திற்குப் பின்னர் லாப் சமையல் எரிவாயு நேற்று (21) விநியோகிக்கப்பட்டது. ஓட்டமாவடி உட்பட பல இடங்களில் எரிவாயு விநியோகிக்கப்பட்ட நிலையிலும், ஆரையம்பதியில் எரிவாயுவைப் பெற வந்திருந்தவர்களின் குழ்ப்பம் காரணமாகவும் விநியோகம் இடைநிறுத்தப்பட்டது.

இந்த லாப் சமையல் எரிவாயுவை பெறுவதற்காக நேற்று முன்தினம் (20) மாலைமுதல் பொதுமக்கள் வரிசைகளில் காத்திருந்தனர்.

ஆரையம்பதியிலுள்ள லாப் சமையல் எரிவாயு விநியோகஸ்தர் அலுவலகத்துக்கு முன்பாக பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்து நின்றதைக் காணமுடிந்தது. இன்னொரு பிரதேசத்திற்கான எரிவாயுவை லொறியிலிருந்து எடுத்துச் சென்றபோது அதனைத் தடுத்து நிறுத்திய பொலிஸாரும் இராணுவத்தினரும் நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தபோதிலும் செய்தி எழுதும்வரை எரிவாயு விநியோகம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

கடந்த ஒரு மாதத்திற்குப் பின்னர் லாப் சமையல் எரிவாயு வழங்கி பொதுமக்களுக்கு சிரமமில்லாத வகையில் விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக லாப் சமையல் எரிவாயு மட்டக்களப்பு மாவட்ட விநியோகஸ்தர் தெரிவித்தார்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com


## செலான் வங்கி பீ.எல்.சீ

(2007 – 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் குறிப்பு P. Q.9இன் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990ஆம் ஆண்டு 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தில் (விசேட ஏற்பாடுகள்) 04ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ.இன் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறியத்தரப்படுவதாவது, 1990ஆம் கூண்டு 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 08ஆம் பிரிவின் கீழ் 2022.04.27ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் செலான் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினரால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப் பட்டுள்ளதாவது,

கிளை : கம்பளை
கணக்கு இலக்கம் : 0250-01203051-001

(2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கம்பனி பதிவு இலக்கம்: P.Q.9இன் கீழ் பதிவு செய்யப்பட்ட) செலான் வங்கி பி.எல்.சீ இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு நில்னி சீ. வேகொடபொல என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011 பெப்ரவரி 08ஆம் திகதியிடப்பட்ட 745ஆம் இலக்க பிணைமுறி மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஏ. மெலனி டி லீமா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014 ஒக்டோபர் 24ஆம் திகதியிடப்பட்ட 1149ஆம் இலக்க பிணைமுறி, 2017 மே 18ஆம் திகதியிடப்பட்ட 1580ஆம் இலக்க பிணைமுறி மற்றும் 2018 மே 21ஆம் திகதியிடப்பட்ட 1752ஆம் இலக்க பிணைமுறி ஆகிய பிணைமுறிகளின் கீழ் செலுத்தப்படாமல் நிலுவையாக நிற்கும் தொகையை "கடன் பெற்றவரான/அடகுவைத்தவரான" கம்பளையைச் சேர்ந்த, ஹெட்டி முதலிகே அனுர பிரியஷாந்த முன்னர் அனுர பிரியஷாந்த ஹெட்டி முதலிகே என்பவரால் செலுத்தத்தவறியுள்ளமையால் குறித்த பிணை முறிகளின் மீது பெறப்பட்ட நிரந்தர மேலதிகப் பற்று வசதிக்காக 2021 டிசம்பர் மாதம் 14ஆம் திகதி வரை அசல் மற்றும் வட்டித் தொகையாக பத்து மில்லியன் அறுநூற்று எண்ணாயிரத்து எண்ணூற்று எழுபத்தைந்து ரூபா ஐம்பத்தொரு சதத் (ரூ.10,608,875.51) தொகையை மற்றும் 2021 டிசம்பர் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் இருபத்தெட்டு வீத (28%) வருடாந்த வட்டி வீதத்தில் வட்டித்தொகையையும் சேர்த்து செலான் வங்கி பீ.எல்.சீ க்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக நிற்பதன் காரணமாக மேற்படி தொகையான பத்து மில்லியன் அறுநூற்று எண்ணாயிரத்து எண்ணூற்று எழுபத்தைந்து ரூபா ஐம்பத்தொரு சதத் (ரூ.10,608,875.51) தொகையை முற்றாக அறவிடும் வரை அத்தொகை மீது 2021 டிசம்பர் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் முழுமையாக அறவிடும் காலப்பகுதி வரை மேல் குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்தில் வட்டித் தொகையையும், விளம்பர செலவுகளையும் மற்றும் மேற்படி சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் ஏனைய கட்டணங்களையும் சேர்த்து அறவிடுவதற்காகவும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் (எவையும்) பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக செலான் வங்கி பீ.எல்.சீயிடம் மேற்படி 745, 1149,1580 மற்றும் 1752 ஆகிய இலக்கங்களையுடைய அடகு முறிகளின் கீழ் அடகுவைக்கப்பட்டதும் இதன் கீழ் அதன் அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனம் மற்றும் அதன் வளாகங்கள் உத்தரவு பெற்ற ஏலதாரர் திருமதி சந்திமா கமகே என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென செலான் வங்கி பீ.எல்.சீ இன் பணிப்பாளர் சபை 1990ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானித்திருக்கின்றது.

### மேற்குறிப்பிடப்பட்ட ஆதன அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம் உடபலாத்தகங்க பஹல கோறலையின் கம்பளை நகர சபை எல்லையின் உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் 1365-பொல்கும்புர கிராம சேவகர் பிரிவிற்குள் கம்பளை பஸார் தொகுதி இலக்கம் 5இல் அமைந்துள்ள காணியானது உத்தரவு பெற்ற நிலஅளவையாளரான டி.எம்.ஏ.பீ.பி.ரம்புக்வெல்ல என்பவரால் 2003.07.13ஆம். திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 1192ஆம் இலக்க நில வரைபடத்தின் லொட் A என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் குறித்த ஆதனத்துடன் தொடர்பட்ட பொதுவான வழியுரித்துடன் சேர்த்து குறித்த காணியிலுள்ள வரி மதிப்பீட்டு இலக்கம் 40ஐக் கொண்ட கட்டிடம், மரங்கள் மற்றும் பயிர்கள் யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடகிழக்கு: புதிய நுவரெலியா வீதி தென்கிழக்கு: குறித்த காணியின் எஞ்சிய பகுதி மற்றும் வரிமதிப்பீட்டு இல. 42ஐப் பிரிக்கும் மதில் சுவர் தென்மேற்கு: வீதி வடமேற்கு: வரிமதிப்பீட்டு இல. 38ஐப் பிரிக்கும் மதில் சுவர் ஆகிய எல்லைகளைக் கொண்ட குறித்த காணியின் பரப்பளவானது இரண்டு புள்ளி ஒன்று இரண்டு பேர்ச் (ஏ.0-றூ.0-பே.2.12) ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி
(திருமதி) வீ.ஏ. பரணகம
சட்டத்தரணி
உதவி பொது முகாமையாளர் – சட்டம்


# கல்முனை சுகாதார பணிமனையினால் மரவள்ளி பயிர்ச்செய்கை ஆரம்பம்!

(கல்முனை, மாளிகைக்காடு நிருபர்கள்)



நாட்டின் தற்போது நிலவும் பொருளாதார நிலையை கருத்திற்கொண்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைப் பிரிவில் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்திய நிலையங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் முகமாக மரவள்ளி நடும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கும் விதமாக அதிகாரிகளுக்கு மரவள்ளித் தண்டுகள் கையளிக்கும் நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் நேற்று முன்தினம் (20) இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் ஐ.எல்.எம்.றிபாஸ் விடுத்த கோரிக்கைக்கமைய குறித்த மரவள்ளி தண்டுகள் 500 உஹன விமானப் படைத்தள முகாமினால் கல்முனை பிராந்திய சுகாதர சேவைகள் பணிமனைக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


இது தொடர்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் ஐ.எல்.எம்.றிபாஸ் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உணவுத் தட்டுப்பாடுகளுக்கு தீர்வு வழங்கும் முகமாக பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை சுகாதாரத்துறையாக இருந்தாலும் கூட கல்முனை பிராந்திய சுகாதார பணிமனை கடந்த 02 மாதங்களாக முன்னெடுத்து வருகின்றன.

இதனடிப்படையில் கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனை பிரிவிலுள்ள வைத்தியசாலைகளில் 02 வகையான பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளும் முகமாக ஆர்வமூட்டி வருகிறோம். முதலாவதாக சகல ஆயுர்வேத வைத்தியசாலைகளிலும் ஆயுர்வேத மூலிகைகளை வைத்தியசாலைகளின் இடவசதிக்கேற்ப ஆகக்குறைந்தது 25 வகையான மூலிகையையாவது அந்த இடத்தில் வளர்த்து அவற்றின் பெயர்ப்பட்டியலோடு நாற்றுகளையும் தயார் செய்து குறித்த ஆயுர்வேத வைத்தியசாலை பகுதியில் உள்ள பொதுமக்கள், பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் மூலிகை மருந்துகளை அறிமுகம் செய்வதோடு அது தொடர்பான கையேடுகளை வழங்குவது தொடர்பாக மாணவர்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்களும் கடந்த 04 மாதங்களாக முன்னெடுக்கப்பட்டு வருவதோடு பல ஆயுர்வேத வைத்தியசாலைகளில் ஹெர்பல் கோனர் எனும் மூலிகை தோட்டங்களை உருவாக்கி வருகின்றோம்.

மேலும் உணவுத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முறையில் நாங்கள் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு விடுத்த கோரிக்கைக்கமைய கல்முனை பிராந்திய பணிப்பாளர் பிரிவிலுள்ள வைத்தியசாலைகளில் காணப்படும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு எமது நிர்வாகத்துக்குட்பட்ட பிரிவில் சுமார் 50 ஏக்கர் வரையான வெற்றுக் காணிகள் இருக்கும் அளவில் சுமார் 16 ஏக்கர் நிலபரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியுமென அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன், எமது ஊழியர்களை ஊக்கப்படுத்தும் முகமாக பயிர்ச்செய்கைக்கான தண்டுகள் மற்றும் நாற்றுகள் இதர பயிர்ச்செய்கைக்குரிய உதவியினை செய்யுமாறு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு கோரிக்கை விடுத்த நிலையில், உஹன விமான படைத்தள முகாமினால் சுமார் 500 மரவள்ளி தண்டுகள் வழங்கப்பட்டிருந்தன. இந்நிலையில் குறித்த மரவள்ளி தண்டுகள் கல்முனை பிராந்திய பணிப்பாளர் பிரிவிலுள்ள வைத்தியசாலைகளுக்கு இன்று பிரித்து வழங்கப்பட்டிருந்தது. இதுபோல் பாசிப்பயறு கௌபி, முருங்கை, பொன்னாங்காணி, போன்ற பயிர்ச்செய்கைகளை எமது கல்முனை பிராந்திய பணிப்பாளர் பிரிவில் திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றோம் - என்றார்.

# உலக அமைதியை ஏற்படுத்துகிறது யோகா



8ஆவது சர்வதேச யோகா தினம் நேற்று கொண்டாடப்பட்டது.

இந்நிலையில், ''யோகா பயிற்சி நாட்டுக்கும், உலகிற்கும் அமைதியை ஏற்படுத்துவதுடன், மனதையும், உடலையும் சீராக வைத்திருக்கவும் உதவுகின்றது. யோகா மனிதரிடத்திலும், சமூகத்திலும் அமைதியை ஏற்படுத்துகிறது'' என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சர்வதேச யோகா தினத்தை கர்நாடக மாநிலம் மைசூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடி தொடங்கி வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து மைசூர் அரண்மனை வளாகத்தில் 15 ஆயிரம் பேருடன் இணைந்து பிரதமர் மோடி யோகா பயிற்சிகளை மேற்கொண்டார்.

**யோகாசனம்**

உலகிற்கு இந்தியா அளித்த கொடைதான் யோகா.

உடலையும், மனதையும் ஒருங்கிணைத்து அனைத்துப் புலன்களையும் ஆளுமை கொள்வது இதன் தனிச்சிறப்பு.

மன சஞ்சலமே வாழ்க்கை, மனப் போராட்டமே தொழில், உடலை வருத்திக்கொள்வதே கொள்கை என சோகம், கோபம், பதற்றத்துடன் கூடிய வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டவர்கள் மனஅழுத்தத்துக்கு ஆளாகின்றனர். உடல் தளர்ச்சி, நரம்புத் தளர்ச்சி, மூச்சுத் திணறல், மூட்டு வலி என ஒரு கட்டத்தில் நோய்கள் இவர்களைத் தேடி வருகின்றன. இவற்றில் சிக்காமல் உடலைப் பாதுகாப்பதுதான் யோகா பயிற்சி.





உடலுக்கு உகந்த உணவுடன், தேவையான உடற்பயிற்சியும் சேரும்போது உடலும் மனமும் வலுவடைகின்றன. ஆசனம், பிராணாயமம், தியானம் இவற்றைத் தொடர்ச்சியாக செய்வதால் உடல் உறுப்புகள் தூய்மையாகி சீராக இயங்குகின்றன.

சீரான மூச்சுக்கும், நாடித்துடிப்புக்கும், உதவுகிறது யோகா பயிற்சி.

கூடும் இரத்த அழுத்தத்தைக் குறைத்து, எப்போதும் புத்துணர்ச்சியை அளிக்கிறது. உடலையும், மனதையும் உறுதியாக்கி எதையும் தாங்கும் பக்குவத்தையும், நோய்களை நெருங்கவிடாத எதிர்ப்புச் சக்தியையும் கிடைக்கச் செய்கிறது யோகா பயிற்சி. முதுமைத் தோற்றத்தை தள்ளிப்போட வைக்கிறது.

உடல், மனம், ஆன்மாவைத் தூய்மையாக்கும் யோகா பயிற்சியை செய்வது ஒவ்வொருவருக்கும் அவசியம். தினசரி யோகா செய்தால் முதுமையில் இருந்தும், நோய்களில் இருந்தும் தப்பிக்கலாம் என்பது நிச்சயம்.

# உலக செய்திகள்

## கம்போடியாவில் கண்டுபிடிக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய நன்னீர் மீன்



கம்போடியாவில் இராட்சத stingray எனப்படும் உலகின் மிகப்பெரிய நன்னீர் மீன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மீன் 661பவுண்ட் எடை கொண்டதாகும்.

அந்நாட்டின் வடக்குப் பகுதியில் பாயும் Mekong ஆற்றில் இந்த மீனினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மீனவர் ஒருவரின் வலையில் சிக்கியிருந்த இந்த மீனை மீன் ஆராய்ச்சியாளர்கள் பரிசோதித்ததில் இந்த விவரம் தெரியவந்துள்ளது.

இதற்கு முன்பு தாய்லாந்தில் கடந்த 2005ஆம் ஆண்டு பிடிக்கப்பட்ட மீன் 646 பவுண்ட் எடை கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### தனக்கு வழங்கப்பட்ட நோபல் பரிசை விற்று....

## ரூ. 808 கோடியை உக்ரைன் குழந்தைகளுக்காக வழங்கிய ரஷ்ய ஊடகவியலாளர் டிமிட்ரி முரடோவ்



ரஷ்யாவைச் சேர்ந்த ஊடகவியலாளர் டிமிட்ரி முரடோவ் (Dmitry Muratov) தனக்கு வழங்கப்பட்ட நோபல் தங்கப் பதக்கத்தை விற்று அப்பணத்தை போரால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைன் குழந்தைகளுக்கு உதவும் வகையில் வழங்கியுள்ளார்.


நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தது. இந்தப் போர் இன்று 119ஆவது நாளாகவும் நீடித்து வருகிறது.

போரால் உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் இரண்டாவது பெரிய நகரமான கார்கீவ், மரியுபோல் உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் உருக்குலைந்துள்ளன. 77 இலட்சம் பேர் உக்ரைனிலிருந்து வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். மேலும் பொதுமக்கள் பலர் உயிரிழந்துள்ளனர்.

குறிப்பாக, பல குழந்தைகள் தங்கள் பெற்றோர்களை இழந்துள்ளனர். இந்தப் போரால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைன் குழந்தைகளுக்கு உதவும் வகையில் தனக்கு வழங்கப்பட்ட நோபல் தங்கப் பதக்கத்தை விற்க ரஷ்யாவைச் சேர்ந்த ஊடகவியலாளர் டிமிட்ரி முரடோவ் (Dmitry Muratov) முடிவு செய்தார்.

கடந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசுடன் இவருக்கு தங்கப் பதக்கமும், 5 இலட்சம் டொலரும் பரிசாக வழங்கப்பட்டன. பரிசுத் தொகையாக கிடைத்த 5 இலட்சம் டொலரை யுனிசெப் அமைப்புக்கு வழங்குவதாக டிமிட்ரி ஏற்கனவே அறிவித்திருந்தார். ஹெரிடேஜ் எனும் நிறுவனத்தால் நியூயோர்க்கில் நடந்து முடிந்த ஏலத்தில் இவரின் நோபல் பரிசு தற்போது 103 மில்லியன் டொலருக்கு ஏலம் போயுள்ளது.

இந்தத் தொகை முழுவதையும் உக்ரைனில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவுவதற்காக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான நிறுவனமான ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்திற்கு டிமிட்ரி முராடோவ் வழங்கியுள்ளார். இவரின் இந்த முயற்சிக்கு உலகம் முழுவதுமுள்ள பல்வேறு தரப்பினரும் தங்கள் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.



உலக யோகா தினத்தையொட்டி ஸ்வஸ்டிகாசனா வடிவில் யோகாசனம் செய்த பெண்ணொருவர்....

## பிறந்த குழந்தையின் தலை துண்டிப்பு

### துண்டிக்கப்பட்ட தலையை தாயின் வயிற்றிலேயே வைத்து தைத்த கொடூரம்



பாகிஸ்தானின் சிந்து மாகாணத்திலுள்ள கிராமப்புற சுகாதார மையத்தின் ஊழியர்களின் அலட்சியத்தால் பிறந்த குழந்தையின் தலை துண்டிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி, துண்டிக்கப்பட்ட அந்தத் தலையை தாயின் வயிற்றிலேயே வைத்து தைத்தும் உள்ளனர். இதனால் 32 வயது தாய் உயிருக்கு ஆபத்தான நிலையிலுள்ளார். இது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவத்திற்கு காரணமானவர்களைக் கண்டறிய மருத்துவ விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பேராசிரியர் ரஹீல் சிக்கந்தர் தெரிவிக்கையில்,

தார்பார்கர் மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த பெண்ணொருவருக்குப் பிரசவ வலி ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர் முதலில் தனது பகுதியிலுள்ள கிராமப்புற சுகாதார மையத்திற்குச் சென்றுள்ளார். அங்கு பெண் மகப்பேறு மருத்துவர் இல்லாததால், அனுபவமற்ற ஊழியர்கள் அவர்களுக்கு மருத்துவம் பார்த்துள்ளனர். அப்பெண்ணுக்கு அறுவை சிகிச்சை மூலம் பிரசவம் பார்க்க முடிவு செய்துள்ளனர்.

அதன்படி நடந்த சத்திரசிகிச்சையில் சிசுவின் தலை எதிர்பாராத விதமாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த சிசுவின் தலையை உள்ளேயே வைத்து தைக்கவும் செய்துள்ளனர். இதனால் அப்பெண் உடல்நிலை மோசமானது.

இதையடுத்து அவர் அருகிலுள்ள மிதியா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சையளிக்க வசதிகள் இல்லை. இதையடுத்து குறித்த பெண் லியாகத் மருத்துவ பல்கலைக்கழகத்திற்குக் கொண்டுவரப்பட்டார். அங்குதான் குழந்தையின் மீதமுள்ள உடல் தாயின் வயிற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்டது. அவளுடைய உயிர் காப்பாற்றப்பட்டது.

குழந்தையின் தலை உள்ளே சிக்கிக்கொண்டது. தாயின் கர்ப்பப்பை சிதையும் நிலை ஏற்பட்டுவிட்டது. இதையடுத்து அறுவை சிகிச்சை மூலம் வயிற்றுப் பகுதியைத் திறந்து, சிசுவின் தலையை வெளியே எடுக்கவேண்டியதாகிவிட்டது'' - என்று அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் இது குறித்து விசாரிக்க சிந்து சுகாதாரத்துறை இயக்குநர் ஜெனரல் டொக்டர் ஜுமான் பகோடோ உத்தரவிட்டுள்ளார்.

குறிப்பாக, சாக்ரோவிலுள்ள ஆரம்ப சுகாதார மையத்தில் பெண் மருத்துவர்கள் இல்லாதது குறித்து விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், ஸ்ட்ரெச்சரில் படுத்திருக்கும்போது அந்தப் பெண்ணை அங்கிருந்தவர்கள் வீடியோவும் எடுத்துள்ளனர். இது குறித்து விசாரிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## வெள்ளத்தில் தத்தளிக்கும் அசாம்: 73 பேர் உயிரிழப்பு; 43 இலட்சம் பேர் பாதிப்பு



அசாம் மாநிலத்தில் மொத்தமுள்ள 35 மாவட்டங்களில் 33 மாவட்டங்கள் வெள்ளத்தில் தத்தளித்து வருகின்றன. மாநிலம் முழுவதும் இதுவரை 73 பேர் உயிரிழந்துள்ளதுடன், 43 இலட்சம் பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அசாம் மாநிலத்தின் முதலமைச்சர் ஹிமந்தா பிஸ்வா ஷர்மா, பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்க உத்தரவு பிறப்பித்துள்ளார். வெள்ளநீர் அதிகம் சூழ்ந்துள்ள பகுதிகளில் சிக்கியுள்ள மக்களுக்கு தேவையான உணவு மற்றும் நிவாரணத்தை ஆகாய மார்க்கமாக வழங்குமாறு அவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனைகளில் இரவுநேர பணியில் மருத்துவ பணியாளர்களை ஈடுபடுமாறும் தெரிவித்துள்ளார். மேலும், வெள்ளநீர் வடிந்த வேகத்தில் அது சார்ந்த பாதிப்புகளை விரைந்து கணக்கிடுமாறு அதிகாரிகளிடம் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த ஒரு வார காலமாக அசாம் மாநிலத்திலுள்ள 33 மாவட்டங்களில் 5,137 கிராமங்கள் மழை - வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனை அம்மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் உறுதி செய்துள்ளது. 744 முகாம்களில் சுமார் 1.90 இலட்சம் மக்கள் பாதுகாப்பாக தஞ்சமடைந்துள்ளனர். இதுவரை இராணுவம், தேசிய மற்றும் மாநில மீட்புப் படையினரால் சுமார் 30,000 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

கோபிலி ஆறு, பிரம்மபுத்திரா, சுபன்சிரி, புத்திமாரி, பக்லாடியா, மனாஸ், பெக்கி பராக் மற்றும் குஷியாரா போன்ற ஆறுகளில் அபாய கட்டத்தை கடந்து நீர் பாய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதோடு நகரப்பகுதிகளும் வெள்ளநீரால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசிரங்கா தேசிய பூங்காவில் எட்டு விலங்குகள் வெள்ளம் மற்றும் வாகன மோதல் காரணமாக உயிரிழந்துள்ளன. பத்து விலங்குகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 4 ஆண்டுகளில் இஸ்ரேலில் 5ஆவது முறையாகவும் தேர்தல்

### ஆட்சியை கலைப்பதற்கான மசோதா தாக்கல்; கைப்பற்ற முன்னாள் பிரதமர் நெதன்யாகு திட்டம்

இஸ்ரேலிய பிரதமர் நப்தாலி பென்னட் தலைமையிலான அரசு கவிழவுள்ள நிலையில், அங்கு 5ஆவது முறையாக தேர்தல் நடத்தப்படவுள்ளது.

அடுத்த வாரம் ஆட்சியை கலைப்பதற்கான மசோதா தாக்கல் செய்யவுள்ளதாகவும், மசோதா வெற்றிபெற்றால் மீண்டும் தேர்தல் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுவரை காபந்து அரசின் பொறுப்பாளராக வெளியுறவு அமைச்சராகவுள்ள Yair Lapid தலைமை வகிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் 5ஆவது முறையாக இஸ்ரேலில் தேர்தல் நடத்தப்படவுள்ள நிலையில் முன்னாள் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆட்சியை கைப்பற்ற திட்டமிட்டுள்ளார்.

## கருங்கடலிருந்து ரஷ்யப் படைகள் காலிபர் ஏவுகணையை சோதனை



கருங்கடலின் ஒரு பகுதியிலிருந்து தொலை தூர இலக்குகளை துல்லியமாக தாக்கி அழிக்கும் காலிபர் ஏவுகணையை ரஷ்யப் படைகள் ஏவிய காட்சிகளை ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து விளக்கமளித்த அமைச்சு, அந்த ஏவுகணை உக்ரைனின் தினிப்ரோவிலுள்ள இராணுவ கட்டளை மையத்தை தாக்கியதாக தெரிவித்தது. இதில் 50இற்கும் மேற்பட்ட இராணுவ ஜெனரல்கள் மற்றும் அதிகாரிகள் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தின் மூன்று கால் விரல்கள் அகற்றம்



தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்துக்கு இரத்தோட்டம் சீராக இல்லாததால் அறுவை சிகிச்சை செய்து வலது காலிலுள்ள 3 விரல்கள் அகற்றப்பட்டுள்ளன.

உடல்நலக்குறைவால் தீவிர அரசியலிலிருந்து தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் விலகியுள்ளார். மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனையில் அவ்வபோது சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார்.

இந்நிலையில், தே.மு.தி.க. சார்பில் வெளியிட்ட அறிக்கையில்,

நீண்ட வருடங்களாக இருக்கும் நீரிழிவு பிரச்சினை காரணமாக விஜயகாந்தின் வலது காலிலுள்ள விரல் பகுதியில் இரத்தோட்டம் சீராக இல்லாததால், டொக்டர்கள் ஆலோசனைப்படி நேற்றுமுன்தினம் 3 விரல்கள் அகற்றப்பட்டுள்ளன. டொக்டர்கள் கண்காணிப்பில் தற்போது அவர் நலமுடன் உள்ளார். டொக்டர்கள் ஆலோசனைப்படி தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சிகிச்சை முடிந்து ஓரிரு நாளில் விஜயகாந்த் வீடு திரும்புவார். அவரது உடல்நிலை குறித்து சமூக வலைத்தளங்களில் வெளியான கருத்துகளை நம்ப வேண்டாம்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எரிபொருள் நிலையத்தில் பெற்றோல் - டீசல் பதுக்கிவைப்பு!

## அதனை கைப்பற்றி மக்களுக்கு மீள பெற்றுக்கொடுக்க அதிகாரிகள் நடவடிக்கை





சமூகஜோதி எஸ்.முத்தையாவின் அனுசரணையுடன் பெமிலி யோகா எகடமியினால் சர்வதேச யோகா தின நிகழ்வை முன்னிட்டு இன்றைய பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு கண்டியிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு கண்டி மாநகர சபையின் வாகன தரிப்பிட திறந்தவெளி கேட்போர் கூடத்தில் யோகா குருஜீ ஜயக்குமார் தலைமையில் இடம்பெற்றது. படங்கள்: இக்பால் அலி





**(அநுராதபுரம் செய்தியாளர்)**

அநுராதபுரம் விமான நிலைய வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொதுமக்களுக்கு வழங்காது பதுக்கிவைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான எரிபொருளை மக்களின் பாவனைக்கு பகிர்ந்தளிப்பதற்கு நுகர்வோர் அதிகாரசபையின் அநுராதபுரம் அலுவலக பொறுப்பதிகாரி எம்.பீ.சீ.ஏ.பெரேரா தலைமையிலான அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை நேற்று முன்தினம் (20) இடம்பெற்றது.

பொதுமக்கள் நுகர்வோர் அதிகாரசபையின் அநுராதபுரம் அலுவலகத்திற்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு பொலிஸார் சகிதம் வந்து குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்திலுள்ள நிலக்கீழ் தாங்கிகளை பரிசோதனைக்குட்படுத்தியபோது பதுக்கி வைக்கப்பட்டிருந்த 5,800 லீற்றர் சுப டீசலினையும் 1,500 லீற்றர் பெற்றோலினையும் கைப்பற்றியுள்ளனர்.

அவ்வாறு கைப்பற்றப்பட்ட டீசல் மற்றும் பெற்றோலை நுகர்வோர் அதிகாரசபையின் பூரண கண்காணிப்பின் கீழ் பொலிஸாரது உதவியுடன் பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டது.

பொதுமக்கள் இரண்டு தினங்களாக பல சிரமங்களுக்கு மத்தியில் மிக நீண்ட வரிசையில் காத்திருந்தும் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள், எரிபொருள் இங்கு இல்லை. இன்னும் மூன்று தினங்களுக்கு பின்னர்தான் எரிபொருள் வரும். அப்போது வாருங்கள் என்று சொல்லி பொதுமக்களை திருப்பி அனுப்புவதற்கு முயற்சித்துள்ளனர்.

அதன் பின்னர் ஏற்பட்ட சந்தேகத்தினால் நுகர்வோர் அதிகாரசபைக்கு பொதுமக்கள் செய்த முறைப்பாட்டினையடுத்து பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எரிபொருளை பதுக்கிவைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் குறித்த எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளருக்கு எதிராக அநுராதபுரம் நீதிமன்றில் எதிர்வரும் தினத்தில் வழக்கு தொடரப்படவுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபையின் அநுராதபுரம் அலுவலக பொறுப்பதிகாரி பெரேரா மேலும் தெரிவித்தார்.

# எரிபொருளை பெற்றுகொள்ள சுகாதார ஊழியர்களுக்கு விசேட பொறிமுறை

நாட்டில் தற்போதைய நெருக்கடி நிலைமையில், சுகாதார ஊழியர்கள் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கான விசேட பொறிமுறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் இதற்கென ஒதுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் வெள்ளிக்கிழமைதோறும் சுகாதார ஊழியர்கள் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து இந்த பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தனது ட்விட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு, ஊழியர்களின் பதவி நிலையை உறுதிப்படுத்தி, கடிதத்தை வழங்குமாறு அமைச்சர் அனைத்து சுகாதார நிறுவனங்களின் தலைவர்களையும் பணித்துள்ளார். தகுதிக்கான அளவுகோல்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட எரிபொருள் நிலையங்களின் விவரங்களும் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளன.

# அமைச்சரவைத் தீர்மானங்கள்




**01. சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக தேசிய தனி முகப்பிடம் (National Single Window) கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக நடவடிக்கைகளை இலகுபடுத்தும் ஒப்பந்தம் 2017 பெப்ரவரி மாதம் தொடக்கம் நடைமுறைப் படுத்தப்படுவதுடன், இலங்கையும் குறித்த ஒப்பந்தத்தின் பங்காளராக கையொப்பமிட்டுள்ளது. குறித்த ஒப்பந்தத்திற்கமைய தேச எல்லைகளூடாக நாடுகளுக்கிடையே மேற்கொள்ளப்படும் வர்த்தக நடவடிக்கைகள் (இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் மீள்ஏற்றுமதி) பங்கேற்பு வர்த்தக நடவடிக்கை ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைகளுக்கு சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள் மற்றும் தரவுகளை சமர்ப்பிப்பதற்கு ஒரு நிலையத்தை (தனி முகப்பிடம்) ஆரம்பித்து மேற்கொண்டு செல்வதற்கான கடப்பாடு இலங்கைக்கு உள்ளது. உலக வங்கியின் நிதியுதவியுடன் குறித்த கருத்திட்டத்திற்குரிய முறைசார்ந்த திட்டமொன்று 2018 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த திட்டத்திற்கமைய மூன்று கட்டங்களின் (03) கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள இக்கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு 15 மில்லியன் அமெரிக்க டொலர்களாவதுடன், உலக வங்கி மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் குறித்த நிதியைப் பெற்றுக்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள தேசிய தனி முகப்பிடம் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. 2021ஆம் ஆண்டுக்கான நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் ஆண்டறிக்கையை (இறுதி வரவு-செலவு நிலைமை தொடர்பான அறிக்கை) நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

2003ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் ஆண்டறிக்கை (இறுதி வரவு-செலவு நிலைமை தொடர்பான அறிக்கை) குறித்த நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 05 மாதங்களுக்கு முன்னர் வெளியிடப்படல் வேண்டும். அதற்கமைய, 2021ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை குறித்த அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப் பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆழமற்ற கடற்பகுதியில் ஏற்றுமதியை இலக்காகக்கொண்டு கடலட்டை உற்பத்திக் கிராமங்களை உருவாக்கல்**

இயற்கைக் கடல்சார் சூழலில் பிடிக்கப்படும் கடலட்டைகளின் ஏற்றுமதியால் குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டு செலாவணியை ஈட்டிக்கொள்ள முடியும். அதற்கமைய, பெற்றுக்கொண்ட அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு கடலட்டை இனப்பெருக்க நிலையத்தை நிறுவுதல், கடலட்டைப் பண்ணைகளை விரிவாக்கம் செய்தல், வணிக ரீதியான உயிரின வளர்ப்பு போன்ற கடலட்டை ஏற்றுமதிக் கிராமங்களை உருவாக்குவதன் மூலம் வெளிநாட்டு செலாவணி ஈட்டுவதை அதிகரித்தல் மற்றும் மீனவர் சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு வணிக ரீதியான கடலட்டை உயிரின வளர்ப்பு கருத்திட்டமொன்று இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் (NAQDA) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டத்திற்காக யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் 5000 ஏக்கர் காணிகளை அடையாளங்கண்டு, அவற்றில் 100 ஏக்கர்களுடன் கூடிய கடலட்டை உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கிராமங்களை உருவாக்குவதற்கும் மற்றும் 100 ஏக்கர் காணியில் 01 ஏக்கர் வீதம் கடலட்டை உற்பத்திப் பண்ணைகளைத் தாபித்து குறித்த கருத்திட்டத்தை மேலும் விரிவாக்கம் செய்வதற்காகவும் கடற்றொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. புகையிரதத் திணைக்களத்திற்கு சொந்தமான பாதுகாக்கப்பட்ட காணிகளை விவசாய நடவடிக்கைகளுக்காக தற்காலிக அடிப்படையில் வழங்கல்**

இலங்கைப் புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான பாதுகாக்கப்பட்ட காணிகள் மொத்தமாக 14,000 ஏக்கர்கள் காணப்படுவதுடன், அவற்றில் 10 வீதமான காணிகள் பல்வேறு பணிகளுக்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய பாதுகாக்கப்பட்ட காணிகளில் புகையிரதத் திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக துரிதமாகப் பெறவேண்டிய தேவையற்றதும் மற்றும் புகையிரதப் பாதை மற்றும் புகையிரத நிலையங்களுக்கு அருகாமையிலுள்ள பாதுகாக்கப்பட்ட காணிகளாக ஒதுக்கப்பட்டுள்ளதும், பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமானதுமான காணிகளை விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்காக தற்காலிக குத்தகை அடிப்படையில் வழங்குவது உகந்ததென அடையாளங்காணப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த பிரதேசங்களில் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு, புகையிரதப் பாதைக்கு அருகாமையில் வசிக்கின்றவர்களுக்கு மற்றும் குறைந்த வருமானங்கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு குறித்த காணிகளை விவசாயப் பயன்பாட்டுக்காக குத்தகை அடிப்படையில் (01) ஒரு வருடகாலத்திற்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. முத்துராஜவெலவில் அமைந்துள்ள 10 ஏக்கர் காணித்துண்டை மின்சார சபைக்கு ஒப்படைத்தல்**

முத்துராஜவெலவில் அமைந்துள்ள யுகதனவி மின்னுற்பத்தி நிலையத்திற்கு அருகாமையிலுள்ள 10 ஏக்கர் காணித்துண்டில் 300 மெகாவோட் எல்.என்.ஜி. மின்னுற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக இலங்கை மின்சார சபைக்கு வழங்குவதற்காக இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், குறித்த காணித்துண்டைக் கொள்வனவு செய்வதற்காக மின்சார சபையின் பணிப்பாளர் சபையின் அனுமதி கிடைத்துள்ளது. அதற்கமைய, அரச விலை மதிப்பீட்டாளரால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள குறித்த காணித்துண்டின் சந்தைப் பெறுமதியை அறவிட்டு, அதனை இலங்கை மின்சார சபைக்கு வழங்குவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. தேசிய சுற்றாடல் கொள்கையை அங்கீகரித்தல்**

2003ஆம் ஆண்டு அப்போதைய சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சால் வெளியிடப் பட்டுள்ள தேசிய சுற்றாடல் கொள்கைகள் மற்றும் மூலோபாயங்கள் பிரகடனம் தற்போது இலங்கையில் சுற்றாடல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வழிகாட்டுகின்ற பிரதான கொள்கைப் பிரகடனமாகும். கடந்த காலப்பகுதியில் தேசிய மற்றும் உலகளாவிய ரீதியில் சுற்றாடலுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்துகின்ற குறிப்பிடத்தக்க மாற்றங்கள் பல இடம்பெற்றுள்ளன. அதேபோல் சுற்றாடல் மாற்றங்களால் ஏற்பட்டுள்ள பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியான காரணிகளும், சுற்றாடல் விடயதானம் பற்றிய விஞ்ஞான ரீதியான அறிவும் குறிப்பிடத்தக்களவு மாற்றமடைந்துள்ளது. குறித்த நிலைமைகளைக் கருத்திற்கொண்டு சுற்றாடல் விடயதானம் பற்றிய நிபுணர்கள், பங்காளர்கள் மற்றும் பொதுமக்கள் கருத்துகளையும் பெற்றுக்கொண்டு 2003ஆம் வெளியிடப்பட்டுள்ள தேசிய சுற்றாடல் கொள்கை மற்றும் மூலோபாயங்கள், சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் இற்றைப்படுத்துவதற்கு சுற்றாடல் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதற்கமைய, தயாரிக்கப்பட்டுள்ள தேசிய சுற்றாடல் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. வீட்டு மற்றும் வீட்டுப் பணிகள் சார்ந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபடும் இலங்கைப் பெண்களின் குறைந்தபட்ச வயதெல்லையை திருத்தம் செய்தல்**

இலங்கைப் பெண்களுக்கு வீட்டு மற்றும் வீட்டுப் பணிகள் சார்ந்த வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் ஈடுபடுவதற்காக தற்போது காணப்படும் குறைந்தபட்ச வயதெல்லை சவூதி அரேபியாவுக்கு 25உம், ஏனைய மத்திய கிழக்கு நாடுகளுக்கு 23உம் மற்றும் ஏனைய நாடுகளுக்கு 21உம் ஆகவுள்ளது. தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளைக் கருத்திற்கொண்டு குறித்த வயதெல்லையைத் திருத்தம் செய்தல் தொடர்பாக விடயங்களை ஆராய்ந்து அமைச்சரவைக்குப் பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரின் தலைமையில் அமைச்சரவை உப குழுவொன்றை நியமிப்பதற்கு 2022 ஜூன் மாதம் 06ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த உபகுழுவால் சமர்ப்பிக்கப்படும் பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு இலங்கைப் பெண்கள் வீட்டு மற்றும் வீட்டுப் பணிகள் சார்ந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபடுத்தும் குறைந்தபட்ச வயதை 21ஆகதிருத்தம் செய்வதற்கு அங்கீகாரம் வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

**08. தேசிய சேமிப்பு வங்கிக்கான பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்கான பெறுகைக் கோரல்**

தேசிய சேமிப்பு வங்கியின் தலைமைக் காரியாலயம் மற்றும் நாடளாவிய ரீதியில் காணப்படும் அதன் கிளைகளுக்குப் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக தேசிய போட்டி விலைமுறிப் பொறிமுறையைப் பின்பற்றி விலைமனுக் கோரப்பட்டுள்ளது. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய ஒவ்வொரு பிரிவுக்கமைய தகைமை பெற்ற பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கு குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு புதிய அணுக்கக் கண்காணிப்பு முறைமையை நிறுவுதல்**

இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற அணுக்கக் கண்காணிப்பு முறைமை (Surveillance System) 2008ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் குறித்த முறைமையை நவீனமயப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. உலக வங்கியின் நிதியத்தின் கீழ் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற நிதிப் பிரிவின் நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தின் மூலம் அதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமை உள்ளது. அதற்கமைய, தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் அணுக்கக் கண்காணிப்பு முறைமையைப் பொருத்திய லண்டன் பங்குப் பரிவர்த்தனைக் குழுவின் உறுப்பினரான இலங்கையில் அமைந்துள்ள Millennium IT Software (Pvt) Ltd.இற்கு நேரடிப் பெறுகைக் கோரலாக பிரேரிப்பொன்றை பெற்று குறித்த அணுக்கக் கண்காணிப்பு முறைமையை நவீனமயப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. அநுராதபுரம் அஞ்சல் அலுவலக வளாகத்தில் கலப்பு அபிவிருத்தி வீடமைப்புக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை மூலம் அநுராதபுரம் அஞ்சல் அலுவலகத்தில் அமைந்துள்ள 99 ஏக்கர் காணியில் கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. காணியின் சமகாலப் பெறுமதிக்கு சமமான வகையில் அஞ்சல் அலுவலக வளாகத்தை அஞ்சல் திணைக்களத்திற்கு வழங்கும் உடன்பாட்டுடன், குறித்த காணியை விடுவிப்பதற்கு அத்திணைக்களம் உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அக்காணியை அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6(1) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய விடுவிப்பு வழங்கலாக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்குவதற்கும், தேசிய அல்லது சர்வதேச போட்டி விலைமுறிப் பொறிமுறையைப் பயன்படுத்தி விருப்பக் கோரல்களைப் பெற்று பொருத்தமான முதலீட்டாளர்களைத் தெரிவு செய்து அரச-தனியார் பங்குடைமைக் கருத்திட்டமாக இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. 22ஆவது அரசியலமைப்புத் திருத்தம்**

20ஆவது அரசியலமைப்புத்திருத்தத்தின் மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பற்றித் தற்போது நாட்டில் பெரும் சர்ச்சைக்குரிய நிலைமைகள் தோன்றியுள்ளமையால், 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் காணப்படுகின்ற நன்மை பயக்கும் பிரிவுகளை மீண்டும் அறிமுகப்படுத்துமாறு கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்நிலைமையின் கீழ் தற்போது முகங்கொடுக்க நேர்ந்துள்ள நெருக்கடி நிலைமைகளைக் கருத்திற்கொண்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்திற்கும் இடையில் அதிகார சமநிலையை ஏற்படுத்தும் வகையில் நாடாளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் கூட்டாகப் பொறுப்புக்கூறும் அமைச்சரவைக்கும் மற்றும் அரசியலமைப்புப் பேரவைக்கும் ஒருசில அதிகாரங்களை ஒப்படைக்கும் வகையிலும் அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்வது பொருத்தமானதென அடையாளங்காணப்பட்டுள்ளது. அதற்கமைய, நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள அடிப்படைச் சட்டமூலத்திற்கு அமைச்சரவை கொள்கை ரீதியான அங்கீகாரத்தை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.



# கோஹ்லியும், பாபரும் ஒரே அணியில்?

ஆப்ரோ - ஆசியக் கிண்ண கிரிக்கெட்டை மீண்டும் நடத்த முடிவெடுக்கப்படலாம் என்று தெரிகிறது. அப்படி நடந்தால் இந்தியாவின் சிறந்த வீரர்களும், பாகிஸ்தானின் சிறந்த வீரர்களும் ஒரே அணியில் ஆடுவார்கள். அப்படி ஆப்ரோ - ஆசியக் கிண்ணம் புத்துயிர் பெற்றால் விராட் கோஹ்லி, ரோஹித் சர்மா, பும்ரா, ஷமியுடன், பாபர் அசாம், ரிஸ்வான், ஷாஹின் அப்ஃரீடி ஆகியோர் ஒரே ஓய்வறையைப் பகிர்ந்துகொள்வார்கள்.

2023இல் ஆப்ரோ - ஆசியக் கிண்ண கிரிக்கெட் நடக்கலாம் என்று தெரிகிறது. 2005இல் ஆப்ரோ ஆசியக் கிண்ணம் நடைபெற்றது. முதல் முறை 3 ஒருநாள் போட்டி, பிறகு 2007இல் நடந்த ஆப்ரோ ஆசியக் கிண்ணப் போட்டியில் ஒரு ரி20யும் சேர்க்கப்பட்டது.

2005 தொடரில் சேவாக், ஷாஹித் அஃப்ரீடி ஒப்பனிங் இறங்கியதும் பந்துவீச்சில் ஷோயப் அக்தர் ஒரு முனையிலும் சகீர் கான் இன்னொரு முனையிலும் வீசியது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. 3 ஒருநாள் போட்டிகள்கொண்ட தொடர் சமனானது, சகீர் கான் 3 போட்டிகளிலும் அற்புதமாக வீசினார். 2005இல் இன்சமாம் ஆசிய லெவனுக்கு கெப்டனாக இருந்தார். ஆபிரிக்க அணிக்கு ஷான் போலாக் கெப்டனாக இருந்தார்.

2007இல் மஹேல ஜெயவர்தன ஆசிய லெவனுக்கும், ஜஸ்டின் கெம்ப் ஆபிரிக்க லெவனுக்கும் கெப்டனாக இருந்தனர். 2007இல் தொடரை ஆசிய லெவன் 3-0 என்று கைப்பற்றியது. இந்நிலையில், ஆப்ரோ-ஆசியக் கிண்ணம் மீண்டும் புத்துயிர் பெற்றால் ஸ்டார்கள் மீண்டும் ஒன்றிணையும் வாய்ப்புள்ளது. அப்படி நடந்தால் ஆசிய லெவனுக்குக் கெப்டன் பாபர் அசாமா, விராட் கோஹ்லியா அல்லது ரோஹித் சர்மாவா?

# 'கடந்த எட்டு மாதங்களில் ஆறு தலைவர்கள்' - பயிற்சியாளர் அனுபவம் தொடர்பில் டிராவிட் கருத்து



விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

2021ஆம் ஆண்டு ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத்தின் பின்னர் ராகுல் டிராவிட் இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக பொறுப்பேற்றார். ராகுல் டிராவிட் தலைமையின் கீழ் இந்திய அணி நியூசிலாந்து, இலங்கை மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக தொடரை வென்றது. அதேநேரத்தில் அண்மையில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ரி20 தொடரை 2-2 என சமன் செய்தது.

இந்நிலையில் இந்திய அணியின் பயிற்சியாளராக இருந்த அனுபவம் தொடர்பில் ராகுல் டிராவிட் தெரிவிக்கையில்,


"இது மிகவும் உற்சாகமாகம் மற்றும் நல்ல வேடிக்கையாக இருந்தது. இந்தப் பயணம் சவாலானது. நான் பணியாற்றிய கடந்த 8 மாதங்களில் ஆறு தலைவர்கள் உருவாகியுள்ளனர். கொரோனா தொற்று பல போட்டிகளுக்குத் தடையாக இருந்தது. அணியை நிர்வகிப்பது, வீரர்களின் பணிச்சுமையை நிர்வகித்தல் மற்றும் தலைமையில் சில மாற்றங்கள் ஆகியவை உங்களுக்குத் தெரியும், எனவே, நான் சிலருடன் பணியாற்றவேண்டியிருந்தது. எனக்கு அடுத்தகட்ட தலைவர்களை உருவாக்கும் பொறுப்பும், வாய்ப்பும் கிடைத்துள்ளன.

ஒரு அணியாக நாங்கள் தொடர்ந்து கற்றுக் கொண்டிருக்கிறோம். மேலும் கடந்த 8-10 மாதங்களில் அதிகமான புதிய வீரர்களை உருவாக்கும் முயற்சியை செய்வதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளோம், இது சிறப்பாக இருந்தது என்று நான் நினைக்கிறேன். கடந்த 8 மாதங்களை நான் திரும்பிப் பார்த்தால், தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரைப் பொறுத்தவரையில் ஏமாற்றத்தையே அளித்தது" என்று தெரிவித்தார்.

## பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில்

# திருகோணமலையில் பெட்மிண்டன் போட்டி







(அஷ்ரப் ஏ சமத்)

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம், திருகோணமலை மாவட்ட பெட்மிண்டன் சங்கத்துடன் இணைந்து கடந்த சனி, ஞாயிறு தினங்களில் திருகோணமலை ஹெய்சர் விளையாட்டரங்கில் பெட்மிண்டன் போட்டியொன்றை ஏற்பாடு செய்திருந்தது. போட்டியில் பல்வேறு வயதிற்குட்பட்ட மாணவர்கள் தங்களுடைய தனிப்பட்ட திறமைகளை வெளிக்கொண்டுவர இப்போட்டி சிறந்த வாய்ப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும், இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கும் பரிசில்களை வழங்கினார்.

# புதிய சாதனையில் இணைந்த புவனேஷ்வர்




இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடியது. இதில் முதல் இரு ஆட்டங்களில் தென்னாபிரிக்காவும், அடுத்த இரு ஆட்டங்களில் இந்தியாவும் வெற்றிபெற்றதால் தொடர் 2-2 என்ற கணக்கில் சமநிலையை அடைந்தது.

5ஆவது மற்றும் கடைசி போட்டி பெங்களூரிலுள்ள சின்னசாமி ஸ்டேடியத்தில் நடைபெறவிருந்த நிலையில் மழை காரணமாக கைவிடப்பட்டது. இதனால் கிண்ணம் இரு அணிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்தத் தொடரின் நாயகனாக இந்தியாவின் புவனேஷ்வர் குமார் தேர்ந்தெடுக்கப்பட்டார். சர்வதேச கிரிக்கெட்டில் புவனேஷ்வர் குமார் பெறும் 4ஆவது தொடர் நாயகன் விருது இதுவாகும்.

இதன்மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் அதிக தொடர் நாயகன் விருதை வென்ற இந்திய வேகப்பந்துவீச்சாளர் என்ற சாதனையை புவனேஷ்வர் குமார் படைத்துள்ளார். இதற்கு முன் வேகப்பந்துவீச்சாளரான சஹீர் கான் மற்றும் இஷாந்த் சர்மா ஆகிய இருவரும் தலா 3 தொடர் நாயகன் விருதுகளை வென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கன்னி ஒருநாள் சதம் விளாசிய அசலங்க



சுற்றுலா அவுஸ்திரேலிய அணியுடனான நான்காவது ஒருநாள் சர்வதேச போட்டியில் இலங்கை அணியின் இளம் துடுப்பாட்ட வீரர் சரித் அசலங்க தனது கன்னி ஒருநாள் சர்வதேச சதத்தை பதிவுசெய்தார்.

அவுஸ்திரேலிய அணிக்கும், இலங்கை அணிக்கும் இடையிலான 2ஆவது தொடரான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் 4ஆவது போட்டி நேற்று கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்றது. முதல் மூன்று போட்டிகள் நிறைவில் இலங்கை அணி 2-1 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்த நிலையில், கட்டாய வெற்றியை நோக்கி அவுஸ்திரேலிய அணி களமிறங்கியது. இரு அணிகளிலும் தலா ஒரு மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டன. இலங்கை அணியில் துஸ்மந்த சமீரவுக்கு பதிலாக வனிந்து ஹசரங்க அழைக்கப்பட்டார்.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்ய, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. எனினும், தனஞ்ஜய டி சில்வா – சரித் அசலங்க ஆகியோரின் 101 ஓட்ட இணைப்பாட்டம் மூலம் இலங்கை அணி புத்துயிர் பெற்றது.

60 ஓட்டங்களுடன் தனஞ்ஜய டி சில்வா ஆட்டமிழந்தாலும், இறுதிவரை போராடிய சரித் அசலங்கவின் கன்னி சதத்தின் உதவியுடன் 49 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 258 ஓட்டங்களை குவித்தது.




# இந்திய அணிக்கு பெரும் பின்னடைவு!

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பங்கேற்க இங்கிலாந்து புறப்பட முன்னர் இந்திய கிரிக்கெட் வீரர் அஸ்வினுக்கு கொரோனா தொற்று உறுதியானது.

இங்கிலாந்துக்கு எதிரான 5 போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரில் 4 போட்டிகள் மட்டுமே நடைபெற்ற நிலையில், ஒரு போட்டி ஒத்திவைக்கப்பட்டது. இந்திய அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்ற இந்தத் தொடரில், ஒத்திவைக்கப்பட்ட அந்த 5ஆவது டெஸ்ட் போட்டி ஜூலை 1ஆம் திகதி இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது.

ரோஹிட் ஷர்மா தலைமையிலான இந்திய அணியில் பயிற்சியாளர்கள், வீரர்களைக்கொண்ட முதல் குழு ஜூன் 16 அன்று இங்கிலாந்து சென்றுவிட்டது. தென்னாபிரிக்காவுடனான ரி20 தொடரில் பங்கேற்றிருந்த ரிஷப் பண்ட், ஷ்ரேயாஸ் அய்யர் அடங்கிய 2ஆவது குழு தொடரை முடித்துவிட்டு ஜூன் 19 அன்று இங்கிலாந்து கிளம்பியது.

இந்நிலையில், விமானம் ஏறுவதற்கு முன் எடுக்கப்பட்ட கொரோனா பரிசோதனையில் இந்திய வீரர் அஸ்வினுக்கு கொரோனா தொற்று உறுதியானதையடுத்து, அவர் இங்கிலாந்துக்கு செல்லவில்லை. தனிமைப்படுத்திக்கொண்டு சிகிச்சை பெற்றுவரும் அவர், ஜூன் 24 அன்று லீசெஸ்டர்ஷைர் அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் பங்கேற்க மாட்டார்.

பூரண குணமடைந்த பின், தேவையான அனைத்து நெறிமுறைகளையும் பின்பற்றி அஸ்வின் இங்கிலாந்து புறப்படுவார் என்று பி.சி.சி.ஐ. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் இங்கிலாந்து டெஸ்ட் போட்டியில் அஸ்வின் பங்கேற்பாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.



# இந்தியாவை எதிர்த்தாடும் இலங்கை மகளிர் குழாம் வெளியானது



சுற்றுலா இந்திய மகளிர் கிரிக்கெட் அணிக்கும், இலங்கை மகளிர் கிரிக்கெட் அணிக்கும் இடையில் நடைபெறவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட தொடருக்காக இலங்கையின் 19 பேர் அடங்கிய மகளிர் கிரிக்கெட் குழாம் அறிவிக்கப்பட்டது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் இந்திய மகளிர் கிரிக்கெட் அணி 3 போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர் மற்றும் 3 போட்டிகள்கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரில் பங்கேற்கிறது.

முதல் தொடரான இருபதுக்கு 20 சர்வதேச தொடர் நாளை ஆரம்பமாகும் நிலையில், இதில் பங்கெடுக்கும் இலங்கை மகளிர் கிரிக்கெட் குழாம் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் பாகிஸ்தான் சுற்றுத்தொடரில் ஆடியிருந்த வீராங்கனைகளுடன், தற்போது இந்திய அணிக்கு எதிரான தொடர்களுக்காக ஆறு வீராங்கனைகள் மேலதிகமாக இணைக்கப்பட்டிருக்கின்றனர்.

**இலங்கை குழாம்**

சமரி அத்தபத்து (தலைவி), ஹாசினி பெரேரா, கவிஷா டில்ஹாரி, நிலக்ஷி டி சில்வா, அனுஷா சஞ்சீவனி, ஓசதி ரணசிங்க, சுகந்திகா குமாரி, இனோக்கா ரணவீர, ஆச்சினி குலசூரிய, ஹர்சித சமரவிக்ரம, விஷ்மி குணரட்ன, மல்ஷா செஹானி, அமா காஞ்சனா, உதேசிகா ப்ராபோதினி, ரஷ்மி டி சில்வா, ஹன்சிமா கருணாரட்ன, கௌசானி நுத்யான்கனா, சத்யா சந்தீப்பனி, தாரிகா செவ்வந்தி.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7